## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 24, பிரமோதூத— திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, மே 7, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில், காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை .”

எக்காலத்திலும் தன்னை மிக உயர்வாக எண்ணி, வியந்து மதிக்கக்கூடாது. நன்மை தராத செயலை, தாம் விரும்பவும் கூடாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

## உடுக்குறியிட்ட வினாக்கள்.

### விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டுதல்.

0 2005.—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சாதியினரும் ஒரு ரூபாய் விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலே சாதிச்சான்று, பிற அனைத்துச் சான்றுகளும் வாங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சாதியினரும், விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலேயே சாதிச் சான்றும், இருப்பிடச் சான்றும் வாங்குவதற்கு அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் பிற அனைத்துச் சான்றுகளுக்கும் இச்சலுகை கிடையாது.

### 1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டம்.

7741. திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டத்தின் பலன் இன்றும் ஏழைகளுக்குப் பயனளிக்காமல் உள்ளதற்கான காரணங்களைப் பரிசீலிக்க அரசுக்கு வேண்டுகோள் வரப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என் ?

உடுக்குறியிட்ட வினாக்கள்.

விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டுதல்.

0 2005.—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சாதியினரும் ஒரு ரூபாய் விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலே சாதிச்சான்று, பிற அனைத்துச் சான்றுகளும் வாங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சாதியினரும், விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலேயே சாதிச் சான்றும், இருப்பிடச் சான்றும் வாங்குவதற்கு அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் பிற அனைத்துச் சான்றுகளுக்கும் இச்சலுகை கிடையாது.

1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டம்.

7741. திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டத்தின் பலன் இன்றும் ஏழைகளுக்குப் பயனளிக்காமல் உள்ளதற்கான காரணங்களைப் பரிசீலிக்க அரசுக்கு வேண்டுகோள் வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என் ?



சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசுக்குத் இது சம்பந்தமாக வந்த முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம் (உடைமை உரிமை அளித்தல்) 1971, (தமிழ்நாடு சட்டம் 40!71)-ன் படி 19—6—1971 அன்று குத்தகை தாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்த உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் ஒருவர் இச்சட்டம் செயலுக்கு வந்த நாளிலிருந்து உரிமையாளராக இருப்பார். மேலும் இச்சலுகையை நீட்டித்து சட்டத்திருத்த முன் வடிவு கொண்டு வருவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு உரிமை வழங்கல் சட்டத்தின் கீழ், உரிய பாதுகாப்பு விள்க்க சட்டத் திருத்தம் கொண்டு வர இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிக் கொண்டு வரும்போது, முன்னால் உள்ள சட்டத்தில், கோயில் நிலங்களிலே அல்லது மற்ற அறக்கட்டளை நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு அது பொருந்தாது என்று இருக்கிறது. அரசுக்குச் சொந்தமான அல்லது தனியாருக்குச் சொந்தமான இடங்களிலே இருப்பவர்களுக்கு மட்டும்தான், அந்தச் சட்டப்படி பயன்பெற முடியும் என்ற நிலை இருக்கிறது— எனவே, குடியிருக்க மனை இல்லாமல், எந்த இடத்திலே அவர்கள் இருந்தாலும், அவர்கள் அனைவருக்கும் அது பொருந்தக்கூடிய முறையிலே ஒரு சட்டத் திருத்தத்தை அரசு கொண்டுவர முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக, சட்ட மன்ற உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்களிடமிருந்து வேண்டுகோள் வந்துள்ளது. இந்தக் கருத்து அரசால் பரிசீலிக்கப்பட்டு, சட்டத்தின் கீழ் மேலும் சலுகை நீட்டித்து, 30—6—1955 அன்று குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள நபர்களுக்கு உடைமை உரிமை வழங்க ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வரவும் அரசு உத்தேசித்திருக்கிறது. இச்சலுகை நீட்டிப்பு, தமிழ்நாடு கிராம கைவினைஞர்கள் குடியிருப்பு அனுபோக

1990 மே, 7]

உரிமை வழங்கல் சட்டம் 1976-க்கும் கொண்டு வர, அரசு உத்தேசித்துள்ளது. திரு. வீரையன் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது பதில் இல்லை. தனிக் கேள்வி போட, கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே, களம் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு, குளம் புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு போன்ற இடங்களில் பல ஏழை விவசாயிகள் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் கிராமத்திலே உள்ளவர்கள் ஆட்சேபணை இல்லை என்று முறையீடு செய்வார்களேயானால், அந்த இடங்களை ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவதற்கும், அப்படிப்பட்ட இடங்களைக் குடியிருப்பு நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, புதிதாக வரவிருக்கிற சட்டத்தில் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**போகுவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமுகப் பாதுகாப்புத் திட்டம்.**

6414.—. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) (1) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பணியிலிருக்கும் பொழுது இறக்க நேரிடும் தொழிலாளரின் குடும்பத்தாரும், ஓய்வுபெறும் தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள்.

1990 மே, 7]

உரிமை வழங்கல் சட்டம் 1976-க்கும் கொண்டு வர, அரசு உத்தேசித்துள்ளது. திரு. வீரையன் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது பதில் இல்லை. தனிக் கேள்வி போட, கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே, களம் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு, குளம் புறம் போக்கு, தோப்புப் புறம்போக்கு போன்ற இடங்களில் பல ஏழை விவசாயிகள் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் கிராமத்திலே உள்ளவர்கள் ஆட்சேபணை இல்லை என்று முறையீடு செய்வார்களேயானால், அந்த இடங்களை ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவதற்கும், அப்படிப்பட்ட இடங்களைக் குடியிருப்பு நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, புதிதாக வரவிருக்கிற சட்டத்தில் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**போகுவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டம்.**

6414.—. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) (1) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பணியிலிருக்கும் பொழுது இறக்க நேரிடும் தொழிலாளரின் குடும்பத்தாரும், ஒய்வுபெறும் தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள்.

(2) அனைத்துத் தொழிலாளர்களிடமிருந்தும், அந்தந்த மாதத்தில் இறக்கும் அல்லது ஓய்வு பெறும் ஒவவொரு தொழிலாளருகாகவும், அவர்களது அந்த மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது.

(3) சமூக பாதுகாப்புத் திட்ட உதவித் தொகையை சம்பந்தப்பட்ட இறந்த தொழிலாளர்களின் சட்ட பூர்வ வாரிசுதாரர்களுக்கும் அல்லது ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அலுவலரால் தொழிற்சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் வழங்கப்படுகிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் தொழிலாளிகளுக்குச் சமூக நலத் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தச் சமூக நலத் திட்டங்கள் என்னென்ன என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், பணியில் இருக்கும்போது ஒரு தொழிலாளி இறந்து விட்டால், உதாரணமாக, பல்லவன் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், பணியில் இருக்கும் போது, ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், ஒவ்வொரு தொழிலாளியினுடைய சம்பளத்திலேயும் இரண்டு ரூபாய் பிடித்தம் செய்து, சுமார் 9,000 தொழிலாளர்கள் அதிலே பணியாற்றுகிறார்கள். 18,000 ரூபாய் அந்தக் குடும்பத்திற்குப் போய்ச் சேர்கிறது. அதேபோல் ஒவ்வொரு கார்ப்பரேஷனிலும் எந்த அளவு தொழிலாளருடைய எண்ணிக்கை இருக்கிறதோ அதைப்பொறுத்த அளவு தொகை நிர்ணயம் செய்து, பிடித்தம் செய்து, சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடைய குடும்பத்திற்கு நிதியாகப் போய்ச் சேர்கின்றது. அதேபோல், ஓய்வு பெற்ற தொழிலாளியாக இருப்பரேனால் பல்லவன் கார்ப்பரேஷனைப் . பொறுத்த வரையில், ஒரு ரூபாய் பிடித்தம் .செய்து, ஓய்வு பெற்ற தொழிலாளிக்கு வழங்கப்படுகிறது. ஓய்வு பெற்றதற்குப் பிறகு ஒரு கணிசமான தொகை அந்தக் குடும்பத்தாருக்கோ அல்லது ஓய்வு பெற்ற தொழிலாளிக்கோ கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையிலே தான் இந்தத் திட்டம் கடந்த ஆண்டு 29—5—19 9-ஆம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு சமூக நலப் பாதுகாப்பு என்று,

1990 மே, 7]

சொன்னார்கள். அந்தப் பாதுகாப்பின் அடிப்படையில், தொழிலாளர்களுடைய குடும்பத்தாரிலே, இறந்து விட்டால்: அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறதா ? அப்படி அளிப்பது எவ்வளவு நாட்களுக்குள்ளாக அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தொழிலாளி பணியிலே இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு, அவர்களுடைய கல்வித் தகுதி அல்லது தொழில் பழகியிருக்கிற தன்மையினுடைய அடிப்படையில் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களில் வேலைவாய்ப்புகள் உருவாகும்போது முன்னுரிமை கொடுத்து அளிக்கப்படுகின்றன. எவ்வளவு நாள் என்று உறுதியிட்டுச் சொல்லமுடியாது. ஏனென்றால், வேலை வாய்ப்புகள் உருவாகும்போதுதான் அவர்களுக்கு நாம் வேலைவாய்ப்பை அளிக்கமுடியும்.

திரு எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் பணி புரிகின்ற தொழிலாளர்கள் பெரும்பாலும் விபத்தினால் பாதிக்கப்படுகின்றார்கள். அப்படி அவர்கள் இறக்கும்போது, அரசாங்கம் அந்தக் குடும்பத்தாருக்குக் கொடுக்கின்ற நிவாரணம் எவ்வளவு ? அதைக் கொஞ்சம் அதிகரிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பணியிலே இருக்கும்போது, எதிர்பாராமல் விபத்திற்காட்பட்டோ அல்லது இயற்கையாகவோ மரணம் அடைந்து விட்டால், ஏற்கெனவே அவர்களுடைய குடும்பத்தாருக்கு 20,000 ரூபாய் என்று வழங்கப்பட்டுக் கொண்டு வந்தது. கடந்த வாரம்தான் நம்முடைய போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, அந்த 20,000 ரூபாய் 40,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

9-10 மணி.

திரு. உ.ரா. வரதராசன் ன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிக்காலத்திலே இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுகளுக்கு, போக்குவரத்துக் கழகங்களிலே வேலை வாய்ப்பு உருவாகும்போது, வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தனையும், அரசினுடைய நிர்வாகத்திலே இருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு வேலைவாய்ப்பு ஒரு கழகத்திலே உருவாகாத நிலைமை இருந்தால், பணிக்காலத்திலே இறந்த

வர்களின் வாரிசுகளுக்கு மற்றக் கழகங்களில் வேலைவாய்ப்பு இருந்து, அவர்களுக்கு அந்தக கழகங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் தனித்தனி நிர்வாக அமைப்புக்களைக் கொண்டது. ஆகவே, ஒரு போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றும்போது இறந்து விட்ட தொழிலாளியின் வாரிசுக்கு, இன்னொரு போக்கு வரத்துக் கழகத்திலே வேலைவாய்ப்பு அளிப்பது என்பது இயலாத காரியம்.

ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியங்களைப் பிரித்தல்.

2181—திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரிய ஒன்றியங்களான ஒட்டன்சத்திரம் மட்டும் தொப்பம்பட்டியை மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களும் 75 ஊராட்சி மன்றங்களைக் கொண்டது. அவற்றை மூன்றாகப் பிரித்துக் கொடுக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தனலவர் : மூலக் கேள்வியே அதுதான். எனவே, துணைக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுபோன்ற பெரிய ஒன்றியங்களையெல்

வர்களின் வாரிசுகளுக்கு மற்றக் கழகங்களில் வேலைவாய்ப்பு இருந்து, அவர்களுக்கு அந்தக கழகங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் தனித்தனி நிர்வாக அமைப்புக்களைக் கொண்டது. ஆகவே, ஒரு போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றும்போது இறந்து விட்ட தொழிலாளியின் வாரிசுக்கு, இன்னொரு போக்கு வரத்துக் கழகத்திலே வேலைவாய்ப்பு அளிப்பது என்பது இயலாத காரியம்.

ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியங்களைப் பிரித்தல்.

2181—திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரிய ஒன்றியங்களான ஒட்டன்சத்திரம் மட்டும் தொப்பம்பட்டியை மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களும் 75 ஊராட்சி மன்றங்களைக் கொண்டது. அவற்றை மூன்றாகப் பிரித்துக் கொடுக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தனலவர் : மூலக் கேள்வியே அதுதான். எனவே, துணைக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுபோன்ற பெரிய ஒன்றியங்களையெல்

லாம் பிரிக்க வேண்டுமென்ற முறையீடு அரசுக்கு வந்துள்ளதா? அப்படியென்றால், எத்தனை ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டும் என்று வந்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில ஒன்றியங்களிலிருந்து அப்படி முறையீடுகள் வந்துள்ளன. எத்தனை என்பதற்கான விவரங்கள் என்னிடம் இல்லை. அதற்குப் பிரத்தியேகமான கேள்வி போட வேண்டும். இருந்தாலும், அவை அத்தனையும் அரைகுறையாக இருந்த காரணத்தினால், 1991-ஆம் ஆண்டுவரை, எதையும் பிரிக்கக் கூடாது ; சேர்க்கக் கூடாது என்று ஒரு தடை ஆணை இருக்கிற காரணத்தினால் அதுபற்றித் தற்போது பரிசீலிப்பதற்கு இல்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய இவை பழனி தாலூக்காவில் அடங்கியவை. இந்த இரண்டு ஒன்றியங்களும் மிகப் பெரியவை. அதனால், உண்மையிலேயே நிர்வாக வேலைகளுக்கு மிகவும் பாதகமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. என்வே, இந்த ஆண்டு தேர்தல் வேறு நடக்கிற காரணத்தினால், தேர்தலுக்கு முன்பாக அந்த ஒன்றியங்களைச் சம அளவு பிரித்துக் கொடுத்தால், நிர்வாகம் நடப்பதற்கும், நாங்களும், ஒன்றியத் தலைவர்களும் அங்கே சென்று செயல்படுவதற்கும் வசதியாக இருக்கும். அதைச் சம அளவு பிரிப்பதற்கு மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இதுவும் மூலக் கேள்விதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துனை கேள்வியை, புதிதாகச் செய்தி வருகிற மாதிரிக்கேட்க வேண்டும். கேட்டதையே திருப்பிக் கேட்பது என்பது, கேள்வியைக் கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்பதாக உள்ளது. (குறுக்கீடு) அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். மூலக் கேள்வி கேட்டு, அதற்கு அமைச்சர் விடை சொல்லி விட்டால், அதே கேள்வியைக் கேட்காமல், புதிய கேள்வியைக் கேட்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள ஊராட்சி ஒன்றியங்கள்— இதுபோல பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமல்லாமல், ஊராட்சி மன்றங்கள் கூட, நான்காயிரம் வாக்குகள், ஐந்தாயிரம் வாக்குகள் உள்ள அளவுக்கு இருக்கின்றன. அந்தயும் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

ாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, பஞ்சாயத்து பேரூராட்சி, மற்றும் நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்துக்கும் பொருந்தும்.

நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவின் அதிகார வரம்பை உயர்த்துதல்.

0 3822—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது அமுலில் உள்ள நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவுக்குள்ள அதிகார வரம்பை உயர்த்த வேண்டுமென அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவென்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நகராட்சி மற்றும் நகரியங்களில் வரி மேல் முறையீட்டுக் குழுவிற்கு செய்யப்படும் மனுக்கள் மீது, உயர்த்தப்பட்ட வரியில் 5 விழுக்காட்டுக்குக் கூடுதலாக வரி குறைப்பு செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்கி தற்போது அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. ஒங். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில், டேக்சேஷன் அப்பீல் கமிட்டி', அதாவது வரிவிதிப்புக் கமிட்டி என்று இருக்கிறதே, அதனுடைய அதிகாரம் பற்றி அமைச்சர் சொன்னார்கள். ஆனால் வரி போடுகிற அதிகாரம் கமிஷனருக்கு இருக்கிறது. வரி போடுவதைப் பரிசீலனை செய்வதற்கு முறையீட்டுக் கமிட்டிக்கு நாம் அப்பீல் செய்யும்

ாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, பஞ்சாயத்து பேரூராட்சி, மற்றும் நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்துக்கும் பொருந்தும்.

நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவின் அதிகார வரம்பை உயர்த்துதல்.

0 3822—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது அமுலில் உள்ள நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவுக்குள்ள அதிகார வரம்பை உயர்த்த வேண்டுமென அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவென்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நகராட்சி மற்றும் நகரியங்களில் வரி மேல் முறையீட்டுக் குழுவிற்கு செய்யப்படும் மனுக்கள் மீது, உயர்த்தப்பட்ட வரியில் 5 விழுக்காட்டுக்குக் கூடுதலாக வரி குறைப்பு செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்கி தற்போது அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. ஒங். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில், டேக்சேஷன் அப்பீல் கமிட்டி', அதாவது வரிவிதிப்புக் கமிட்டி என்று இருக்கிறதே, அதனுடைய அதிகாரம் பற்றி அமைச்சர் சொன்னார்கள். ஆனால் வரி போடுகிற அதிகாரம் கமிஷனருக்கு இருக்கிறது. வரி போடுவதைப் பரிசீலனை செய்வதற்கு முறையீட்டுக் கமிட்டிக்கு நாம் அப்பீல் செய்யும்

1990 மே, 7]

போது, அது சரியாகப் பரிசீலனை செய்யவில்லை என்றால், அதற்கு 'பனிஷ்மெண்ட்' கொடுக்க அதிகாரம் வழங்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, யாராவது புகார் செய்வார்களேயானால், பரிசீலிக்கப்படும்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த வரி மேல் முறையீட்டுக் குழுவிலே, இப் போது உறுப்பினர்களாக உள்ளவர்கள் யார், யார்? இந்த வரி முறையீட்டுக் குழுவில் குறை ஏற்படுமானால், மேல் முறையீட்டுக்கு வழக்குமன்றத்திற்குச் செல்ல அதிகாரம் உண்டா? இதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடமளிக்க அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

9-15 மணி.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நகராட்சி மன்றத்திற்கு ஒவ்வொரு அப்பீல் குழு இருக்கிறது. அது, எது, எது என்ற விவரம் என்னிடம் இப்போது இல்லை. அவ்வளவும் அறி விக்கவும் இயலாது. கோர்ட்டுக்குப் போவது என்பது அவர் களுடைய தனிப்பட்ட உரிமை, அதில் அரசு தலையிடாது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி வரி மேல் முறையீட்டுக் குழுவில் நகர்மன்றத் தலைவர், அந்தக் குழுவின் தலைவராகவும், நான்கு நகர்மன்ற உறுப்பினர்கள், உறுப்பினர்களாகவும் இருந்து அப்பீலை எடுத்துக்கொள் கிறார்கள்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வரி மேல் முறையீட்டுக் குழு என்பது தொடர்ச்சியாக் மாதாமாதம் கூடுவதில்லை. ஆயிரக்கணக் கான அப்பீல்கள் வந்த பின்னால்தான், அல்லது நூற்றுக் கணக்கிலே சேர்த்து வைத்து, எப்போதாவது ஒரு நாள் கூடுவது என்ற ஒரு நிலை இருக்கிற காரணத்தால் பொது மக்கள் சில பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஆகவே, உடனுக்

குடன் ஐந்தோ பத்தோ வந்திருந்தால் கூட, மாதத்தில் ஒரு நாளோ அல்லது தேவையானால் இரண்டு நாட்களோ கட்டாயம் கூடவேண்டும் என்று ஏதாவது நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு புகாரும் இதுவரை வரவில்லை. இருப்பினும் அவர்கள் கூட்டாகததினால் அதைப் பரிசீலிக்கமுடியவில்லை என்ற நிலையில்லாமல் உடனுக்குடன் கூட்டி பரிசீலிக்கின்ற வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தி தர இந்த அரசு நிச்சயம் முயற்சிக்கும்.

### நகரப் பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள்.

* 4002.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நிலக்கோட்டை, வத்தலக்குண்டு பேரூராட்சிகளை நகரப் பேரூராட்சிகள் என அறிவித்துள்ளதால், பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள் இவைகளுக்குக் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்நிலையை மாற்றி, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தவும், மத்திய உதவிகள் கிடைக்கவும் வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நடப்பாண்டு முதல் தேசிய ஊரக கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஜவஹர் மற்றும் வேலை வாய்ப்புத் உறுதியளிப்புதிட்டம் என்ற புதிய திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடன் ஐந்தோ பத்தோ வந்திருந்தால் கூட, மாதத்தில் ஒரு நாளோ அல்லது தேவையானால் இரண்டு நாட்களோ கட்டாயம் கூடவேண்டும் என்று ஏதாவது நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு புகாரும் இதுவரை வரவில்லை. இருப்பினும் அவர்கள் கூட்டாகததினால் அதைப் பரிசீலிக்கமுடியவில்லை என்ற நிலையில்லாமல் உடனுக்குடன் கூட்டி பரிசீலிக்கின்ற வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தி தர இந்த அரசு நிச்சயம் முயற்சிக்கும்.

## நகரப் பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள்.

* 4002.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நிலக்கோட்டை, வத்தலக்குண்டு பேரூராட்சிகளை நகரப் பேரூராட்சிகள் என அறிவித்துள்ளதால், பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள் இவைகளுக்குக் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்நிலையை மாற்றி, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தவும், மத்திய உதவிகள் கிடைக்கவும் வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நடப்பாண்டு முதல் தேசிய ஊரக கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஜவஹர் மற்றும் வேலை வாய்ப்புத் உறுதியளிப்புதிட்டம் என்ற புதிய திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1990 மே, 7]

புதிய பேருந்து நிலையம் கட்டுதல்,

* 8085. திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தரங்கம்பாடி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி பேரூராட்சியில் பொறையாற்றில் அவசியமாக ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். அங்கே சோழன் போக்குவரத்துக் கழகத்தினுடைய டெப்போ இருக்கிறது. அதிலே நூற்றுக்கு மேற்பட்ட பஸ்கள், பொறையாற்றிலிருந்துதான் கடை வீதி மூலமாகப் புறப்படுகிறது. மேலும் பெரியார், மற்றத் தனியார் வாகனங்கள் 50-க்கு மேற்பட்ட வாகனங்கள், மொத்தம் 300, 400 முறை பொறையாறு கடை வீதியிலிருந்துதான் புறப்படுகின்றன. அந்தக் கடைவீதி மிகவும் குறுகலானது. ஒரு சைக்கிள் கூட மாற முடியவில்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனது தொகுதியிலே இதுவரை ஒரு பேருந்து நிலையம் கூடக் கிடையாது. ஆகவே, முக்கியமாக அரசு இந்தப் பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு வரும் ஆண்டிலாவது முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தப் பேரூராட்சியில் ஒரு பேருந்து நிலையம் தானாகக் கட்டுவதற்கான நிதி வசதி இல்லை. அப்படிக் கட்டுவதாக இருந்தாலும், உலக வங்கியில் கடன் பெற்றுத்தான் கட்டவேண்டும். பேரூராட்சி அப்படி ஒரு செயற்குறிப்பை ஏற்பாடு செய்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையுடன் இங்கு அனுப்பினால் அதைப் பற்றிப் பரிசீலனை செய்து, கடன் உதவி வழங்க நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்படும். மேற்படி பொருளுக்கு, நகர சீரமைப்புத் திட்டத்தின் குழு ஒன்றுதான் ஒப்புதல் அளிக்கமுடியும். நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் வைக்கப்பட்டு;

அதற்குப் பிறகு நகர சீரமைப்புத் திட்டத்தின் குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றால் மட்டுமே இதன் மேல் அரசு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

ஏழாச்சேரி வரத்துக் கால்வாய்.

* 2572— திரு. வ. அன்பழகன் ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதியில் உள்ள ஏழாச்சேரிக்கு வரும் வரத்துக் கால்வாயில் தூர் வாருவதுடன் சிமெண்ட் லைனிங்கும் செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இக்கால்வாய் ஏற்கெனவே வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துத் தூர் வாரப்பட்டிருக்கிறது. லைனிங் செய்யும் பணி, தூசி மாமண்டூர் ஏரி நவீனப்படுத்துகிற நேரத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தூசி மாமண்டூர் ஏரிக்கு, ஏரியை நவீனப்படுத்த ரூபாய் 1.33 கோடி அறிவித்து இருக்கிறார்கள். அப்படி அறிவிப்புச் செய்து, வரலாற்றில் ஒரு மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். தூசி மாமண்டூர் ஏரி என்று சொல்கிறபோது, தொகுதிக்கு ஒரு பெரிய நன்மை கிடைத்திருக்கிறது. ஏழாச்சேரி என்பது என்னுடைய சொந்த ஊராகும். எனவே, நான் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கிற விதத்தில், அதைத் தவறாமல் இந்தத் திட்டத்திலே சேர்த்து நவீனப்படுத்தித் தருவாரா என்று உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தூசி மாமண்டூர் ஏரியில், 4-வது மதியிலேயிருந்து செல்கிற ஒரு கிளைக் கால்வாய்தான் ஏழாச்சேரி ஏரியினுடைய வரத்துக்கால்வாய். ஏற்கெனவே வறட்சி நிவாரணத்தில் 10 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, இந்த ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 138.20 இலட்சத்

அதற்குப் பிறகு நகர சீரமைப்புத் திட்டத்தின் குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றால் மட்டுமே இதன் மேல் அரசு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

ஏழாச்சேரி வரத்துக் கால்வாய்.

* 2572— திரு. வ. அன்பழகன் ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதியில் உள்ள ஏழாச்சேரிக்கு வரும் வரத்துக் கால்வாயில் தூர் வாருவதுடன் சிமெண்ட் லைனிங்கும் செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இக்கால்வாய் ஏற்கெனவே வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துத் தூர் வாரப்பட்டிருக்கிறது. லைனிங் செய்யும் பணி, தூசி மாமண்டூர் ஏரி நவீனப்படுத்துகிற நேரத்தில் எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தூசி மாமண்டூர் ஏரிக்கு, ஏரியை நவீனப்படுத்த ரூபாய் 1.38 கோடி அறிவித்து இருக்கிறார்கள். அப்படி அறிவிப்புச் செய்து, வரலாற்றில் ஒரு மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். தூசி மாமண்டூர் ஏரி என்று சொல்கிறபோது, தொகுதிக்கு ஒரு பெரிய நன்மை கிடைத்திருக்கிறது. ஏழாச்சேரி என்பது என்னுடைய சொந்த ஊராகும். எனவே, நான் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கிற விதத்தில், அதைத் தவறாமல் இந்தத் திட்டத்திலே சேர்த்து நவீனப்படுத்தித் தருவாரா என்று உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தூசி மாமண்டூர் ஏரியில், 4-வது மதியிலேயிருந்து செல்கிற ஒரு கிளைக் கால்வாய்தான் ஏழாச்சேரி ஏரியினுடைய வரத்துக்கால்வாய். ஏற்கெனவே வறட்சி நிவாரணத்தில் 10 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, இந்த ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 138.20 இலட்சத்

திற்குத் தூசி மாமண்டூர் ஏரியைத் தூர் வாரி, கால்வாய்களை நவீனப்படுத்த பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே அந்த நேரத்தில் ஏழாச்சேரியினுடைய வரத்துக் கால்வாயும் கவனிக்கப்படும்.

## புதியசாலைஅமைத்தல்.

* 3840—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், மேலராமநதியிலிருந்து ப. மூலக்கரைப்பட்டி கிராம சாலைத் திட்டத்தில் புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிராமச் சாலைகள் திட்ட ஏழாம் கட்ட ஒருங்கிணைந்த பணிகளில் ரூ. 80.00 கோடி திட்டத்தில் இந்தச் சாலைப்பணி இடம் பெற்றுள்ளது. நிதி நிலைமைக்கேற்ப வருங்காலத்தில் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்று இந்தச் சாலைப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

9-20 மணி

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, மேல ராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி கிராம சாலையினுடைய திட்டத்திலே, மேலராமநதியிலே 1,800 மக்கள் தொகைக்கு மேலாகவிருக்கிறது. மூலக்கரைப் பட்டி என்ற கிராமத்திலே 2,500 மக்கள் தொகைக்கு மேலாக விருக்கிறது. தூரமும் 4 கி.மீ. தான் இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு ஊர்களையும் இணைக்கின்ற இந்தக் கிராம சாலைத் திட்டத்திலே இந்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசும் அமைச்சரும் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1990 மே 7]

திற்குத் தூசி மாமண்டூர் ஏரியைத் தூர் வாரி, கால்வாய் களை நவீனப்படுத்த பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே அந்த நேரத்தில் ஏழாச்சேரியினுடைய வரத்துக் கால்வாயும் கவனிக்கப்படும்.

### புதியசாலைஅமைத்தல்.

* 3840—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், மேலராமநதியிலிருந்து ப. மூலக்கரைப்பட்டி கிராம சாலைத் திட்டத்தில் புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிராமச் சாலைகள் திட்ட ஏழாம் கட்ட ஒருங் கிணைந்த பணிகளில் ரூ. 80.00 கோடி திட்டத்தில் இந்தச் சாலைப்பணி இடம் பெற்றுள்ளது. நீதி நிலைமைக்கேற்ப வருங்காலத்தில் அரசின் நிர் வாக ஒப்புதல் பெற்று இந்தச் சாலைப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

9-20 மணி

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, மேல ராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி கிராம சாலையினுடைய திட்டத்திலே, மேலராமநதியிலே 1,800 மக்கள் தொகைக்கு மேலாகவிருக்கிறது. மூலக்கரைப் பட்டி என்ற கிராமத்திலே 2,500 மக்கள் தொகைக்கு மேலாக விருக்கிறது. தூரமும் 4 கி.மீ. தான் இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு ஊர்களையும் இணைக்கின்ற இந்தக் கிராம சாலைத் திட்டத்திலே இந்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசும் அமைச்சரும் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன், இந்த மேலராமநதி 'டு' மூலக்கரைப்பட்டி 3.50 கி.மீ. தொலைவு சாலை மண்சாலை வண்டிப்பாதையாகும். இந்தச் சாலைக்கு இடைப்பட்ட அதாவது மேலராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி வரையிலே போகிற அந்த சாலையில் வேறு எந்த கிராமமும் கிடையாது சாலை அமைக்கப்படவேண்டுமானால் நிலஆர்ஜிதம் எல்லாம் தேவைப்படும். ஆகவே, காலதாமதம் ஆகிவிடும் என்கிற காரணத்தினாலேதான் கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் இதை எடுத்துக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலராமநதியிலே ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிற காரணத்தினாலே மூலக்கரைப்பட்டி, அம்மனம்பட்டி, முத்துப்பட்டி, வடுகுப்பட்டி, பெருமாள்தேவன்பட்டி அத்தனையும் இந்த மூலக்கரைப்பட்டி பக்கத்திலே அரை பர்லாங் தூரத்திலேதான் இருக்கிறது. அந்தக் கிராம மக்கள் எல்லாம் இந்த மேலராமநதிக்கு வைத்திய வசதிக்காக வந்து சேரவேண்டிய நிலை அவசியமிருக்கிறது. ஆகவே, அந்தப் பொது மக்கள் முக்கியத்துவத்தைக் கருதி, இந்த சாலையை முதன்மை சலுகை காட்டி, அரசும் அமைச்சரும் இந்த ஆண்டிலேயே அதைச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன் ''ஆர்.ஆர்.-ல்' எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

### கிருஷ்ணகிரி அணை

* 3890—டாக்டர். க. காஞ்சனா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரி அணையில் தூர்வாரி, அணையை ஆழப்படுத்தி நீர்ப்பரப்பை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன், இந்த மேலராமநதி 'டு' மூலக்கரைப்பட்டி 3.50 கி.மீ. தொலைவு சாலை மண்சாலை வண்டிப்பாதையாகும். இந்தச் சாலைக்கு இடைப்பட்ட அதாவது மேலராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி வரையிலே போகிற அந்த சாலையில் வேறு எந்த கிராமமும் கிடையாது சாலை அமைக்கப்படவேண்டுமானால் நிலஆர்ஜிதம் எல்லாம் தேவைப்படும். ஆகவே, காலதாமதம் ஆகிவிடும் என்கிற காரணத்தினாலேதான் கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் இதை எடுத்துக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலராமநதியிலே ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிற காரணத்தினாலே மூலக்கரைப்பட்டி, அம்மனம்பட்டி, முத்துப்பட்டி, வடுகுப்பட்டி, பெருமாள்தேவன்பட்டி அத்தனையும் இந்த மூலக்கரைப்பட்டி பக்கத்திலே அரை பர்லாங் தூரத்திலேதான் இருக்கிறது. அந்தக் கிராம மக்கள் எல்லாம் இந்த மேலராமநதிக்கு வைத்திய வசதிக்காக வந்து சேரவேண்டிய நிலை அவசியமிருக்கிறது. ஆகவே, அந்தப் பொது மக்கள் முக்கியத்துவத்தைக் கருதி, இந்த சாலையை முதன்மை சலுகை காட்டி, அரசும் அமைச்சரும் இந்த ஆண்டிலேயே அதைச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன் ''ஆர்.ஆர்.-ல்' எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

கிருஷ்ணகிரி அணை

* *3890*—டாக்டர். க. காஞ்சனா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரி அணையில் தூர்வாரி, அணையை ஆழப்படுத்தி நீர்ப்பரப்பை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

*1990 மே, 7]*

**டாக்டர். க. காஞ்சனா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த ஆயக்கட்டு கிருஷ்ணகிரி அணை கட்டப்பட்ட காலக்கட்டத்தில் 11,329 ஏக்கர். இப்பொழுது இந்த 33 ஆண்டுகளில் பயன்தரும் நிலப்பரப்பு அதிகப்பட்டுள்ளது. அணையின் நீர்பிடிப்புப் பரப்பு 4 சதுர மைல் என்றிருக்கிறது. அணைப்பகுதியில் நீர்வரத்துப் பரப்பு 2,096 சதுர மைல் என்றாகிறது. தொடர்ந்து வண்டல் படிந்து கொண்டிருக்கிற காரணத்தினால், நீர்வரத்துப்பரப்பு பாதியாகக் குறைந்திருக்கிறது. எனவே, இந்த ' decilting ' கிருஷ்ணகிரிக்கு அத்தியாவசிய அவசரமானதொன்றாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனை மறுபரிசீலனை செய்ய முன் வருவாரா, அதுமட்டுமல்ல வருங்காலத்தில் மேல் மண் படிவதை தடுக்கின்ற வகையில் அணையின் தென்வடல் திசையில் அமைந்துள்ள மலை அடிவாரத்தில் பெரிய பெரிய மரங்களை வைத்து வளர்க்க, வனத்துறையுடன் கலந்து ஆலோசித்து எங்களுடைய அணைக்கு நன்மை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையினைதூர்வாரலாமா என்று 1988—90-ஆம் ஆண்டு ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. தூர் வாருவதற்கு 76 கோடி ருபாய் என மதிப்பிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் கிருஷ்ணகிரி அணையினுடைய பாசன ஆயக்கட்டு அவர்கள் சொன்னதைப்போல் 11 ஆயிரத்து சொச்சமல்ல. 9.12 ஏக்கர். இதிலே அவர்கள் குறிப்பிட்டதைப் போல் மண் படிந்து இருக்கிறதா என்று பார்த்தால், 1983-ஆம் ஆண்டு பூண்டி உதவி இயக்குநர் அவர்களால் நவீன முறையிலே ஆய்வு செய்யப்பட்டது. 1666.29 மில்லியன் கனஅடி குறைவாக இருக்கிறது. அதாவது அணைகட்டி முடிக்கப்பட்ட 26 வருடங்களில் கொள்ளளவு 28.5 சதவீதம் குறைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. இது மிகச் சொற்பம். இரண்டாவது, மண் வருவதற்கு வழியில்லை. கர்நாடக மாநிலத்திலிருந்து வருகிற பெண்ணையாற்றிலே கட்டப்பட்டது கிருஷ்ணகிரி அணை. அப்பொழுது கர்நாடக மாநிலத்திலிருந்து மண்ணையும் வண்டலையும் அடித்துக் கொண்டு வரும். ஆனால் இப்பொழுது கிருஷ்ணகிரிக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையிலே கலவரப் பள்ளி ஸ்கீம் என்ற ஒரு அணை கட்டப்பட்டது. எனவே, அங்கேயே வண்டல் மண் தேங்கி விடுகிறது. கலவரப்பள்ளிக்கும் கிருஷ்ணகிரி அணைக்கும் சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அதற்கு இடையிலே குளகிரி சின்னாறு என்கிற இன்னொரு ஆறு வந்து சேர்கிறது. அந்த ஆற்றின் மூலம் மண் வந்து சேர்கிறதா என்றால் அதிலேயும் ஒரு அணை

கட்டப்பட்டு விட்டது. எனவே, வருகிற மண் குளகிரியிலே சேர்ந்து விட்டது. சிறு சிறு காட்டாறுகள் இருக்கின்றன. அவற்றிலும் நாம் சிறு சிறு அணைகளைக் கட்டி விட்டோம். ஆக, எந்த வழியிலும், எந்த ரூபத்திலும் கிருஷ்ணகிரி அணைக் குள்ளே மண் வந்து சேர வழியே இல்லை. ஆகையினாலேதான், கேள்விக்கே இடமில்லை என்று சொன்னேன்.

டாக்டர். க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் 28.5 சதவீதம் நீர் வரத்து பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று விடை அளித்திருக் கிறார்கள். ஏதோ கொஞ்சம், ஓரளவுக்காவது எங்களுடைய நீர் வரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. தூர் வாருவதற்கான செல வினத்தைக் குறிப்பிடுகின்ற பொழுது, அவர்கள் 100பர்சென்ட் அன்-எகனாமிகல் என்கிற அளவிலேயும் பதில் அளித்திருக்கின்றார் கள். எனவே படிந்திருக்கின்ற கொஞ்ச நஞ்ச வண்டல் மண்—வளமான மண்—விவசாயிகளினுடைய மனம் கவர்கின்ற அந்த மண்ணை, பி. டபிள்யு. டி.யே விளம்பரம் செய்து விவசாயிகள் அவர்களாகவே அவர்களுடைய சொந்தச் செலவில் வாரிக்கொண்டு போவதற்காவது விளம்பரம் செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அணை யிலே நீர் இல்லாத காலத்திலே வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துக்கொண்டு போவதிலே பொதுப் பணித் துறைக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை, ஒரே ஒரு கண்டிஷன், அவர்கள் 3 அடி ஆழத்திற்குள்தான் வண்டல் மண்ணை எடுக்க வேண்டும். சில நேரங்களிலே 10 அடி 15 அடி வரை போகிறார்கள்; உள்ளே மணற்பாங்கான பகுதி வருகிற வரையில். அப்பொழுது வருகிற தண்ணீர் மணலிலே ஊறி விடும். எனவே, மணற்பகுதி வருகிற அந்த அளவிற்குப் போகக் கூடாது. ஒரு 3 அடி ஆழத்திற்கு இருக்கிற வண்டல் மண்ணை எடுப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் தொகுதியில் இருக் கின்றவர்களை, நீர் வற்றிய பிறகு மண் எடுக்கச் சொல்லலாம்.

திரு. குமாரி ஆனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கிருஷ்ணகிரி அணைக்கட்டுக்கு நேரே மேலே இருக்கின்ற அந்தச் சிறு மேடு—மாதேவம்பட்டி என்ற இடத்திலே இருக்கின்ற சாராயம் வடிக்கின்ற அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து வருகின்ற அந்தக் கழிவு நீரெல்லாம் அணையிலே சேர்வதாக வும் சுற்றியிருக்கின்ற தென்னை மரங்கள் எல்லாம் பட்டு இருப்பதாகவும், நானே நேரில் பார்த்தேன். அவைகளைத் தடுப்பதற்கு அரசு என்ன முயற்சியை எடுத்திருக்கிறது?

*1990 மே 7*

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நானும் நேரிலே பார்த்தேன். கெம்பிளாஸ்ட்டிலேயிருந்து வருகின்ற அந்தத் தண்ணீர் அணையிலே கலந்து, தண்ணீரினுடைய கலரே மாறிப் போயிருந்தது. நானே கேட்டேன் அதிகாரிகளை, ஏன் தண்ணீர் கலர் இப்படி மாறியிருக்கிறதே என்று. அந்த கெம்பிளாஸ்ட்டினுடைய கழிவு நீரைத் திறந்து விட்டு விடுகிறார்கள் என்றார்கள். 2, 3 தினங்களுக்கு முன்னால்கூட நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் எழுப்பி இருந்தார்கள். அதை நாங்கள் விடவில்லை; நாங்கள் அதற்கு வேறு வழி கண்டிருக்கிறோம் என்று அந்தக் கம்பெனி தெரிவித்திருக்கிறது. இருந்தாலும் அதிகாரிகளைத் திடீர் என்று அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து தண்ணீர் கலக்கிறதா என்று பார்த்து எங்களுக்குத் தெரிவிக்கும்படி தெரிவித்திருக்கிறோம். உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் சொன்னவைகள் யாவும் உண்மை.

**திரு. ஆர். நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் விவசாயத்திற்கு மிக முக்கியமாகப் பயன்படும்.......(மணியடிக்கப்பட்டது).

**திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையினுடைய மழைக்கால மீதமான வேஸ்டேஜ் தண்ணீரைப் பாரூர் ஏரியின்பேரிலே விடப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது. அப்படி விடப்படும் வேஸ்டேஜ் நீரை பாரூர் ஏரியினுடைய கொள்ளளவில் கணக்கிடப்படுகிறது என்பதை அரசு மாற்றியதனாலே, விவசாயிகளின் அறுவடைக்கு ஏறத்தாழ ஒன்றரை மாதக் காலம் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதை அரசு பரிசீலித்து ஏரியின் கொள்ளளவைக் குறைப்பதை அரசு கைவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்ளே, புதிய செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி கேட்டால் அது குறித்து விவரமாக பதிலை அளிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

### மின் கம்பங்கள்.

* 5325—திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

*1990 மே 7*

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நானும் நேரிலே பார்த்தேன். கெம்பிளாஸ்ட்டிலேயிருந்து வருகின்ற அந்தத் தண்ணீர் அணையிலே கலந்து, தண்ணீரினுடைய கலரே மாறிப் போயிருந்தது. நானே கேட்டேன் அதிகாரிகளை, ஏன் தண்ணீர் கலர் இப்படி மாறியிருக்கிறதே என்று. அந்த கெம்பிளாஸ்ட்டினுடைய கழிவு நீரைத் திறந்து விட்டு விடுகிறார்கள் என்றார்கள். 2, 3 தினங்களுக்கு முன்னால்கூட நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் எழுப்பி இருந்தார்கள். அதை நாங்கள் விடவில்லை; நாங்கள் அதற்கு வேறு வழி கண்டிருக்கிறோம் என்று அந்தக் கம்பெனி தெரிவித்திருக்கிறது. இருந்தாலும் அதிகாரிகளைத் திடீர் என்று அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து தண்ணீர் கலக்கிறதா என்று பார்த்து எங்களுக்குத் தெரிவிக்கும்படி தெரிவித்திருக்கிறோம். உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் சொன்னவைகள் யாவும் உண்மை.

**திரு. ஆர். நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் விவசாயத்திற்கு மிக முக்கியமாகப் பயன்படும்...... (மணியடிக்கப்பட்டது).

**திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையினுடைய மழைக்கால மீதமான வேஸ்டேஜ் தண்ணீரைப் பாரூர் ஏரியின்பேரிலே விடப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது. அப்படி விடப்படும் வேஸ்டேஜ் நீரை பாரூர் ஏரியினுடைய கொள்ளளவில் கணக்கிடப்படுகிறது என்பதை அரசு மாற்றியதனாலே, விவசாயிகளின் அறுவடைக்கு ஏறத்தாழ ஒன்றரை மாதக் காலம் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதை அரசு பரிசீலித்து ஏரியின் கொள்ளளவைக் குறைப்பதை அரசு கைவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்ளே, புதிய செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி கேட்டால் அது குறித்து விவரமாக பதிலை அளிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

### மின் கம்பங்கள்.

* 5325— திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய பகுதியில் 1983 ஆம் ஆண்டு மழை மற்றும் சூறைக் காற்றால் சாய்ந்த மின் கம்பங்கள் மீண்டும் நடப் பட்டு துண்டித்த மின் இணைப்பை கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

9-30 மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், முத்துபேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 22.12.83 மற்றும் 23.12.83 அன்று மழை மற்றும் சூரைக்காற றால் சாய்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து மின் கம்பங்கள் 15.7.84-க்குள் மாற்றப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

திரு. ஜி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, சூறைக் காற்றால், வெள்ளத்தால் சாய்ந்து இருக்கிற மின்கம்பங்கள் இடும்பாவனம், கீழப்பாண்டி, தொண்டியக்காடு ஆகிய பகுதிகளில் இன்றுவரையில் 1983-ஆம் ஆண்டிலிருந்து செப்ப னிடப்படவில்லை. சாய்ந்த நிலையிலேயே அவை கீழே விழுந்து கிடக்கின்றன. அமைச்சர் அவர்கள் அவற்றை செப்பனிட்டதாகச் சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக செப்பனிடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, என்னிடத்தில் இலாக்கா தெரிவித்ததன்படி அவற்றை செப்ப னிட்டதாக அறிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் கூறுவதை நான் அதைவிட அதிகமாக மதிக்கிறேன். அப்படி சாய்ந்த நிலையிலேயே இருக்குமானால் உடனடியாக அவற்றை நிமிர்த்துவதற்கு இன்றே ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, இது போன்ற மின்கம்பங்கள் சாய்ந்து மாணவர்கள் கூட இரண்டு பேர் சென்ற ஆண்டு இறந்து இருக்கிறார்கள். இந்த ஆண்டும் ஆம்பலாபட்டியில் பள்ளிக்குச் சென்ற இரண்டு மாணவர்கள் மின் கம்பங்கள் சாய்ந்து இறந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, போட்டிருக்கிற கம்பங்கள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் இருக்கிற காரணத்தால், அவற்றை மாற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் கான்கிரிட் மின்கம்பங்களை தயாரிக்கும் பொறுப்பை கான்டிராக்ட்டிற்கு விடாமல் அரசே தயாரிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு கவனத்தில் கொள்ளும்.

1990 மே 7

திரு. ஆர். மகேந்திரன் : தலைவர் அவர்களே, பல ஊராட்சி மன்றங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ள மின்கம்பங்களை எல்லாம் மாற்றிவிட்டு புதியதாக போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி பல ஆண்டுகளாகியும் புதிய கம்பங்கள் அமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவற்றை மாற்றிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் புயலால் சாய்ந்து போன மின் கம்பங்களைப் பற்றிய கேள்வியாகும். நின்று கொண்டிருக்கிற மின்கம்பங்களைப் பற்றியது அல்ல. எனவே, சாய்ந்த கம்பங்களை நிமிர்த்தி விட்டு, அடுத்தப்படியாக நின்று கொண்டிருக்கிற கம்பங்கள் மீது கவனத்தை செலுத்துவோம்.

வேலை பார்க்கும் பெண்கள் விடுதி.

3230—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் வேலை பார்க்கும் பெண்கள் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

5014—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரசுத் தொழில்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் பனை நார் பெட்டி முடைதல், அப்பளம் வடகம் தயார் செய்தல், வயர் கூடை பின்னுதல் போன்ற தொழில்களுக்கும் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுமா?

1990 மே 7

திரு. ஆர். மகேந்திரன் : தலைவர் அவர்களே, பல ஊராட்சி மன்றங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ள மின்கம்பங்களை எல்லாம் மாற்றிவிட்டு புதியதாக போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி பல ஆண்டுகளாகியும் புதிய கம்பங்கள் அமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவற்றை மாற்றிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் புயலால் சாய்ந்து போன மின் கம்பங்களைப் பற்றிய கேள்வியாகும். நின்று கொண்டிருக்கிற மின்கம்பங்களைப் பற்றியது அல்ல. எனவே, சாய்ந்த கம்பங்களை நிமிர்த்தி விட்டு, அடுத்தப்படியாக நின்று கொண்டிருக்கிற கம்பங்கள் மீது கவனத்தை செலுத்துவோம்.

### வேலை பார்க்கும் பெண்கள் விடுதி.

3230—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் வேலை பார்க்கும் பெண்கள் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

5014—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் பனை நார் பெட்டி முடைதல், அப்பளம் வடகம் தயார் செய்தல், வயர் கூடை பின்னுதல் போன்ற தொழில்களுக்கும் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுமா?

*1990 மே 7*

திரு. ஆர். மகேந்திரன் : தலைவர் அவர்களே, பல ஊராட்சி மன்றங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ள மின்கம்பங்களை எல்லாம் மாற்றிவிட்டு புதியதாக போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி பல ஆண்டுகளாகியும் புதிய கம்பங்கள் அமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவற்றை மாற்றிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் புயலால் சாய்ந்து போன மின் கம்பங்களைப் பற்றிய கேள்வியாகும். நின்று கொண்டிருக்கிற மின்கம்பங்களைப் பற்றியது அல்ல. எனவே, சாய்ந்த கம்பங்களை நிமிர்த்தி விட்டு, அடுத்தப்படியாக நின்று கொண்டிருக்கிற கம்பங்கள் மீது கவனத்தை செலுத்துவோம்.

**வேலை பார்க்கும் பெண்கள் விடுதி.**

3230—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் வேலை பார்க்கும் பெண்கள் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.**

5014—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் பனை நார் பெட்டி முடைதல், அப்பளம் வடகம் தயார் செய்தல், வயர் கூடை பின்னுதல் போன்ற தொழில்களுக்கும் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்.?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. கே. ரவி அருணன்: தலைவர் அவர்களே, மகளிருக்காக சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆட்டோ ரிக்ஷா வழங்கும் திட்டம் இந்த ஆண்டு நெல்லை மாவட்டத்திற்கு விரிவுபடுத்தப்படுமா? சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தில் மனு செய்த அனைவருக்கும் அவை கிடைப்பதில்லை. ஆகவே தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கு அவர்களுக்கு மானியத்தோடு கடனுதவி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆட்டோ ரிக்ஷா வழங்கும் திட்டத்தை இந்த அரசு முதன்முதலாக சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தை சென்னையில் முதலில் பரிட்சித்துப் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு ஆறு பெண்கள் தான் இந்தத் திட்டத்தில் சேர முன்வந்தார்கள். ஆட்டோ ரிக்ஷா ஓட்டுவதற்கான பயிற்சி அவர்களுக்கு தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கான தொகையை வங்கிகளில் பெறுவதில் சிக்கல் இருக்கிற காரணத்தால் இந்தத் திட்டத்தை வேறு மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கும் எண்ணம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை தையல் இயந்திரங்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்கள் ஏராளமாக தையல் இயந்திரங்கள் கேட்டு விண்ணப்பம் செய்கிறார்கள். சமூகநலத் துறையின் மூலமாக தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்து மொத்தம் 1,200 தையல் இயந்திரங்களைத் தான் வழங்குகிறோம். அந்த இயந்திரங்களை மாவட்டவாரியாக 100, 200 என்று பிரித்து தருகிறோம். இருக்கிற தேவையை கருத்திற்கொண்டு வருகிற ஆண்டுகளில் கூடுதலாக தையல் இயந்திரங்களை வாங்க வேண்டுமென்று அரசு பரிசீலித்து வருகிறது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக குறைந்த வட்டிக்கு எல்லா தொழில்களுக்கும் கடன் வழங்குகிறோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலும் தையல் இயந்திரங்களை வாங்குவதற்கு பெண்களுக்கு வாய்ப்பு உண்டு.

1990 மே 7

9-35 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் இந்த ஆண்டு நெல்லை மாவட்டத்திற்கு விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுக் கழகம் எல்லா மாவட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து, தன்னுடைய பணியை நிறைவு செய்து வருகிறது. எனவே விஸ்தரிக்கிற திட்டம் பரிசிலனையில் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மகளிர் களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்களை பெறக்கூடியவர் களுக்கு வயது வரம்பு இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று ஒரு வரம்பு விதிக்கப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. 40 வயது ஆகிவிட்டது, ஆகவே உங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்படமாட்டாது என்று பதில் வருகிறது. இதிலே என்ன வயது வரம்பு? தையல் இயந்திரத் தொழிலைப் படித்தவர்கள் அந்தத் தையல் தொழிலைச் செய்து, ஏதாவது பீழைப்பு தேடவேண்டும் என்று, கணவனால் கைவிடப்பட்ட அல்லது ஏதாவது ஒரு வகையிலே வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று விரும்புகிற பெண்களுக்கு இந்த விதிமுறைகளைத் தளர்த்தி, இந்தத் தையல் இயந்திரத்தை அவர்களுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதோடு, இந்த மாதிரி செய்யக்கூடிய இந்தத் தெழிலிலே பெட்டி முடைதல் மற்றும் அந்த வேலைகளிலே செய்யக்கூடிய பொருட்களை வாங்குவதற்கு — அவர்கள் விற்க முடியாமல் இருக்கிறார்கள்— அதை வாங்கி விற்பதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதால், சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்கிறோம். காரணம் தவறான முறையிலே அந்த இயந்திரங்கள் யாரிடமும் போய்ச் சேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான். இப்படி தையல் இயந்திரங்களை இலவசமாக பெற்று. அந்தத் துறையிலே ஈடுபடுகிற பெண்களுக்கு எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாவட்டந்தோறும் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி, இதைப்போன்று வறுமைக் கோடடுக்குக் கீழே வாழ்கின்ற இந்தப் பெண்களை அதிலே நிரந்தரமாக சேர்ந்து, பள்ளிக் குழந்தைகளுக்கு அரசு அறிவித்திருக்கிற இலவச சீருடைகளைத் தைக்கின்ற பணி அவர்களுக்கு

வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் வரையில் அவர்களுக்கு வருமானம் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்பட்டு இருக்கிறது. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தையல் இயந்திரங்கள் கிடைப்பதில் ஏதேனும் சிரமங்கள் இருக்குமானால், அதைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் சாக்கு கட்டிகள் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற தொழில்களை எல்லாம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பொருட்கள் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டு மாத இறுதியில் விற்காமல் போனால் அவர்கள் ஊதியம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அந்த மகளிர் உற்பத்தி செய்கின்ற பொருட்களை சமூகநலத்துறை ஏற்று, மாதாமாதம் அவர்களுக்கு உரிய வகையில் ஊதியம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற இந்தக் கடன் உதவிகள் இரண்டு வகையிலே வழங்கப்படுகின்றன. ஒன்று கூட்டுறவு அமைப்பின் மூலமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக் கூடிய பெண்களை அந்த அமைப்பில் கொண்டுவந்து, அதன் மூலம் இந்தச் சாக்கட்டி தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற பணிகள் தரப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பின் மூலம் செயல்படுகிற அந்தச் சங்கங்களில் உற்பத்தியாகிற அந்தப் பொருட்களை நாங்களே நேரடியாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தனிப்பட்ட முறையில் அரசிடம் கடன் உதவி பெற்று, தொழில் செய்கின்ற பெண்களிடமிருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்ய முடியாது. மார்க்கெட்டிங் வசதி என்ன இருக்கிறது என்பதைப் பார்த்து, தேர்வு செய்து, அவர்கள்தான் இந்தத் துறையிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

### விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டை.

9057— திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்கூடங்களில் தவணை முறை மற்றும் வாடகைத் திட்டங்களில் உள்ளவை எத்தனை

வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் வரையில் அவர்களுக்கு வருமானம் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்பட்டு இருக்கிறது. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தையல் இயந்திரங்கள் கிடைப்பதில் ஏதேனும் சிரமங்கள் இருக்குமானால், அதைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் சாக்கு கட்டிகள் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற தொழில்களை எல்லாம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பொருட்கள் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டு மாத இறுதியில் விற்காமல் போனால் அவர்கள் ஊதியம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அந்த மகளிர் உற்பத்தி செய்கின்ற பொருட்களை சமூகநலத்துறை ஏற்று, மாதாமாதம் அவர்களுக்கு உரிய வகையில் ஊதியம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற இந்தக் கடன் உதவிகள் இரண்டு வகையிலே வழங்கப்படுகின்றன. ஒன்று கூட்டுறவு அமைப்பின் மூலமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக் கூடிய பெண்களை அந்த அமைப்பில் கொண்டுவந்து, அதன் மூலம் இந்தச் சாக்கட்டி தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற பணிகள் தரப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பின் மூலம் செயல்படுகிற அந்தச் சங்கங்களில் உற்பத்தியாகிற அந்தப் பொருட்களை நாங்களே நேரடியாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தனிப்பட்ட முறையில் அரசிடம் கடன் உதவி பெற்று, தொழில் செய்கின்ற பெண்களிடமிருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்ய முடியாது. மார்க்கெட்டிங் வசதி என்ன இருக்கிறது என்பதைப் பார்த்து, தேர்வு செய்து, அவர்கள்தான் இந்தத் துறையிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

## விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டை.

9057— திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

**(அ)** திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்கூடங்களில் தவணை முறை மற்றும் வாடகைத் திட்டங்களில் உள்ளவை எத்தனை

1990 மே 7

(ஆ) வாடகை பாக்கி வைத்திருப்போர் எத்தனை பேர்?

(இ) இது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே;

(அ), (ஆ) மற்றும் (இ) திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் உள்ள 104 தொழிற்கூடங்களில் தவணை முறையில் 66 தொழிற் கூடங்களும், வாடகைத் திட்டத்தில் 38 தொழிற் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. தவணை முறைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 66 தொழி கூடங்களில், 41 தொழிற்கூடங்களின் தொழில் முனைவோர் கள் ரூ. 18 லட்சம் பாக்கி செலுத்த வேண்டியுள்ளது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்ால் முந்தைய ஆட்சிக் காலத்தில் திருவான்மியூரில் விக்ரம் சாராபாய் அவர்கள் பெயரால் தொழில் வளர்ச்சி பெறவேண்டும், என்ற உயர்ந்த நோக்கத்தோடு தொழில் கூடங்கள் கட்டப்பட்டு அப்போது தொழில் அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்களால் திறக்கப்பட்டது. இன்றுவரையில் அதே நிலையில்தான்உள்ளது. மேலும் அந்த இடத்தில் அடுக்கு மாடித் தொழில் கூடங்கள் கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழில் பேட்டையில் உள்ள தொழில் கூடங்களில் வாடகையை ஒழுங் காகக் கட்டுபவர்களுக்கு அவர்களை மேலும் ஊக்குவிக்கின்ற வகையில், தவணை முறைத்திட்டத்தில் சொந்தமாக்கிக்கொள்ள அரசாங்கத்தை அணுகுவார்களேயானால், அதற்கு அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் ஒரு நாள் காலையிலே தினத்தந்தியிலே ஒரு விளம்பரம் வந்தது. அந்த விளம்பரத்திலே தொழில் கூடம் ஒன்று காலியாக இருக்கிறது என்பதை அறிந்து நானும் விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பம் செய்ததற்குப் பின்னால், நேர் காணல் கடிதம் வந்தது. நானும் நேர் காணலுக்குச் சென்ற நேரத் தில், எனக்கு அதற்கான ஒதுக்கீடு தரப்பட்டு இருந்தும்கூட, அங்கேயிருக்கிற எல்லாத் தொழில் கூடங்களுக்கும் 600 ரூபாய்க்கு

மேல் வாடகை கிடையாது. ஆனால் எனக்கு மட்டும் 2,056 ரூபாய் போட்டிருந்தார்கள் என்பதை அரசு அறியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை முறையில் தொழில் கூடங்களை பெற்ற தொழில் முனைவோர்கள் ஒழுங்காக வாடகையைச் செலுத்தி வருவார்களேயானால், அவர்களுக்கே அந்தத் தொழில் கூடங்களைச் சொந்தமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்தத் தொழில் கூடத்திற்கு மற்றவைகளைக் காட்டிலும் அதிகமாக வாடகை அறிவித்திருப்பதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். மற்ற தொழில் கூடங்களுக்கு 1971-ஆம் ஆண்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் இன்றைக்கு இருக்கிற விலைவாசி அடிப்படையில் அந்த வாடகை நிர்ணயம் செய்து இருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு அந்த இடத்திற்கு இருக்கிற விலை மதிப்பைக் கணக்கிலே வைத்து. வாடகையை சற்று உயர்த்தி இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். இது மூலக் கேள்வியோடு தொடர்புடைய பிரச்சினை அல்ல என்பதால் அதற்கான சரியான பதில் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை சம்பந்தப்பட்ட தொழில் துறையோடு கலந்து பேசி, அதற்கான விளக்கம் என்ன என்பதை அவர்களுக்கு நேரில் தெரிவிக்கிறேன்.

### ஆதி திராவிட நலத்துறைக்குத் தனி வட்டாட்சியர்.

4799—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி வட்டம் ஆதி திராவிடர் நலத்துறைக்கு தனி வட்டாட்சியர் நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 10 தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் ஏற்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. இந் தனி வட்டாட்சியர் அலுவலகங்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்கிறார். மேற்கண்ட 10 தனி வட்டாச்ட்யரில் பேராவூரணி வட்டம் அடங்கவில்லை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேல் வாடகை கிடையாது. ஆனால் எனக்கு மட்டும் 2,056 ரூபாய் போட்டிருந்தார்கள் என்பதை அரசு அறியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை முறையில் தொழில் கூடங்களை பெற்ற தொழில் முனைவோர்கள் ஒழுங்காக வாடகையைச் செலுத்தி வருவார்களேயானால், அவர்களுக்கே அந்தத் தொழில் கூடங்களைச் சொந்தமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்தத் தொழில் கூடத்திற்கு மற்றவைகளைக் காட்டிலும் அதிகமாக வாடகை அறிவித்திருப்பதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். மற்ற தொழில் கூடங்களுக்கு 1971-ஆம் ஆண்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் இன்றைக்கு இருக்கிற விலைவாசி அடிப்படையில் அந்த வாடகை நிர்ணயம் செய்து இருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு அந்த இடத்திற்கு இருக்கிற விலை மதிப்பைக் கணக்கிலே வைத்து. வாடகையை சற்று உயர்த்தி இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். இது மூலக் கேள்வியோடு தொடர்புடைய பிரச்சினை அல்ல என்பதால் அதற்கான சரியான பதில் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை சம்பந்தப்பட்ட தொழில் துறையோடு கலந்து பேசி, அதற்கான விளக்கம் என்ன என்பதை அவர்களுக்கு நேரில் தெரிவிக்கிறேன்.

ஆதி திராவிட நலத்துறைக்குத் தனி வட்டாட்சியர்.

4799—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி வட்டம் ஆதி திராவிடர் நலத்துறைக்கு தனி வட்டாட்சியர் நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 10 தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் ஏற்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. இந் தனி வட்டாட்சியர் அலுவலகங்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்கிறார். மேற்கண்ட 10 தனி வட்டாச்ட்யரில் பேராவூரணி வட்டம் அடங்கவில்லை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1900 மே 7

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் வட்டாட்சியர் அலுவலகம் இல்லையென்று சொன்னார்கள். ஆகவே இரண்ட டாவது எனது கேள்விக்கு இடமில்லை. இருந்தாலும் கூட, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆதிதிராவிட மக்களை பாதுகாக்க வேண்டுமென்று நினைத்தால், அவர்களுடைய கோரிக்கைகளை விரைந்து செய்யவேண்டும், அவர்களுக்கு வேண்டிய பிரச்சினை களை, விவகாரங்களை தீர்க்கவேண்டுமென்று நினைத்தால், ஒவ் வொரு வட்டத்திலேயும்........(குறுக்கீடு).

9-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பொதுவான அறி வுரை இப்போது அடங்கவில்லை என்கிறார். நீங்கள் அடங்கு கிறீர்களா, இல்லை கேட்கிறீர்களா? (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம் : ஆகவே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு ஆதிதிராவிடர் நல வட்டாட்சியரை நியமிக்க வேண்டும் அதே நேரத்தில் பேராவூரணியில், பட்டுக்கோட்டையில் இருக்கின்ற வட்டாச்சியர் சுமார் 25 கிலோமீட்டர் வந்து காரியங்களை ஆற்றுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால் தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் மறு பரிசிலனை செய்து வட்டாட்சியரை, பேராவூரணியிலே நியமிப்ப தற்கு பரிசிலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலப் பணிகளுக்காக அரசு மாநிலம் முழுவதும் 80 தனி தாசில்தார் களை பணியிலமர்த்திட உத்தரவிட்டுள்ளது. இப்போது இந்த மாநிலத்தில் 162 வட்டங்கள் உள்ளன. இரண்டு வட்டத்திற்கு ஒரு தனி வட்டாட்சியர் வீதம் கிட்டத்தட்ட மாநிலம் முழுவதும் 80 தனி வட்டாட்சியர்கள் அமர்த்தப்பட்டிருக்கின் றனர், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, பணிகளில் தயக்கம் ஏற்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கு மானால், அந்த தனி வட்டாட்சியரை நியமித்து ஒவ்வொரு பணியிலும் விரைந்து செயல்பட அரசு ஆவன செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் முயற்சிப்பதாகச் சொன்னார்கள் ஆனால் இது பேராவூரணி வட்டாட்சியர் அலுவலமாகி சுமா. 15 ஆண்டுகாலமாகிவிட்டது. 6 ஆண்டுக்காலம் ஆகிய ஆதிதிராவிடர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வட்டாட்சியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் 15 ஆண்டுக்காலம் ஆகி யும் பேராவூரணியில் நியமிக்கப்படவில்லையே, ஒரு வேளை அது காங்கிரசினுடைய தொகுதி என்பதனால் அதை ஒதுக்கி விட்டீர் களா? தயவு செய்து விரைந்து செய்யவேண்டுமென்று.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உங்களுக்கு ஒன்றை அறிவித்தார்கள் என்று நினைக்கிறேன். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இதைப் பற்றி ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரிடத்தில நான் கேட்கிறேன், தயவுசெய்து விரைந்து செயல்படுவாரா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி எந்த பாரபட்சமும் இந்த அரசுக்கு இல்லை. பணிகளை முடுக்கிவிட இந்த அரசு தனி கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார்கள் அத்தனை பேரும் 2 மாதம், அல்லது 3 மாதங்கள் வரை இருந்துதான் வேலை பார்க்கின்றார்கள். பிறகு லீவ் போட்டுவிட்டு, வேறு துறைக்குச் சென்று விடுகிறார்கள். எனவே ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார்கள் இத்தனை ஆண்டுக்காலம் அந்தத் துறையிலேயே பணியாற்ற வேண்டுமென்று கட்டுப்பாடோடு தாசில்தார்கள் ஏற்றுகொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு ஒவ்வொரு தாசில்தாரிடத்திலேயும் ஜீப்பே கிடையாது. அவர்கள் சென்று வருவதற்கு வாகன வசதி கிடையாது. முன்னேற்றமான பணிகளோ அல்லது திட்டங்கள் தயாரிக்கின்ற பணிகளோ மிகத் தாமதப்படுத்தப்படுகின்ற காரணத்தினால், இரண்டு தாசில்தார்களுக்கு ஒரு ஜீப்பையாவது வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டாட்சியருக்கும் பொதுவாக வாகன வசதி இருக்கிறது. அந்த வாகன வசதியை வைத்துக்கொண்டுதான் தனி வட்டாட்சியர் அவர்கள் செயல் படுகிறார்கள். தற்காலிகமாக பணி முடக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்குமேயானால் உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பாரேயானால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நினைவுச் சின்னம்.

* 5177—திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உங்களுக்கு ஒன்றை அறிவித்தார்கள் என்று நினைக்கிறேன். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இதைப் பற்றி ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரிடத்தில நான் கேட்கிறேன், தயவுசெய்து விரைந்து செயல்படுவாரா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி எந்த பாரபட்சமும் இந்த அரசுக்கு இல்லை. பணிகளை முடுக்கிவிட இந்த அரசு தனி கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார்கள் அத்தனை பேரும் 2 மாதம், அல்லது 3 மாதங்கள் வரை இருந்துதான் வேலை பார்க்கின்றார்கள். பிறகு லீவ் போட்டு விட்டு, வேறு துறைக்குச் சென்று விடுகிறார்கள். எனவே ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார்கள் இத்தனை ஆண்டுக்காலம் அந்தத் துறையிலேயே பணியாற்ற வேண்டுமென்று கட்டுப்பாட்டோடு தாசில்தார்கள் ஏற்றுகொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு ஒவ்வொரு தாசில்தாரிடத்திலேயும் ஜீப்பே கிடையாது. அவர்கள் சென்று வருவதற்கு வாகன வசதி கிடையாது. முன்னேற்றமான பணிகளோ அல்லது திட்டங்கள் தயாரிக்கின்ற பணிகளோ மிகத் தாமதப்படுத்தப் படுகின்ற காரணத்தினால், இரண்டு தாசில்தார்களுக்கு ஒரு ஜீப்பையாவது வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டாட்சியருக்கும் பொதுவாக வாகன வசதி இருக்கிறது. அந்த வாகன வசதியை வைத்துக்கொண்டுதான் தனி வட்டாட்சியர் அவர்கள் செயல் படுகிறார்கள். தற்காலிகமாக பணி முடக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்குமேயானால் உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பாரேயானால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நினைவுச் சின்னம்.

* 5177—திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா:

1990 மே., 7]

விடுதலை வீரர் திருவண்ணாமலை தியாகி திரு. அண்ணாமலைப்பிள்ளை குடியிருந்த வீட்டை வாங்கி நினைவுச் சின்னம் ஏற்படுதும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே :

இல்லை 9-45 மணி

திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அந்த வீரருடைய இல்லத்தை நினைவுச் சின்னமாக மாற்றினால் எதிர்கால சந்ததியினர் சுதந்திரத்தினுடைய முக்கியத்துவத்தையும், பழைய கால வரலாற்றையும் அறியும் பொருட்டு இதுபோன்ற தியாகிகளுடைய இல்லங்களை நினைவுச் சின்னமாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நமது முன்னோர்கள் நமது இனத்திற்காகப் பாடுபட்டவர்களுக்கு, பல்வேறு தலைவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் எழுப்புவது, அவர்கள் வாழ்ந்த இல்லங்களை நினைவுச் சின்னமாக அரசு அறிவிப்பது, அரசு அதை எடுத்து அருங்காட்சியகமாக அமைப்பது போன்றவை எல்லாம் பல்வேறு தலைவர்களுக்கு இதுவரை செய்தித் துறையின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவருக்கும் அரசின் சார்பாக நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமானால் அரசு அதைப் பற்றி ஆலோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 5289—திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டத்தில் புதிய பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தடையேதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

1990 மே,, 7]

விடுதலை வீரர் திருவண்ணாமலை தியாகி திரு. அண்ணாமலைப்பிள்ளை குடியிருந்த வீட்டை வாங்கி நினைவுச் சின்னம் ஏற்படுதும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே :

இல்லை 9-45 மணி

திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அந்த வீரருடைய இல்லத்தை நினைவுச் சின்னமாக மாற்றினால் எதிர்கால சந்ததியினர் சுதந்திரத்தினுடைய முக்கியத்துவத்தையும், பழைய கால வரலாற்றையும் அறியும் பொருட்டு இதுபோன்ற தியாகிகளுடைய இல்லங்களை நினைவுச் சின்னமாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நமது முன்னோர்கள் நமது இனத்திற்காகப் பாடுபட்டவர்களுக்கு, பல்வேறு தலைவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் எழுப்புவது, அவர்கள் வாழ்ந்த இல்லங்களை நினைவுச் சின்னமாக அரசு அறிவிப்பது, அரசு அதை எடுத்து அருங்காட்சியகமாக அமைப்பது போன்றவை எல்லாம் பல்வேறு தலைவர்களுக்கு இதுவரை செய்தித் துறையின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவருக்கும் அரசின் சார்பாக நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமானால் அரசு அதைப் பற்றி ஆலோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 5289—திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டத்தில் புதிய பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தடையேதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, வறண்டப் பகுதிகளில் பெரும்பாலும் விவசாயிகளுக்குக்கூட பால் மாடு வளர்க்கின்ற தொழில் உப தொழிலாக இருந்து வருகிறது. ஆகையால் பால் சங்கங்களை அமைத்து விவசாயிகளுக்கும், கூலி தொழிலாளர்களுக்கும் உதவியாக பால் சங்கங்களை அமைக்கின்த் திட்டத்தை அரசு மீண்டும் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் ஆயிரம் புதிய சங்கங்கள் அமைப்பதற்காக அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே மாவட்டத்திற்கு இத்தனை சங்கங்கள் என்று சொல்லி, பெரியார் மாவட்டம் என்றால் அங்கே கடந்த வருடம் 100 புதிய பால் உற்பத்தியாளர் சங்கம் அனுமதிக்கப்பட்டு சிறந்த முறையிலே ஆரம்பிக்கப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தெந்த பகுதிகளிலே புதிய சங்கங்கள் தேவை என்றால் அந்தப் பகுதியிலே அந்தச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களிடையே மோதல்.

* 3384— திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், பழவேற்காட்டில் கடந்த 26—1—1989 அன்று மீன் பிடிப்பதில் மீனவர் களிடையே ஏற்பட்ட மோதலில் ஒன்பது மீனவர்கள் உயிர் இழந்தனர் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு நிதி உதவி வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எட்டு குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது. ஒரு குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, வறண்டப் பகுதிகளில் பெரும்பாலும் விவசாயிகளுக்குக்கூட பால் மாடு வளர்க்கின்ற தொழில் உப தொழிலாக இருந்து வருகிறது. ஆகையால் பால் சங்கங்களை அமைத்து விவசாயிகளுக்கும், கூலி தொழிலாளர்களுக்கும் உதவியாக பால் சங்கங்களை அமைக்கின்ற திட்டத்தை அரசு மீண்டும் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் ஆயிரம் புதிய சங்கங்கள் அமைப்பதற்காக அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே மாவட்டத்திற்கு இத்தனை சங்கங்கள் என்று சொல்லி, பெரியார் மாவட்டம் என்றால் அங்கே கடந்த வருடம் 100 புதிய பால் உற்பத்தியாளர் சங்கம் அனுமதிக்கப் பட்டு சிறந்த முறையிலே ஆரம்பிக்கப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தெந்த பகுதிகளிலே புதிய சங்கங்கள் தேவை என்றால் அந்தப் பகுதியிலே அந்தச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மீனவர்களிடையே மோதல்.

* 3384— திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், பழவேற்காட்டில் கடந்த 26—1—1989 அன்று மீன் பிடிப்பதில் மீனவர் களிடையே ஏற்பட்ட மோதலில் ஒன்பது மீனவர்கள் உயிர் இழந்தனர் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு நிதி உதவி வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எட்டு குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது. ஒரு குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, பழவேற்காட்டில் உள்ள அந்த 9 குப்பத்து மக்களிடமும் நானும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களும் பேசி சமரசம் செய்து வைத்தோம். அதிலிருந்து இன்று வரை அவர்கள் ஒற்றுமையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் மீது போடப்பட்ட அந்த வழக்கை அரசு திரும்பப் பெறுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, அது குறித்து தனியாக தெரிவிப்பாரேயானால் அதனை ஆய்வு செய்து பரிசீலனை செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, சென்னை, செங்கை அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் தொழிற்சாலைகளிலிருந்து நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அரசிடம் இறால் வளர்ப்புத் திட்டம் உள்ளதால் மீனவர்களுக்கு அந்தத் திட்டத்தை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

செயற்கை முறை இனவிருத்தி

4181—திரு. க. வெ. வி. இராசமாணிக்கம்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் செயற்கை முறை இனவிருத்தி மூலம் உயர்தர ஆடுகளை இனவிருத்தி செய்யும் வகையில் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து கிடாக்களை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செங்கை சிவம் : தலைவர் அவர்களே, நம்முடைய காட்டுப்பாக்கம் ஆராய்ச்சி மையத்தில் ஆடுகளை மிக அதிகமாக எடையுள்ள ஆடுகளை இனப்பெருக்கம் செய்யப்படுகின்ற ஒரு

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, பழவேற்காட்டில் உள்ள அந்த 9 குப்பத்து மக்களிடமும் நானும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களும் பேசி சமரசம் செய்து வைத்தோம். அதிலிருந்து இன்று வரை அவர்கள் ஒற்றுமையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் மீது போடப்பட்ட அந்த வழக்கை அரசு திரும்பப் பெறுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, அது குறித்து தனியாக தெரிவிப்பாரேயானால் அதனை ஆய்வு செய்து பரிசீலனை செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, சென்னை, செங்கை அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் தொழிற்சாலைகளிலிருந்து நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அரசிடம் இறால் வளர்ப்புத் திட்டம் உள்ளதால் மீனவர்களுக்கு அந்தத் திட்டத்தை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

## செயற்கை முறை இன விருத்தி

4181—திரு. க. வெ. வி. இராசமாணிக்கம்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் செயற்கை முறை இனவிருத்தி மூலம் உயர்தர ஆடுகளை இனவிருத்தி செய்யும் வகையில் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து கிடாக்களை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செங்கை சிவம் : தலைவர் அவர்களே, நம்முடைய காட்டுப்பாக்கம் ஆராய்ச்சி மையத்தில் ஆடுகளை மிக அதிகமாக எடையுள்ள ஆடுகளை இனப்பெருக்கம் செய்யப்படுகின்ற ஒரு

சூழ்நிலை இருக்கிறது. ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் பண்டிகை தினங்களில் குறிப்பாக ரம்சான், பக்ரித் போன்ற பண்டிகை தினங்களில் குவைத், துபாய் போன்ற நாடுகளுக்கு ஆடுகளை அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள். அதே போன்று தமிழ்நாட்டிலும் இனப்பெருக்கத்தை செய்து— ஆடுகள் இனப் பெருக்கத்தை செய்து—அதிகமான அளவிற்கு மேலை நாடுகளுக்கு ஆடுகளை ஏற்றுமதி செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் மூலமாக ஆடுகள் வளர்க்கின்ற பல் வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் இந்த ஆண்டிலே கூட ஐரோப்பிய பொருளாதார நிதியுதவி திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களிலே செயல்படுகின்ற ஒரு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை.

5533—திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா:

நெல்லிக்குப்பம் நகரத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கும் செய்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

9-50 மணி

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரம் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் கொண்ட ஒரு முனிசிபல் நகரம். அங்கே கால் நடைகள் ஏராளமாக இருக்கின்றன. கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டு இருக்கிற காரணத்தால் அரசு மறு பரிசீலனைச் செய்து அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்த ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

சூழ்நிலை இருக்கிறது. ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் பண்டிகை தினங்களில் குறிப்பாக ரம்சான், பக்ரித் போன்ற பண்டிகை தினங்களில் குவைத், துபாய் போன்ற நாடுகளுக்கு ஆடுகளை அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள். அதே போன்று தமிழ்நாட்டிலும் இனப்பெருக்கத்தை செய்து— ஆடுகள் இனப் பெருக்கத்தை செய்து—அதிகமான அளவிற்கு மேலை நாடுகளுக்கு ஆடுகளை ஏற்றுமதி செய்யும் எண்ணம் அரசக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர் களே, தமிழ்நாடு அரசின் மூலமாக ஆடுகள் வளர்க்கின்ற பல் வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் இந்த ஆண்டிலே கூட ஐரோப்பிய பொருளாதார நிதியுதவி திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களிலே செயல்படுகின்ற ஒரு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை.

5533—திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா:

நெல்லிக்குப்பம் நகரத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

9-50 மணி

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரம் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் கொண்ட ஒரு முனிசிபல் நகரம். அங்கே கால் நடைகள் ஏராளமாக இருக்கின்றன. கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டு இருக்கிற காரணத்தால் அரசு மறு பரிசீலனைச் செய்து அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்த ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 மே, 7]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரத்திற்கு கிழக்கே 2 கிலோ மீட்டர் தூரத்தில் காராமணிக்குப்பம் என்னும் இடத்தில் ஒரு கால் நடை மருந்தகம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. 5 கிலோ மீட்டர் தூரம் மேற்கில் மேல்பட்டம் பாக்கம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு கொண்டு வருகிறது. ஏற்கெனவே இது நெல்லிக்குப்பம் நகரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட மருந்தகம் ஆகத்தான் இருக்கும் என கருதுகிறேன். ஏன் என்றால் கால்நடை மருந்தகங்கள் எல்லாமே ஊரிலிருந்து நீண்ட தூரத்தில், இடம் கிடைக்காத காரணத்தால் ஊருக்கு அப்பால் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அமைந்து இருக்கும் என்றே நான் கருதுகிறேன். மேலும் ஊரிலுள்ள ஜனத்தொகை பற்றிச் சொன்னார்கள். கால்நடைகளின் எண்ணிக்கையை ஆய்வு செய்து அது குறித்து இந்த அரசு, அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஆய்வு செய்து பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்தில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைக்கு லாரிகளில் மட்டும் அல்ல, மாட்டு வண்டிகளில், டயர் வண்டிகளில் கரும்பை அனுப்ப வேண்டிய சூழ்நிலையின் காரணமாக ஏராளமான பேர்கள் மாடுகளை அங்கே வைத்து இருக்கிறார்கள். 2 கிலோ மீட்டர் தூரமோ அல்லது 5 கிலோ மீட்டர் தூரமோ போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்போது அங்கே மருந்தகம் கூட இல்லை. எனவே அங்கே ஒரு மருத்துவமனை உடனடியாகத் தேவைப்படுகிறது. அதை அரசு பரிசீலனை செய்து அங்கே உடனடியாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஆய்வு செய்து அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப அது பரிசீலனைச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

[1990 மே, 7

## 2. உரிமை மீறல் பிரச்சினை

கரும்பலகைத் திட்டத்திற்குப் புத்தகங்களைத் தேர்வு செய்தல் பற்றி 27 1 1990 ஆம் நாளன்று உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்துக்குக் கல்வி அமைச்சர் அளித்த பதில் குறித்த பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் பிரச்சினை.

பள்ளிக்கூடங்களில் உள்ள நூலகங்களுக்குக் கரும்பலகைத் திட்டத்தின் கீழ் வாங்கும் புத்தகங்களைத் தேர்வு செய்வதில் முறைகேடுகள் நடந்திருப்பதாகப் பேரவையில் 27—1—1990 ஆம் நாளன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தது தவறானது என்றும், அவை உரிமை மீறல் ஆகும் என்றும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் 23—3—1990 ஆம் நாளன்று உரிமை மீறல் பிரச்சினை ஒன்றினை அவையில் எழுப்பிக் கீழ்க்கண்டவாறு கூறினார்:

'' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது, நீதிமன்றத்திலே சிலர் வழக்குக்குச் சென்றுள்ளார்கள். அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப் பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி அந்தக் குழு பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். மூன்று விஷயங்களைச் சொன்னார்கள். ஒன்று, நீதிமன்றத்திலே சிலர் வழக்குக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது. இரண்டாவது, அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப்பட்டது என்பது. மூன்றாவது வழக்கை விசாரித்த நீதிபதி அந்தக் குழு பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கோண்டிருக்கிறது என்பதும் ஆகும். நீதிமன்றத்திற்கு சிலர் வழக்குக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மை........ அந்த மனுக்கள் மீதான விசாரணை முடிந்துவிட்டதா என்றால், இன்னும் முடியவில்லை. அந்த மனுக்கள் எல்லாம் இன்னும் விசாரணையில் இருக்கின்றன. அவற்றில் ஒன்று ரிட் பெட்டிஷன் நம்பர் 127/64/1989. நீதிபதி வெங்கடசாமி அவர்கள் அந்த ரிட் மனுவில் 20—9—1989 அன்று இடைக்காலத் தடை உத்தரவுக்கும், எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவும் ஆணை பிறப்பித்திருக்கிறார். ஆக இங்கே, இந்த அவையிலே, கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது தவறான தகவலாகும்'' என்று திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

1990 மே 7] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்பிரச்சினை குறித்துக் கீழ்க்கண்ட விளக்கத்தினை அளித்தார்.

" நீதிமன்றத்திற்குச் சிலர் வழக்குக்குச் சென்றிருக்கிறார்கள். ஒரு வழக்கை மட்டும் குறிப்பிடவில்லை. ரிட் மனு பற்றி மட்டும் நான் குறிப்பிடவில்லை. ரிட் மனுவை ஒட்டி 'பார் அண்டு அகென்ஸ்ட்' (for and against) பல்வேறு விளக்கங்கள்...... அடுத்து, அந்த வழக்கில் முழு அளவில் விசாரிக்கப்பட்டது — இதில், அந்த வழக்கில் என்று நான் சொன்ன இடத்தில், அந்த வழக்குகள் முழு அளவில் விசாரிக்கப்பட்டன. இங்கே திரு. வீரையன் அவர்கள் பேசிய அந்தக் கருத்துக்குத்தான், அந்த ஒரு வரி— வழக்கை விசாரித்த நீதிபதி இந்தக் குழு அந்தப் பாடம் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பாடப் புத்தகம் என்றால், இந்த வழக்கிலே மூன்றாம் கட்டத்திலே வாங்கிய புத்தகங்கள், அதுவரை வாங்கப்பட்ட புத்தகங்கள் அல்ல, அதற்காகத் தான் ரிட் மனு" என்றும்,

9.55 மணி

" மூன்றாவது கட்டம் வழக்கிலே இருக்கிறது. நான் பேசுகின்றபோது, திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய அந்தப்பிரச்சினைக்கு விளக்கம் சொல்வதற்காகத்தான் நீதிமன்றத்திலே சிலர் வழக்கிற்குச் சென்றிருக்கிறார்கள். அது ரிட் மனுவா, என்ன மனு, யார் யார் என்ற அந்த விவரத்திற்குள் நான் போகவில்லை. அந்த வழக்கிலே இந்தப் பிரச்சினை——திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை முழு அளவில் விசாரிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, இந்தக் குழு அந்தப் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டு இருக்கிறார். இதற்குத் தடை விதிக்கவில்லை. இவ்வளவு தான் நான் சொல்லி இருக்கிறேனே தவிர மாண்புமிகு உறுப்பினர் கருதுகிற அந்த வழக்கு பற்றியோ, அந்த வழக்கை வைத்துத் திசை திருப்புவதற்கோ எனக்கு அவசியமே இல்லை" என்றும். " எனவே, மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் கருதுவதைப் போல இந்த மன்றத்தினுடைய உரிமையைக் குறைக்கவோ, மாற்றவோ, பிரிக்கவோ நான் முயலவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றும் கல்வியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

[பேரவைத் தலைவர்]

[1990 மே 7

If any statement is made on the Floor of the House by a Member or Minister which another Member believes to be untrue, incomplete or incorrect it does not constitute a breach of privilege.. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately and knowingly.

Incorrect statements made by a Minister cannot make any basis for a breach of privilege. It is only a deliberate lie if it can be substantiated that would certainly bring the offence within the meaning of a breach of privilege.

இதிலிருந்து பார்க்கும்பொழுது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவையில் கூறிய செய்தி தவறு என்று கொள்வதற்கில்லை. எனவே இதில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தைச் சென்னைக்கு மாற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். பழனிவேல், கோ. வீரையன், எஸ். ஏ. தங்கராஜன், திருமதி பாப்பா உமாநாத் திருவாளர்கள் எல். மூக்கையா, ப. முத்துசாமி, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ஆ. அறிவழகன், வி. கே. சின்னசாமி, பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, '' கோடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை சென்னைக்கு மாற்றுவது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையைப் பற்றி அரசின்

If any statement is made on the Floor of the House by a Member or Minister which another Member believes to be untrue, incomplete or incorrect it does not constitute a breach of privilege.. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately and knowingly.

Incorrect statements made by a Minister cannot make any basis for a breach of privilege. It is only a deliberate lie if it can be substantiated that would certainly bring the offence within the meaning of a breach of privilege.

இதிலிருந்து பார்க்கும்பொழுது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவையில் கூறிய செய்தி தவறு என்று கொள்வதற்கில்லை. எனவே இதில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தைச் சென்னைக்கு மாற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். பழனிவேல், கோ. வீரையன், எஸ். ஏ. தங்கராஜன், திருமதி பாப்பா உமாநாத் திருவாளர்கள் எல். மூக்கையா, ப. முத்து சாமி, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ஆ. அறிவழகன், வி. கே. சின்னசாமி, பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, "கோடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல் கலைக் கழகத்தை சென்னைக்கு மாற்றுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையைப் பற்றி அரசின்

[டாக்டர் க. அன்பழகன்]

1990 மே, 7]

கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால் மிக மிக விரிவான அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கையில் அனைத்து விளக்கங்களும் இருக்கின்றன.

அறிக்கை.

'சரிநிகர் சமானம்' என்ற கவிஞர் பாரதியின் கவிதைத் தொடரை, சமத்துவ சமூக அமைப்பு வேண்டிவிடுத்த அழைப்பை "Towards equal status" என்று ஆங்கிலப்படுத்தி அதனை முத்திரை மொழியாகக் கொண்டு மகளிர் சிக்கல்களை ஆராயும் நோக்கத்துடன் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஒரே பல்கலைக்கழகம் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம். தமிழக அரசுச் சட்டம் 15-ன் கீழ் 1984-ல் இப்பல்கலைக்கழகம் மகளிரியலைப் (Women's studies) பொறுத்தமட்டிலும் மாநில முறைமையிலான தொடர்பு படுத்தும் பொறுப்பு, ஆலோசனை நல்கும் பணிகள் ஆய்வு ஏற்றுச் செய்தல் ஆகிய நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும் சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யவும், ஆசிரியர்களைப் பரிமாறிக்கொள்ளவும் தக்க விதத்தில் காலப்போக்கில் அனைத்துலகக் கல்வி மையமாக உருவாகும் கருத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்கான மாதிரியை (Model) உருவாக்கிய டாக்டர் மால்கம் ஆதிசேஷையாவின் தலைமையில் இயங்கிய உயர்மட்டக்குழுவின் பரிந்துரைப்படி இப்பல்கலைக்கழகம் மாநிலத்திலுள்ள அனைத்துப் பெண்கள் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பக் கூடங்களுக்கு ஆலோசனை வழங்கும் மையமாகவும் பல்கலைக்கழகம் அமைய வேண்டிய இடம் எளிதில் சென்றடையக்கூடிய ஓர் இடமாக இருக்க வேண்டுமென்பதும் ஆகும். ஆனால் பல்கலைக்கழகம் தற்போது கோடைக்கானலில் இயங்குவதால் இப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இயலவில்லை.

பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றவும் கீழ்க்காணும் பல்வேறு காரணங்களுக்காகவும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தைச் சென்னை நகருக்குக் கொண்டு செல்வது சாலச் சிறந்தது என அரசு தீர்மானித்துள்ளது :

(1) பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளும் மேற்கொண்டுள்ள செயல்பாட்டுத் திட்டங்கள் (Projects) பெண்கள் முன்னேற்றத்தையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஆனால்,

இச் செயல்பாடுகள், திட்டங்களின் முடிவுகளின் பலன்கள் மாநில முழுவதிலுமுள்ள பெருவாரியான பெண்களைச் சென்று அடைய முடிவதில்லை. மேலும் உதவியோ, ஆலோசனையோ பெற விரும்பும் பாதிக்கப்பட்ட பெண்கள், கொடைக்கானல் மிகவும் தூரத்தில் இருப்பதால், இங்கு வந்து பயன்பெற முடியாத சூழ்நிலையில் உள்ளனர்.

(2) பல்கலைக்கழகம் என்பது 'அறிஞர்கள் கூடும்' இடமாகும். ஆனால் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளிலும் தகுதி மற்றும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. பல துறைகளில் உள்ள நியமனங்களுக்கான தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் மீண்டும் மீண்டும் விளம்பரங்கள் கொடுத்துக்கொண்டே இருந்தாலும் நியமனங்கள் நிரப்பப்படமுடியாமலேயே இருக்கின்றன. இதனால் ஏற்படும் செலவுகளும் பல்கலைக்கழகத்தின் நிதிநிலையைப் பெரிதும் பாதிக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம் காணப்படும் இந்நாளில் ஏன் மேற்கண்ட நிலை நீடிக்கின்றது என்ற வினாவிற்குக் கீழ்க்காணும் விடைகள் மிகப் பொருத்தமானவையாயிருக்கும்.

(அ) நியமனங்களுக்கான தேர்வு செய்யப்படுபவர் மணமானவராயிருப்பின் அவர்கள் கணவன்மார்கள் இங்கு வந்து தங்கும் தகுதிக்கேற்ற வேலை தேடிக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்காளாவதால் நிரந்தர வேலையை ஏற்றுக் கொள்ள பெண்கள் தயங்குகின்றனர். ஏற்கெனவே அரசு வேலையிலிருப்பவர்களாகக் கணவன்மார்கள் இருந்தால் மாற்றல் (Transfer) வாங்கி இங்கு வந்து பணிபுரியும் அளவிற்கான மத்திய மாநில அரசு அலுவலகங்கள் மிகவும் குறைவு. எனவே மணமான குடும்பப்பெண்கள் குடும்பத்தைவிட்டு பிரிந்துவந்து வேலை செய்யவேண்டுமென்ற பட்சத்தில் அவர்கள் வேலையை ஏற்கத் துணிவதில்லை.

(ஆ) மணமாகாத பெண்களும் தாய் தந்தையரைச் சார்ந்து வாழ்வதால் மேற்கூறிய அதே பிரச்சினையை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. வேலையை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். அப்படியே துணிந்து வருகின்ற சிலரும் இங்கு நிலவும் விலைவாசி, வீட்டு வசதியின்மை போன்ற

காரணங்களால் மற்ற இடங்களில் எந்த வேலை கிடைத்தாலும் உடனே இந்த வேலையை விட்டு விடத் தயங்குவதில்லை.

(3) திறமையான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுவது மிகவும் அரிதாக உள்ளது. விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதற்கு மிக முக்கிய காரணம், கோடைக்கானலில் உயர்நிலைப்பள்ளிகள் மட்டுமே உள்ளது. பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பிற்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள கல்லூரி வசதிகள் இல்லை. சமவெளிப் பகுதிகளிலேயே தேவையான வகுப்புகளில் சேர்ந்து படிக்க பல்கலைக்கழக வசதிகள் இருப்பதால், பணவிரயம் செய்து கோடைக்கானல் வந்து மேற்படிப்பு படிக்க வைக்க பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புவதில்லை. எனவே விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் மாணவர்களைத் தேர்வு செய்வதில் எந்த அளவுகோலையும் (Selection Criteria) சரிவரச் செயல்படுத்த இயலாமல் இருக்கிறது.

(4) கோடைக்கானலுக்கு வருவதற்கு—ஊழியர்களாய் இருந்தாலும் சரி, மாணவர்களாய் இருந்தாலும் சரி—பின்வாங்குவதற்கு இன்னொரு காரணம் இங்கு நிலவிவரும் 'கடுங்குளிர்'. இத்தகைய வித்தியாசமான பழக்கமில்லாத தட்பவெட்ப நிலையினால் பல்வேறு நோக்கங்களுக்கும் மனக்கிலேசங்களுக்கும் இவர்கள் ஆளாகின்றனர்.

(5) இங்கு நிலவி வரும் கடுங்குளிரும் எளிதாகச் சென்றடைய முடியாத (Highly inaccessable) நிலையும் பல்கலைக்கழகம் அளிக்கின்ற பல்வேறு பயிற்சித் திட்டங்களிலோ அல்லது வகுப்புகளிலோ வந்து பொதுமக்கள் பயன் பெற இயலாவண்ணம் விளங்குகின்றனர். உதாரணமாக, சென்ற வருடம் இந்திய ஆட்சிப் பணி ( **I.A.S.**) தேர்வுக்கு பெண்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு விளம்பரங்கள் கொடுத்த போது வந்த ஒரு சில விண்ணப்பங்களும் ஏற்புடையவையாயில்லை.

(6) கோடைக்கானலில் 'கருத்தரங்குகள்' 'பணிமனைகள்' இவற்றை நடத்துவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஏனென்றால் சம்பந்தப்பட்ட துறைகளில் சிறப்பானவர்களோ

(Experts) அல்லது அழைக்கப்படும் சிறப்பு விருந்தினர்களோ (Guests) கோடைக்கானலுக்கு வரத் தயங்குவதற்கு முக்கியகாரணம் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய கடுமையான நீண்டநேர தொலைதூரப் பயணமாகும்.

(7) மேற்கூறிய இக்காரணங்களாலேயே பல்கலைக்கழக ஆட்சிக்குழு (Executive Council) கல்விக்குழு (Academic Comittee) மற்றும் நிதிக்குழு (Finance Commttee) கூட்டங்களை கோடைக்கானலில் நடத்த இயலாமல் இருக்கிறது. அப்படியே நடத்தினாலும் கலந்துகொள்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அதனாலேயே பல்கலைக்கழகம் இக்குழுக் கூட்டங்களை மிகுந்த பணச் செலவு செய்து சென்னையில் நடத்த வேண்டியுள்ளது.

(8) பல்கலைக்கழகத்திற்கென போதுமான கட்டிட வசதி இல்லாத காரணத்தினால் அருகிலுள்ள சில சிறிய வீடுகளை அதிக வாடகைக்கு எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. அவை வசதிக் குறைவாக இருப்பதால் ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது.

(9) பல்கலைக்கழகம் மாணவியர்களுக்கு மட்டுமே விடுதி வசதி அளிக்கின்றது. ஊழியர்கள் தாங்களாகவே தங்கள் வசிப்பிடங்களைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மழைக்காலம் முடிந்தவுடன் ஏற்படும் தீவிர தண்ணீர் பற்றாக் குறை, அடிக்கடி ஏற்படும் மின்சாரத் துண்டிப்பு, தொலைபேசித் துண்டிப்பு, பேருந்து வசதியின்மை போன்ற பல்வேறு காரணங்களினால் இங்கு அன்றாட வாழ்க்கையே ஒரு பிரச்சினையாகி விடுகிறது.

(10) கோடைக்கானல் ஒரு சுற்றுலா மையமாக விளங்குவதால் இங்கு வசிக்கும் நிரந்தர மக்கள் தொகை குறைவு. ஆகையால் ஆய்வுக் திட்டங்களை (Research Projects) மேற்கொண்டிருப்பவர்கள் சமவெளிப் பிரதேசங்களுக்குச் சென்று தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாயமான சூழ்நிலைக்கு ஆளாகின்றனர். இதனல் காலம் மற்றும் பணவிரயம் மிகவும் அதிகம்.

[டாக்டர் க. அன்பழகன்]



(11) மழைக்காலங்களில் தகவல் சாதனங்கள் பெரிய அளவில் பாதிக்கப்படுவதால் இவை பல்கலைக் கழகத்தின் இயக்கத்தையும் வளர்ச்சியையும் கட்டுப் படுத்துகின்றன.

(12) பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (U.G.C.) மைய உதவியைப் பெறுவதில் ஏற்படும் கால தாமதம் போதுமான சொந்தக் கட்டிடங்கள் இல்லாமையும் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதுமே காரணங்களாகக் காட்டப்படுகின்றன. இந்த இரு குறைகளையும் நிவர்த்தி செய்வதில் பல்கலைக்கழகம் அமையப் பெற்றுள்ள கோடைக் கானல் மலைப்பகுதி பெருந்தடையாக உள்ளது.

பல்கலைக்கழகம் எளிதில் சென்றடையக்கூடிய ஒரு இடத்தில் இயங்க வேண்டுமென்பது திரு. மால்கம் ஆதிசேஷையாவின் தலைமையில் இயங்கிய உயர்மட்டக் குழுவின் (Expert Committee) முக்கியப் பரிந்துரையாகும். இக்கட்டத்தில் குழுவின் பரிந்துரையை மேற்கோளாகக் காட்டுமிடத்து இதன் முக்கியத்துவம் நன்கு புலனாகும்.

"After reviewing all these suggested locations, it is recommended that the Government choose an area for the location of the University on the basis of the following criteria;

Accessibility-the place chosen for the University should be accessible by road and rail (and if possible by air also).

Weather—the weather of the locality should be such as to make possible year round work-as the three functions of the University cannot be interrupted by long vacations to cover extreme climatic conditions.

Availability of 100 hectares of land and adequate water supply for the University and its garden.

Library facilities-the University should have access to libraries outside the locality.

Intellectual and cultural contacts.

The location should be such as to afford the University staff and scholars opportunities for intellectual contact and cultural activities with others in the locality. Intellectual isolation should be avoided at all costs".

மேற்கூறிய காரணங்களாலும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் கோடைக்கானலிருந்து சமவெளிப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்படவேண்டும் என்ற காரணத்தைக் கொண்டும், கோடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் சென்னை நகருக்கு மாற்றப்படவுள்ளது.

*10.00 மணி*

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த விரிவான அறிக்கையை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அந்த விரிவான அறிக்கையில் சொல்லக்கூடிய காரணங்கள் கொஞ்சமும் பொருத்தம் உள்ளதாகத் தெரியவில்லை. அதிலே சொல்கிறார்கள்: கணவனைப் பிரிந்து அங்கே வந்து வேலை பாாப்பதற்கு யாரும் தயாராக இல்லை என்று ஒரு காரணம் சொல்கிறார்கள். அதேபோல் மணமாகாத பெண்கள், தாய, தந்தையரைப் பிரிந்து வந்து செயல்பட முடியாது என்று சொல்கிறார்கள். அதேபோல் திறமையான மாணவர்கள் யாரும் வரவில்லை என்று சொல்கிறார்கள். கடந்த 6, 7 ஆண்டுகளாக அந்தப் பல்கலைக் கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியானால் அதனுடைய முழு விவரமும் இந்த அறிக்கையில் கொடுத்திருந்தால் எங்களுக்குப் புரிந்து கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். மேலும் அப்படியே இருந்தாலும் அந்த மாவட்டத்தைவிட்டு நீங்கள் அதை மாற்றுவது என்கிறபோது அந்தப் பகுதி மக்களுடைய பெரிய அதிருப்திக்கு ஆளாகவேண்டிய நிலைமை வரும். எனவே எங்களைப் போன்றவர்களை எல்லாம் ஏன், நீங்கள் அதைத் தடுத்து நிறுத்தக்கூடாது என்று கேட்கிறார்கள். ஆகவே தயவுசெய்து தவிர்க்க முடியாத காரணத்தால் அதை மாற்றவேண்டிய சூழ்நிலை வந்தால் — அப்படி மாற்றவேண்டிய தேவையில்லை. அப்படியே மாற்ற வேண்டும் என்ற சூழ்நிலை வந்தாலும் — பழனியிலே தரைப்பகுதியிலே நல்ல வசதி வாய்ப்பு இருக்கிறது. மேலும் தரைப்பகுதிதான் அதற்குப் பொருத்தம் என்றும் சொல்கிறீர்கள். எனவே அதைப் பழனியிலே வையுங்கள், அல்லது திண்டுக்கல் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால் திண்டுக்கல்லிலே வையுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் நீங்கள் சென்னைக்குக் கொண்டு வருவது என்பது அவ்வளவு பொருத்தம் இல்லை. அதைக் கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தைப்பற்றி இது எந்த நோக்கத்திற்காக, எந்த

கவன ஈர்ப்பு

1990 மே 7] [டாக்டர். க. அன்பழகன்]

அடிப்படையில் அமைந்தது என்பதை விளங்கிக் கொண்ட பின்பு கேள்வி கேட்டதாக நான் கருத முடியாததற்கு மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் என்று பெயரிட்டு அழைக்கப்படுகிற காரணத்தால் பெண்களே இருந்து நடத்தவேண்டும் என்ற ஒரு கருத்து மட்டுமே அதிலே இடம் பெற்றிருப்பதாகக் கருதலாகாது. ஆனால் இது மக ளிரைப் பற்றிய தனிப்பட்ட பிரச்சினைகள், சமூகப் பிரச் சினைகள், அவர்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதற்காக, மகளிர் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்வதைப ஊக்கப்படுத்து வதற்காக ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகம், இதற்கு ஒரு சுற்றுச் சார்பு தேவைப்படுகிறது. எப்படிப்பட்ட சுற்றுச் சார்பு என்றால் ஆயிரக்கணக்கான மகளிர் படித்து வெளி வரக்கூடிய கல்லூரிகளோ, பல்கலைக் கழகமோ அந்தச் சூழ் நிலையில் இருக்குமானால்தான் இந்தப் பல்கலைக் கழகத் திற்கு ஊக்கம் கிடைக்கும். இல்லை என்றால் அந்தப் பல்கலைக் கழகத்தின் சுற்று வட்டாரத்தில் மகளிர் கல்லூரிகள் ஏராளமாக இல்லாத இடத்திலேயும், மிகப் பெரிய நூலகம் ஆராய்ச்சிக் கூடங்கள் இவை இல்லாத இடங்களி லேயும் இது சிறப்புறாது. மேலும் மகளிர் பணியாற்ற வரு வார்களேயானால், அவர்களுடைய குடும்பநிலை பாதிக்கப் படாத சூழ்நிலை இருக்கக்கூடிய இடத்திலே இந்தப் பல் கலைக் கழகம் அமைந்தால் தான் இதற்குரிய வளர்ச்சி ஏற் படும். கல்வித் துறையிலே நிபுணர்களாக இருக்கக் கூடிய மால்கம் ஆதிசேஷையா அவர்கள், அந்தப் பல்கலைக் கழ கத்தினுடைய இன்றைய துணை வேந்தர் அவர்கள், அந்த பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிக் குழு உறுப்பினர்கள் ஆகிய அத்தனைபேருமே இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் கள். அந்தப் பல்கலைக் கழகத்திலே இப்போது பணியாற்று கிறவர்கள், சென்னையில் இந்தப் பல்கலைக் கழகம் அமையு மேயானால் எங்களுடைய பணி சிறாகும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இது ஒன்றும் மாவட்டத்திற்கு என தரப் பட்ட பல்கலைக் கழகம் அல்ல. ஆகவே மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கருதுவதுபோல் இது வட்டார வளர்ச்சிக்கு வழி செய்யக்கூடிய தொழிற்சாலை அல்ல.

திரு. எல். மூக்கையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்கானலில் இருக்கக்கூடிய அந்த அன்னை தெரசா பல்கலைக் கழகத்தைச் சென்னைக்கு மாற்றுவதற்குப் பதிலாக, தரைப்பகுதியாக பெரியகுளம் இருக்கின்ற கார ணத்தால் பெரியகுளத்தில் அதை அமைத்தால் நன்றாக இருக்கும். பெரியகுளத்தில் மகளிர் கல்லூரி இருக்கிறது. ஆயிரக்கணக்கான அரசு புறம்போக்கு நிலங்கள் அங்கே இருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் ஏராளமாக மகளிர்

கல்லூரிகள் இருக்கின்றன. டாக்டர்கள் எல்லாம் தலைநகரில்தான் பணியாற்றுவோம் என்று சொன்னதைபோல, இன்றையதினம் எங்கே பணியாற்றுகிறீர்கள் என்று கேட்டால் தலைநகருக்குச் சென்றால் நல்லதாக இருக்கும் என்றுதான் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். எனவே கிராமப் பகுதியில் இருக்கக்கூடியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற வகையில் அந்த அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை மீண்டும் மறுபரிசிலனை செய்து பெரியகுளம் நகரத்திற்கு அருகாமையில் ஆயிரக்கணக்கான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் அமைத்தால் நல்லது. அங்கே பல்வேறு மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் பல்வேறு மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன. எனவே மீண்டும் மறுபரிசிலனை செய்து அந்த வகையில் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருந்தாலும் போதாது. இன்னும் சொல்லப் போனால் ஏராளமான நீர் வளம். கட்டட வளம் இருந்தால் கூடப் போதாது. மகளிர் பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்கள், தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு உருவாக்கித் தீரவேண்டும். இது வெறும் பொதுக் கல்வி அமைப்பு மட்டுமல்ல. இது ஒரு தனித் தன்மை உள்ள அமைப்பு. இதிலே ஹானரரியாகக் கூட அவ்வப்போது வந்து கலந்து மகளிரைப் பற்றிய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆய்வு நடத்தக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கவேண்டும். அந்த வாய்ப்பு இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சென்னை மாநகரத்தில் கிடைக்கிற அளவுக்கு மதுரை நகரத்திலேயும் கிடைக்க முடியாது. கோவை மாநகரத்திலும் கூட அந்த அளவுக்கு வாய்ப்பு கிடைக்க முடியாது. இந்தப் பல்கலைக் கழகம் ஒரு புதிய அனுபவம். மற்ற பல்கலைக் கழகம் போல் அல்ல இது. மதுரைப் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் போன்ற ஒரு பல்கலைக் கழகம் அல்ல இது. இந்த ஆராய்ச்சித் துறையில் இது வரையில் அவர்கள் எந்த அளவுக்குச் சிறப்புப் பெற்று இருக்க வேண்டுமோ அந்த அளவுக்குப் பெற முடியாத ஒரு இக்கட்டான நிலைமை இருப்பதன் காரணமாகத்தான், அந்த முயற்சி வெற்றிகரமாக அமைவதற்காகத் தான், இந்தப் பல்கலைக் கழகம் சென்னைக்கு வருகிறது. எனவேதான் அது சென்னைக்கு வரவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. மற்றும் ஒன்று, இதிலே பணியாற்றுகிறவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

முன்னர் ஏற்றுக் கொண்டவர்கள் பணியாற்ற வராத நிலைமையும் உண்டு. அவர்களுக்குக் கோடைக்கானலில் கட்டடம் இல்லை என்பதால் கட்டடங்களை மட்டும் மலைக்குக் கீழே வழங்கிவிட்டால் போதாது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இந்தப் பல்கலைக் கழகத்தை ஒரு தனித்தன்மை உள்ளதாக வளர வழி செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் 'நான்-அஃபிலியேட்டிங்' என்று சொல்லப்படுகிற ஒரு கருத்து மட்டும் இதற்குத் தனித் தன்மையல்ல. மகளிர் பேரளவினர் தொடர்பு கொண்டு, பங்கேற்கும் வகையில் அமைவதே இதன் தனிச் சிறப்பு ஆகும். பிரச்சினைகளைப் பற்றி அணுகி ஆராய்ந்து அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய பலன் பரவலாக மகளிர் சமுதாயத்திற்குக் கிடைப்பதற்கு இது முதல் கட்டத்தில் உருவாகி இருப்பதன் காரணத்தால் சென்னையில் வைத்து நடத்துவதைத் தவிர இந்தப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு வேறு வழியில்லை. பெரிய குளத்திற்கு என்னசெய்யலாம் என்பது பற்றி ஆராயப்படும்.

(ஆ) கண்ணகி கோயில் கேரளாவிற்குச் சொந்தமென அம்மாநில வனத்துறை அமைச்சர் பேசியிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு, அ. இரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, "தமிழகத்தின் எல்லையில் உள்ள கண்ணகி கோயில் கேரளாவிற்கு சொந்தம் என்று கேரள மாநில வனத்துறை அமைச்சர் கூறியிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கலைஞரின் தி. மு. க. அரசு, மீண்டும் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு, பழுதடைந்து கிடக்கும் பழமையான திருக்கோயில்களைப் புதுப்பித்து, சீரமைக்கும் பணிகளில்

முன்னர் ஏற்றுக் கொண்டவர்கள் பணியாற்ற வராத நிலைமையும் உண்டு. அவர்களுக்குக் கோடைக்கானலில் கட்டடம் இல்லை என்பதால் கட்டடங்களை மட்டும் மலைக்குக் கீழே வழங்கிவிட்டால் போதாது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இந்தப் பல்கலைக் கழகத்தை ஒரு தனித்தன்மை உள்ளதாக வளர வழி செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் 'நான்-அஃபிலியேட்டிங்' என்று சொல்லப்படுகிற ஒரு கருத்து மட்டும் இதற்குத் தனித்தன்மையல்ல. மகளிர் பேரளவினர் தொடர்பு கொண்டு, பங்கேற்கும் வகையில் அமைவதே இதன் தனிச் சிறப்பு ஆகும். பிரச்சினைகளைப் பற்றி அணுகி ஆராய்ந்து அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய பலன் பரவலாக மகளிர் சமுதாயத்திற்குக் கிடைப்பதற்கு இது முதல் கட்டத்தில் உருவாகி இருப்பதன் காரணத்தால் சென்னையில் வைத்து நடத்துவதைத் தவிர இந்தப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு வேறு வழியில்லை. பெரிய குளத்திற்கு என்னசெய்யலாம் என்பது பற்றி ஆராயப்படும்.

(ஆ) கண்ணகி கோயில் கேரளாவிற்குச் சொந்தமென அம்மாநில வனத்துறை அமைச்சர் பேசியிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு, அ. இரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, "தமிழகத்தின் எல்லையில் உள்ள கண்ணகி கோயில் கேரளாவிற்கு சொந்தம் என்று கேரள மாநில வனத்துறை அமைச்சர் கூறியிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கலைஞரின் தி. மு. க. அரசு, மீண்டும் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு, பழுதடைந்து கிடக்கும் பழமையான திருக்கோயில்களைப் புதுப்பித்து, சீரமைக்கும் பணிகளில்

முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. தமிழக எல்லையில் தமிழ்ப் பேரரசன் சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்ட, அதன் பிறகு சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட கண்ணகி கோயில், இன்று பாழடைந்து கிடக்கிறது. இந்தக் கோயிலைப் புதுப்பித்து, தமிழனின் பழம்பெருமையை மீண்டும் நிலை பெற்றிடச்செய்ய வேண்டும் என்பதில் மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் உள்ளுணர்வு வேறு யாருடைய உணர்விலும் கிஞ்சிற்றும் குறைந்ததில்லை.

இந்த அமைச்சரவையில் அறநிலையத்துறை, வனத்துறை அமைச்சர் என்ற வகையில் கம்பம் சட்டமன்ற தொகுதியில் 30—5—1989-ல் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, கண்ணகி கோயில் இருக்கின்ற மலை உச்சிப் பகுதிக்கு சென்று பார்வையிட்டேன். இந்த திருக்கோயில் மிகவும் பாழடைந்த நிலையில் இருப்பதைப் பார்த்தேன். அன்றைய தினம் மதுரையில் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்தபோது என்னுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தேன் :—

(1) கண்ணகி கோயில் நமக்கு வேண்டுமானால் புதிதாகத்தான் கட்ட வேண்டும்.

(2) ஆதியில் சேரன் செங்குட்டுவன் கட்டிய அந்த இடத்தில்தான் அமைக்க வேண்டும்.

(3) வண்ணாத்திப்பாறை அடிவாரத்தில் கண்ணகி கோயில் அமைக்க அ. தி. மு. க. அரசு உருவாக்கிய திட்டம் ஏற்புடையது அல்ல.

இதைத் தொடர்ந்து கேரள வனத்துறை அமைச்சருடனும், அறநிலையத்துறை அமைச்சருடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. 7—3—1990-ல் நானும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் திருவனந்தபுரம் சென்று வனத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜோசப் அவர்களைச் சந்தித்தோம். அந்தப் பேச்சு வார்த்தையின் போதுதான் கேரள வனத்துறை அமைச்சரும், நானும் சேர்ந்து கண்ணகி கோயில் பகுதிக்குச் சென்று, பார்வையிட்டு, ஒரு முடிவுக்கு வர முயற்சிக்கலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

திருவனந்தபுரத்தில் கேரளா நிதித்துறை, அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு விசுவநாத மேனன் அவர்களையும், வேறு சில அமைச்சர்களையும் சந்தித்து பேசினேன். கடந்த மார்ச்சு 7-ந்தேதி எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப, 13-4-90ல், கேரள வனத்துறை அமைச்சரும், நானும் கண்ணகி கோயில் இடத்தைப் பார்வையிட்டோம். கருத்துப் பரிமாற்றமும் செய்து கொண்டோம்.

நம்மிடம் இருக்கும் கடந்த 100 ஆண்டுகளுக்குரிய ஆவணங்களின் அடிப்படையில், கண்ணகி கோயில், தமிழக-கேரள காப்புக்காடு எல்லையில், நமது பகுதியில்தான் இடம் பெற்று இருக்கிறது என்பதில் ஐயப்பாடு ஏதும் இல்லை.

10-05 மணி

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த விவர அறிக்கையைப் படித்ததற்குப் பிறகும் எனக்குக் கீழ்க்கண்ட ஐயங்கள் ஏற்படுகின்றன. மார்ச் மாதம் 14-ந் தேதி, நமது மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுடன், கேரளத்தினுடைய வனத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஜோசப் அவர்களைச் சந்தித்துப் பேசிய போது அங்கேயிருக்கிற அந்த கண்ணகி கோட்டத்தைப் பற்றி, அந்தக் கோயிலைப் பற்றிப் பேசவில்லை என்றும், கஞ்சா செடி வளர்ப்பதைத் தடுப்பது பற்றியும், சந்தன மரங்களைக் கடத்துவதைத் தடுப்பதைப் பற்றியும் தான் பேசினார்கள் என்றுதான் அங்கே சொல்கிறார்கள். அப்போது கோயிலுக்கு வரும் பெரும்பாலான பக்தர்களையோ, பத்திரிகை நிருபர்களையோ, புகைப்படக்காரர்களையோ அனுமதிக்க வில்லை என்றும், அதனாலே அவர்களுக்கு உள்ளே என்ன பேச்சு வார்த்தை நடந்தது என்றே தெரியாது என்றும் அந்த மக்கள் சொல்கிறார்கள். கேரள அமைச்சர், 18வது நூற்றாண்டு வரை அந்த இடம் எங்களுக்குச் சொந்தமாக இருந்தது என்று ஆவணங்கள் இருக்கின்றன. அப்படியே ஏதாவது பேசுவதாக இருந்தாலும் கூட, இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர்களோ, இல்லையென்றால் மத்திய அமைச்சரோதான் பேசவேண்டுமே தவிர, வனத்துறை அமைச்சர்கள் இதைப்பற்றிப் பேசித் தீர்க்க முடியாது என்ற பொருளில் அங்கே சொல்லியிருக்கிறார்கள். அதோடு, திரு. கோபால், எம். பி., அவர்கள் தினமலரில் வந்திருக்கின்ற ஒரு நறுக்கை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கண்ணகி கோயிலை நாம் எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாக நிலம் கொடுப்போம் என்று பேசியிருப்பதாகவும் சொல்கிறார்கள். இவைகள் எல்லாம் அந்தப் பகுதியில் இருக்கிற பக்தர்கள், நம்மைப் போல கண்ணகி மீது பக்தியாக இருப்பவர்களுக்கு மிகுந்த சஞ்சலத்தை ஏற்படுத்தி இருக்கிறதே, அதுபற்றிய விளக்கத்தை நான் கேட்டு, அடுத்து ஒரு விளக்கத்தையும் கேட்க வாய்ப்பளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** 13—4—1990-ல் கேரள வனத்துறை அமைச்சர் அவர்களும், தமிழக வனத்துறை அமைச்சராகிய நானும் தேக்கடியில் சந்தித்து, அங்கேயிருந்த கண்ணகி கோயில் இருக்கிற அந்த மலைப்பகுதிக்குப் பார்வையிடுவதற்காகச் சென்றோம். ஏற்கெனவே

கவன ஈர்ப்பு

[திரு. கே. பி. கந்தசாமி] [1990 மே 7

அந்த மாதம் 7-ந்தேதி, திருவனந்தபுரத்தில், நானும் வனத் துறை அதிகாரிகளும் அதுபோல, அறநிலையத்துறை அதிகாரி களும் என்னோடு வந்து, அங்கே வனத்துறை அமைச்சரை யும் நிதித்துறை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு விஸ்வநாத மேனன் அவர்களையும் சந்தித்தோம். 7-ம்தேதி வனத்துறை அமைச்சரோடு பேசியபோது, நாங்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொண் டார்கள். அவராகவே தான், நாங்கள் இருவரும் அங்கே சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு அதற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வரலாமே என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதன்படிதான் நாங்கள் அங்கே சென்றோம். இதற்கிடையில் கேரள சட்டசபையில் இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டது. அந்தப் பிரச்சினையைப் பற்றி, கேள்வி எழுப்பப்பட்டபோது, கேரள வனத்துறை அமைச்சர் அவர்கள், இந்த பிரச்சினையில் இதுபற்றி டிஸ்பியூட் இல்லை, தகராறு இல்லை. கேரள அரசுக்கும் தமிழ்நாட்டுக்கும் தகராறு இல்லை என்பது போல வும், இது முடிந்த காரியம் என்றும், கண்ணகி கோயில் கேரள எல்லையில்தான் இருக்கிறது என்பதுபோல ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தேக் கடிக்கு வந்தபோது அங்கே இருவரும் சேர்ந்து சென்று, கண்ணகி கோயிலைப் பார்வையிடவேண்டுமா என்ற .ஒரு கேள்வியை எழுப்பினார்கள். நான் சொன்னேன். இருவரும் இதுவரை வந்துவிட்டோம், இதற்குப் பிறகு சேர்ந்து பார்வை யிடாமல் போனால் நன்றாக இருக்காது என்று நான் சொல்லி சொல்லி, அதை அவர் ஏற்றுக் கொண்டு இருவரும் பார்வை யிட்டோம். அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க அதிக மான அளவில் நிருபர்களையோ, புகைப்படக்காரர்களையோ நாங்கள் அழைத்துச் செல்லவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10-10 மணி.

அதற்குப் பிறகு, அப்போதும் நான் அவர்களிடத்திலே கேட் டேன். இது சம்பந்தமாக உங்களிடத்திலே, அதாவது இது உங்களுடைய எல்லையிலேதான் இருக்கிறது. கண்ணகி கோயில் இருந்த இடம், இப்போது அப்படி வழிபடத் தக்க அளவுக்கு உள்ள இடமாக இல்லை. இடிந்த சிலைகள் தான் அங்கே இருக்கின்றன. இருந்தாலும் அந்த இடம் கேரளாவினுடைய எல்லையிலே தான் இருக்கிறது என்று சொல்லும் அளவுக்கு ஆவணம் இருக்கிறதா என்று கேட்டேன். அவர்கள் தேடித் தேடி அதிகாரிகளிடத்தில் கேட்ட பிறகு இறுதியாகக் கொடுத்தது. டைகர் சேங்க்சுவரி பக்கத்திலே இருக்கிற, புலிகள் காப்பகத்தினுடைய வரைபடத்தை

அங்கே போட்டிருக்கிறார்கள். அந்த வரைபடத்திலே கேரள எல்லையிலே கண்ணகி கோட்டம் இருப்பதாகக் காட்டி யிருக்கிறார்கள். அது கேரள அரசு தயாரித்த ஒரு படம் அது தவிர வேறு ஆவணம் இருக்கிறதா என்று கேட்டேன். அவர்களிடத்தில் அப்படி ஆவணம் ஏதும் இல்லையென்று தான் சொன்னார்கள்.

ஆனால், இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய துணை தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்லும்போது முதலமைச்சர்கள் மட்டத்தில் தானே, இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசி தீர்க்க முடியும் வனத்துறை அமைச்சருக்கு அங்கே என்ன வேலை என்ற கேள்வியை எழுப்பினார்கள். ஏனென்றால் வனத் துறை அமைச்சர்களுடைய துறை இரண்டு எல்லையிலும் அது இருக் கின்ற இடம். கேரள வனத் துறை, அது போல தமிழக வனத் துறை இருக்கிற இடம் அது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப்பிரச்சினையை, நம்முடைய மாநிலத்தினுடைய அறநிலையத்துறை அமைச் சராக, வனத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு கேரள அரசோடு தொடர்பு கொண்டபோது நான் தெளி வாகச் சொல்லியிருக்கிறேன். தமிழக முதலமைச்சருடைய உத்தரவின்பேரில் முதலமைச்சர்கள் சந்தித்துப் பேசுவதற்கு முன்பாக 'வாட் ஆர் தி இஸ்யூஸ்', உள்ளபடியே உள்ள பிரச்சினைகள் என்னென்ன என்பதை திட்டவட்டமாக வரை யறுப்பதற்கு தான் கேரள வனத் துறை அமைச்சரும், தமிழக வனத் துறை அமைச்சரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தோம், இந்தப் பிரச்சினையை நாங்களாகவே தீர்த்து விட முடியும் என்ற நம்பிக்கை இல்லவே இல்லை. நாங்கள் முதலில் சந்தித்து பிரச்சினைகள் என்னென்ன என்பதைப் பற்றி முடிவு செய்த பிறகு முதலமைச்சர்கள் மட்டத்தில் பேசி, பிறகு இந்திய நாட்டினுடைய பிரதமர் மட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டால்தான், பரிசீலிக்கப்பட்டால்தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு வரும் என்று நான் கருது கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்லும்போது திரு. கோபால் ஏதோ ஒரு கருத்தைச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். நான் முதன் முதலாக அங்கே சென்றது 30—5—1989 அன்று ஆகும். அன்றைக்குத்தான் கம்பம் பகுதிக்கு நானாகவே சென்று பார்வை யிட்டேன். அப்படி பார்வையிட்டு திரும்பியபோது அந்த விவகாரத்தினுடைய தன்மை பற்றி ஆழம் பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. இருந்தாலும் என்னிடத்தில் அங்கே

ஒன்றைச் சொன்னார்கள். அங்கே எம். ஜி. ஆர். காலத்திலே, இந்தக் கோவிலை அங்கே கட்டுவதற்குப் பதிலாக, மலை உச்சியில் கட்டுவதற்குப் பதிலாக வண்ணாத்திப் பாறையின் அடிவாரத்தில் சுற்றுலாத்துறை மூலமாக கண்ணகிக் கோட்டம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அது மத்திய அரசால் நிராகரிக்கப் பட்டது. நான் நிருபர்களிடத்திலே ஒன்றைச் சொன்னேன். கண்ணகிக் கோட்டம் என்று சுற்றுலாத்துறை மூலமாக எங்கே வேண்டுமானாலும் அமைக்கலாம். பூம்புகார் கோட்டம் அமைத் திருக்கிறோம், அது போல இங்கே வள்ளுவர் கோட்டம் அமைத்திருக்கிறோம். அதுபோல கண்ணகி கோட்டம் சுற்றுலாப் பயணிகளுக்காக எங்கே வேண்டுமானாலும் அமைக்கலாம். வண்ணாத்திப்பாறையின் அடிவாரத்திலும் அமைக்கலாம் என்று. ஆனால் கண்ணகிக் கோவில் என்று அமைக்க வேண்டுமென்றால் அது எங்கே முதலில் கட்டப்பட்டதோ, அந்த மலையின் உச்சியிலேதான் கட்டப்பட வேண்டுமென்ற கருத்தை நான் சொன்னேன். இது தகராறாக இருந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை, அந்த இடம் கேரள அரசு இன்றைக்கு சொல்லுகின்றபடி, அவர்களுடைய எல்லையிலே இருக்குமேயானால், அவர்களிடத்திலேயிருந்து நாம் கேட்டு வாங்க முடியும்.

10-15 மணி.

அப்படிக் கேட்டு வாங்கும்போது, வாட்டர் ஷெட்லைனை தங்களுடைய எல்லையைத் தீர்மானிக்கின்ற ஒரு அளவுகோல் என்று எடுத்துக்கொள்கிறார்கள். அப்படியானால் இங்கே அரை ஏக்கர் நிலத்தை அல்லது ஒரு ஏக்கர் நிலத்தை அவர்கள் நமக்காக விட்டுத்தரக்கூடிய நிலைமை இருந்தால், அதற்குப் பதிலாக பக்கத்திலுள்ள மலையிலே அரை ஏக்கர் நிலமோ அல்லது ஒரு ஏக்கர் நிலமோ நாம் கொடுத்துவிட லாம். 'கொடுத்துவிடலாம்' என்றுதான் சொன்னேன். விட்டுக் கொடுத்துவிடுவோம் என்று சொல்லவில்லை. அரை ஏக்கர் நிலமென்பது பெரிய காரியமல்ல. கண்ணகிக் கோயில் தான் முக்கியம். அதற்குப் பிறகு நம்முடைய ஆவணங் களிலே பார்க்கிறபோது 1883-லே இருந்து நம்மிடத்திலே மேப் இருக்கிறது. அந்தக் காலத்திலே திருவிதாங்கூர் ஸ்டேட், மெட்ராஸ் பிரசிடென்சி ஆகிய 2 மாநிலங்களுக் கிடையே தீர்மானிக்கப்பட்ட வரைபடம் நம்மிடத்திலே இருக்கிறது. அதுமட்டுமல்ல, 1975-76-லே சர்வேயர் ஜெனரல் ஆஃப் இந்தியா இந்த இடத்தைச் சர்வே செய்திருக் கிறார்கள். அதற்கான அரசியல் ரிக்கார்ட்ஸ் நம்முடைய கையிலே இல்லை. அந்த சர்வே-படியும் இந்த இடம்

தமிழக எல்லையில்தான் இருக்கிறது என்பது தெரிய வருகிறது. ஆகவே கண்ணகி கோயில் இருந்த இடம் நம்முடைய எல்லையிலேதான், அந்தக் கேரள-தமிழக எல்லைப் பகுதியிலே, நம்முடைய பகுதியிலே இருக்கிறதென்பதை இப்போது நாங்கள் அறிய வருகின்றோம். ஆகவே, மேற்கொண்டு என்ன செய்வதென்பதைப் பற்றி நாம் தீர்மானிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சித்திரா பவுர்ணமி 8, 9, 10 தேதிகளிலே கொண்டாடப்பட இருக்கிறது. கம்பம், கூடலூர் பகுதிகளிலிருந்து மட்டுமல்ல, ஈழத்திலிருந்தும், கேரளத்திலிருந்தும், மலேயா திருநாட்டிலிருந்தும் ஆட்கள் அங்கே வருவார்கள். ஒரு விழா நடைபெறுகிறபோது, நானும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராக இங்கே இருந்த திரு. நெடுமாறன் அவர்களும் அங்கே சென்றபோது போலீஸ் கெடுபிடி அதிகமாக இருந்தது. அதைப்போல இந்தத் தடவை இருந்தால், மக்களுக்கு கஷ்டம் ஏற்படும். நம்முடைய பெண்கள் குத்துவிளக்கு பூஜை என்று வைத்து, வருகின்றவர்களுக்கு அன்னதானம் செய்வார்கள். மணிமேகலை அட்சய பாத்திரம் என்று ஒன்றை வைத்து, ஊரிலே இருக்கிற மக்கள் எல்லாம் புளியோதரை போன்றவற்றைக் கொண்டு வந்து அதிலே போட்டு, வருகின்ற மக்களுக்கெல்லாம், ஆயிரக்கணக்கான மக்கள் வந்தாலும், அவர்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்க, அது அள்ள அள்ளக் குறையாத மணிமேகலையின் அட்சய பாத்திரம் என்பதைக் காட்ட, ஒரு பக்கம் எடுத்துக் கொண்டேயிருப்பார்கள். இன்னொரு பக்கம் போட்டுக்கொண்டே இருப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் அப்படிப்பட்ட அட்சய பாத்திரத்தை சென்னைக்கும் கொஞ்சம் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே கேள்வி பதில் கூட அள்ள அள்ளக் குறையாமல் போய்க்கொண்டிருக்கிறது. (சிரிப்பு)

**திரு. குமரி அனந்தன் :** சென்னையிலே கூட ஒரு நாளை நாம் குறிப்பிட்டு, ஒரு பக்கத்தில் போடுகிற மக்கள் போட்டாலும், இன்னொரு பக்கத்தில் எடுக்கிற மக்கள் எடுக்கலாம் என்று சொன்னால் ஒரு அட்சய பாத்திரத்தைக் கொண்டு வந்துவிடலாம். மாண்புமிகு பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு முதல்வரவர்களும் அதற்கு திட்டமிட்டால் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். எனவே இப்படி மணிமேகலையின் அட்சய பாத்திரம் என்று சொல்லக்கூடிய வகையில் அந்த பழைய சரித்திரங்களை

[திரு. குமரிஅனந்தன்]

நினைவூட்டுவதோடு, மழை வேண்டல், குழந்தை வேண்டல் போன்ற வேண்டுதல்களைக்கூட நிறைவேற்ற நிறைய பக்தர்கள் அங்கே வருகிறார்கள். எனவே அவர்களெல்லாம் இந்தத் தடவை யாவது எந்தவிதமான துன்பமும் இல்லாமல் போய், அந்தக் கண்ணகிக் கோட்டத்திலே, மங்கல தேவி என்று இன்றைக்கு அழைக்கப்பட்டாலும், அது கண்ணகிக் கோட்டம்தான், அந்தக் கண்ணகிக் கோட்டத்திற்குச் சென்று, அவர்கள் வழிபட வாய்ப்பு வேண்டும்.

10-20 மணி.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு அமைச்சரவர்கள் முதலிலே சொல்கிறபோது கேரள அமைச்சர் அப்படி சட்ட மன்றத்தில் பேசிவிட்டார். எங்களுடையதுதான் என்று சொல்லிவிட்டார் என்று சொன்ன நேரத்தில், ஒரு மறுப்பை வெளியிட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அது நிலைபேறுடையதாக ஆகிவிடக் கூடாது. இரண்டாவது நமது அமைச்சர் பெருமகனார் சொன்னார்கள். நான் இந்த பொறுப்புக்கு புதிதாக இருந்த காரணத்தினாலே பல்வேறு ஆவ ணங்களைப் பார்க்க முடியாத நிலையில், கண்ணகிக் கோவிலை நாம் எடுத்துக்கொண்டு, வேறு இடம் கொடுப்பது என்றோ, அல்லது அவர்கள் ஒரு ஏக்கரை எடுத்துக் கொண்டால் நாம் ஒரு ஏக்கர் எடுத்துக் கொள்வது என்றெல்லாம் பேசினோம் என்று சொன்னார்கள். நான் உங்களுக்குப் பணிவோடு தெரி வித்துக்கொள்கிறேன். கேரள அமைச்சர் சொன்னது எல்லா விதமான ஆதாரங்களுக்கும் மாறானது. கண்ணகிக் கோட்டம் இருக்கின்ற இடம் நம்முடையது என்பதற்கு ஏராளமான ஆதாரங் கள் இருக்கின்றன. ஒருவர் பூம்புகாரிலிருந்து கண்ணகி சென்ற வழியிலே நடந்து சென்று, கண்ணகி அங்கே வேப்ப மரத்தடியிலே தான் நின்று இருக்க வேண்டுமென்று நிரூபித்திருக்கிறார். அந்த கண்ணகியினுடைய சிலையின் ஒரு பகுதி தஞ்சைப் பல்கலைக் கழகத்திலே வைக்கப்பட்டு, அதை ஆராயும்போது அது சேரன் செங்குட்டுவன் காலத்து அளவுக்குக்கொண்டு போகப்பட்டிருக் கிறது, பாண்டியர்கால அளவுக்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறது. எனவே கண்ணகி கோட்டத்தைப் பொறுத்தவரையில் தாங்கள் தயவுசெய்து, தாங்கள் சொல்ல வேண்டுவது. இந்த அவையிலே நீங்கள் ஒன்றிரண்டு குறிப்புகள் கொடுத்தாலேயே கூட அது அவர்களுக்குச் சொந்தம் என்பது போலேயே வருவது போலே தெரிகிறது. இது ஒரு உணர்ச்சிவசப்பட்ட காரியம். நமக்கே சொந்தம் என்பதையும், நமது பக்தர்கள் அங்கே செல்வதற்குரிய வழிவகைகளைக் காண வேண்டும் என்பதையும் உங்கள் கவனத் துக்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே இது ஒரு உணர்ச்சிவயப்பட்ட காரியம் என்று குறிப்பிட்டார்கள். இதில் உண்மை நிலையை அறிவதற்கு உணர்ச்சிவயப்படாமல அணுக வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. கடந்த காலத்திலே கழக ஆட்சி இருந்தபோது, அவர்கள் குறிப்பிட்ட கண்ணகியினுடைய சிலையின் தலை ஒன்று கரந்தைப் புலவர் கோவிந்தராசன் அவர்களால் எங்களிடத்திலே கொண்டுவந்து காட்டப்பட்டு, அது இமயமலையிலே உள்ள கல்லை ஒத்ததாக இருக்கிறது : சேரன், செங்குட்டுவன் அங்கே எழுப்பிய ஆலயம், அங்கே அமைத்த சிலை இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறிய பிறகு அப்போது கழக அரசு அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தியது. அதற்குப் பிறகு இடைக்காலத்திலே எத்தகைய பேச்சுவார்த்தைகள், என்னென்ன வகையிலே நடைபெற்றன என்பன போன்ற விவரங்கள் என்னிடத்திலே இப்போது தெளிவாக இல்லை என்றாலும் கூட இந்தப் பிரச்சினையைக் கேரள சட்டசபையிலே எழுப்பி அதற்கு விளக்கமான பதில் அளித்ததாலும், இங்கே எழுப்பி அதற்கு விளக்கமான பதில் அளிப்பதாலும், அவரவர்களும் தங்களுக்குத் தான் சொந்தம் என்கின்ற வகையிலே ஒரு உறுதியான நிலையை எடுப்பதாலும், நல்லது நடக்காமல் போய்விடக் கூடும் என்று நான் அஞ்சுகின்றேன். எனினும் இங்கே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டதைத் துணையாகக் கொண்டு, விரைவிலே கேரள அரசோடு தொடர்புகொண்டு சுமுகமாக இந்தப் பிரச்சினை தீர்வதற்கு அரசு வழி காணும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையிலே நடைபெறுகின்ற சித்திரா பௌர்ணமி விழாவுக்கு மக்கள் செல்வதைப் பற்றி இங்கே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதே கேரளாவிலே இருக்கின்ற சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குத் தமிழ்நாட்டிலே இருந்து மக்கள் செல்ல எந்தத் தடையும் இல்லை. ஒருவேளை கேரளாவுக்குத் தான் கண்ணகி கோவில் சொந்தம் என்றாலும்கூட, கண்ணகி கோவிலுக்குச் செல்வோர்களைத் தடுக்க கேரள அரசு முன்வராது என்றே நான் நம்புகின்றேன். சொந்தம் யாருக்கு என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் : அதுவரையிலே சொந்தம் கொண்டாட வருகின்ற பக்தர்களை அவர்கள் தடுக்காமல் இருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். எனினும், விரைவிலே நான் கேரள முதலமைச்சரைச் சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு கோவையிலே ஏற்பட்டு இருக்கிறது. அவரிடத்திலே அது குறித்துப் பேசுவேன் என்று கூறி, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பேசுகிறபோது நான் கொடுத்து இருக்கின்ற குறிப்பிலே கூட அந்த இடம் அவர்களுக்குத் தான் சொந்தம் என்ற அளவிலே இருக்கின்றது என்பது போன்ற ஒரு தொணியில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதில் கடைசிப் பாராவைப் படித்துப் பார்த்தால் தெரியும். நம்மிடம் இருக்கின்ற, கடந்த 100 ஆண்டுகளுக்குரிய ஆவணங்களின் அடிப்படையில் கண்ணகி கோவில் தமிழக - கேரள காப்பு காட்டு எல்லையில் நமது பகுதியில்தான் இடம் பெற்று இருக்கின்றது என்பதிலே ஐயப்பாடு இல்லை என்று மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கத்திற்குப் பிறகு வினாத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்புத் தெய்வமாக கண்ணகியை நம் தமிழர்கள் கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கண்ணகியின் சிலை இருக்கின்ற அந்தப் பகுதிகளிலே தமிழர்கள் பெருவாரியாகச் செல்கின்றார்கள். அங்கே செல்வதற்கும், நமது தமிழக அரசானது—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல கேரள அரசோடு சுமுகமாக அதைப் பேசி—இங்கே வள்ளுவர் கோட்டத்தை எப்படி ஏற்படுத்தி வள்ளுவனுக்கு ஒரு பெருமையைத் தேடிக் கொடுத்ததோ, அதுபோல அங்கே கண்ணகிக்கு ஒரு கோட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்து, அதன் நிர்வாகத்தை நமது தமிழகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதைக் கேட்டு, அதைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மீண்டும் சொல்கிறேன். சுமுகமாக இது முடிவடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் சொல்ல விரும்புகிறேன். இன்று முதலே பக்தர்கள் அங்கே செல்வதற்கு சூழ்நிலை இருப்பதாக காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் என்னிடத்திலே அறிவித்தார்கள். இன்றைக்கே கேரள அரசோடு தொடர்புகொண்டு அவர்கள் வருவதற்கு எந்தத் தடையும் இல்லாமல் விழா காணுவதற்கோ, அங்கு இருக்கின்ற கண்ணகி இடத்தில் அவர்களுடைய முறைப்படி, அவர்களுடைய வழிபாடுகளைச் செய்வதற்கோ தடை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேரள அரசோடு இன்றைக்கே தொடர்புகொண்டு நிச்சயமாகப் பேசுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 மே 7]

10-25 மணி

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிறந்த மதுரை மாவட்டத்தின் பகுதியிலே இந்தக் கண்ணகி கோயில் இருக்கிற காரணத்தினாலே, அதனுடைய உரிமை பற்றி இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இங்கே ஏற்கெனவே வைக்கப்பட்ட அறிக்கைகளில் கூட........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே நான் சொன்ன பிறகும் திரு. இரகுமான்கான் பேச வேண்டுமென்று விரும்பினால் பேசலாம். ஏனென்றால், மிக முக்கியமான பிரச்சினை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல உணர்ச்சிவயப் பட்ட ஒரு பிரச்சினை. இதிலே நாம் மோதுதலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறு முதல் நாற்பத்தெட்டு வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. பி. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக் கைகளை அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன்மீதான விவாதத் தைத் தொடங்கி வைப்பவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

*5-5-1990-ம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

10-25 மணி

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிறந்த மதுரை மாவட்டத்தின் பகுதியிலே இந்தக் கண்ணகி கோயில் இருக்கிற காரணத்தினாலே, அதனுடைய உரிமை பற்றி இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இங்கே ஏற்கெனவே வைக்கப்பட்ட அறிக்கைகளில் கூட.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே நான் சொன்ன பிறகும் திரு. இரகுமான்கான் பேச வேண்டுமென்று விரும்பினால் பேசலாம். ஏனென்றால், மிக முக்கியமான பிரச்சினை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல உணர்ச்சிவயப் பட்ட ஒரு பிரச்சினை. இதிலே நாம் மோதுதலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறு முதல் நாற்பத்தெட்டு வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. பி. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீதான விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

*5-5-1990-ம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

1990 மே 7]

10-25 மணி

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிறந்த மதுரை மாவட்டத்தின் பகுதியிலே இந்தக் கண்ணகி கோயில் இருக்கிற காரணத்தினாலே, அதனுடைய உரிமை பற்றி இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இங்கே ஏற்கெனவே வைக்கப்பட்ட அறிக்கைகளில் கூட.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே நான் சொன்ன பிறகும் திரு. இரகுமான்கான் பேச வேண்டுமென்று விரும்பினால் பேசலாம். ஏனென்றால், மிக முக்கியமான பிரச்சினை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல உணர்ச்சிவயப் பட்ட ஒரு பிரச்சினை. இதிலே நாம் மோதுதலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறு முதல் நாற்பத்தெட்டு வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. பி. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன்மீதான விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

*5-5-1990-ம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

1990 மே 7]

10-25 மணி

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிறந்த மதுரை மாவட்டத்தின் பகுதியிலே இந்தக் கண்ணகி கோயில் இருக்கிற காரணத்தினாலே, அதனுடைய உரிமை பற்றி இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இங்கே ஏற்கெனவே வைக்கப்பட்ட அறிக்கைகளில் கூட.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே நான் சொன்ன பிறகும் திரு. இரகுமான்கான் பேச வேண்டுமென்று விரும்பினால் பேசலாம். ஏனென்றால், மிக முக்கியமான பிரச்சினை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல உணர்ச்சிவயப் பட்ட ஒரு பிரச்சினை. இதிலே நாம் மோதுதலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறு முதல் நாற்பத்தெட்டு வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. பி. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீதான விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

*5-5-1990-ம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 204-ஆம் உறுப்பின் 1-ஆம் கூறின்படி இந்தச் சட்ட முன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

மாநிலத் தொகுதி நிதியத்திலிருந்து 6,830 கோடியே 19 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் கோரியிருக்கிறார்கள். 1952-ஆம் ஆண்டு இதே அவையிலே அன்றைய நிதியமைச்சர் திரு. சி. எஸ். அவர்கள் 6,534 இலட்சம் ரூபாய்தான் கோரினார்கள். அதுவும் ஒன்றாக இருந்த சென்னை மாநிலம் முழுவதுக்கும் கோரப்பட்ட தொகை அவ்வளவுதான். ஆனால் இன்று தமிழகத்திற்கு மட்டும் 6,830 கோடி ரூபாய் கோரப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெரிய தொகையை நாம் ஒதுக்குகிறோம். அது முறையாகப் பயன்படுத்தப்பட்டு, மக்களுக்குப் போய்ச் சேருமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தினுடைய முக்கியமான கடமையாகும். அந்தத் தொகை தவறாகப் பயன்படுத்தப்பட்டாலும், கையாடல் செய்யப்பட்டாலும் அவர்கள் கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு அதில் பொது மக்கள், அரசியல் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும்.

பணி மூப்பு இல்லாத, தான் விரும்பும் ஒருவரை முக்கிய பொறுப்பில் போட வேண்டுமென்ற நோக்கத்தோடு பல புதிய பதவிகள் உருவாக்கப்படுகின்றன. பணி மாற்றங்கள் செய்யப்படுகின்றன. காவல் துறை போன்ற முக்கிய துறைகளில் இவ்வித விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுப்பது மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இங்குள்ள அரசியல் பிரமுகர்களின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படுவதாக கூறப்படுகிறது... சில ... எதிர்க்கட்சித் தலைவர்கள் காவல் துறையினரால் கடுமையாக . .

1990 மே 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பொத்தாம்பொதுவிலே குற்றச்சாட்டுகளைச் சொல்லி, பத்திரிகையிலே வருவது நல்லது அல்ல. எந்த அரசியல் தலைவருடைய தொலைபேசி ஒட்டுக்கேட்கப்பட்டது என்று ஆதாரப் பூர்வமாகச் சொன்னால் நான் பதில் அளிக்க இயலும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: நான் குறிப்பாக எந்தத் தலைவர் என்று சொல்லவில்லை. பொதுவாக, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அப்படியொரு புகாரைச் சொன்னபோது, அப்பொழுது மத்தியில் இராஜிவ் காந்தியினுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த நேரத்திலேயே அதனுடைய, அந்தத் தொலைபேசிகளுக்கெல்லாம் அதிகாரியாக இருக்கின்ற மேனேஜிங் டைரக்டர் அவர்கள், அப்பொழுதே ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி அன்றைய எதிர்க்கட்சித் தலைவியின் டெலிபோன் டேப் செய்யப் படவில்லை என்று அப்பொழுதே அறிக்கை விட்டிருக்கிறார், திரு. ராஜிவ் காந்தி பிரதமராக இருந்த காலத்திலேயே.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: இப்பொழுது மீண்டும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரவர்களும் அதே குற்றச் சாட்டைக் கூறியிருக்கின்றார்கள். எஸ்.டி.எஸ். அவர்கள் கூறி. . .

10.30 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வெறும் குற்றச்சாட்டு தான். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் போட்ட முதல் ஆத்தரவே அரசியல்வாதிகள், கட்சித் தலைவர்கள் யாருடைய டெலிபோனும் டேப் செய்யப்படக் கூடாது என்ற உத்தரவை அரசு போட்டிருக்கிறது. தேவையானால் கோப்பினை இந்த மன்றத்திலேயே சாட்சியமாக வைக்கத் தயார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, ஒட்டுக் கேட்கப்படவில்லை என்று சொன்னால் உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஒட்டுக் கேட்கப்படக் கூடாது என்பது தான் எங்களுடைய எண்ணம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நாம் இருவருமே ஒட்டுக் கேட்டுத்தான் பழக்கமே தவிர, ஒட்டுக் கேட்டு பழக்கம் இல்லை. (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்கள் காவல் துறையினரால் கடுமையாக்க கண்காணிக்கப் படுகிறார்கள், அவர்களுடைய தனி மனித

சுதந்திரமே பறிக்கப்படுகிற வகையில் கண்காணிக்கப்படுகிறார்கள். இவை தவிர்க்கப்பட வேண்டும். அமெரிக்க அதிபர் நிக்சன் பதவி விலக காரணமாக இருந்த ' வாட்டர் கேட் ' வரலாற்றிலே இடம் பெற்று விட்டது. அதிலே மற்றொரு அத்தியாயத்தைப் படைக்க இந்த அரசு முயல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எழுதப்பட்டு விட்ட காரணத்தால் அதை அப்படியே தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் முதலிலேயே நான் ஒட்டுக் கேட்கப்பட வில்லை என்று மறுத்து விட்டேன். பிறகு ' வாட்டர் கேட் ' வரையில் போனால் என்ன அர்த்தம் ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவருடைய அ.தி.மு.க. பொதுச் செயலாளருடைய இல்லத்திற்கு எதிராக ஓ.என்.ஜி.சி. அலுவலகம் இருக்கிறது. அதன் மாடியில் கூடாரம் போட்டு . . .

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காக கேட்கிறேன். நான் ஒருநாள் தொலைபேசியை எடுத்து ஒரு எண்ணை சுழற்றிய உடனே— Track No. 7, Track No.7, என்று [illegible] வந்தது. என்னுடைய விளக்கத்திற்காகக் கேட்கிறேன். இப்படிப்பட்டவை [illegible] எங்களுக்கு ஐயத்தை உண்டாக்குகின்றன. ஒருவேளை டெலி போன் டிபார்ட்மெண்டிலே சாதாரணமாக பின்பற்றுகிற ஒரு நடைமுறையாக இது இருக்கலாம். ஆனால் அன்று எனக்கு ஒரு பெரிய ஐயப்பாடு ஏற்பட்டது. நம்முடைய டெலிபோனில் இப்படி வருகிறதே, ஏன் வந்தது என்று. இப்படிப்பட்ட ஐயப் பாடுகள் சிலருக்கு வந்திருக்கக் கூடும். எனவே, அந்த டிபார்ட் மெண்டிலிருந்து இப்படியெல்லாம் வருமா என்ற விளக்கத்தைக் கேட்டு எங்களுக்குச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த நேரத்தில் நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவருக்கு அப்படி ஒரு கர்ண கடூரமான வார்த்தை காதிலே விழுந் திருக்கிறது. சில நேரங்களில் காதல் வசனங்கள் எல்லாம் கூடக் கேட்கலாம். ' கிராஸ் டாக்கிலே '. அதையும் முயற்சித்துப் பாருங்கள். (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே. அதிலே நான் மாட்டிக் கொண்டால் ஆபத்து என்று நேற்று தான், குமரி இதிலே.எல்லாம் தலையிடக் கூடாது என்று சொன்னார். (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ஓ.என்.ஜி.சி. அலுவலகத்தில் மாடியில் கூடாரம் போட்டு கண் காணிக்கப்படுவதாக பரவலாக புகார்கள் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். ஏன் சொல்கிறேன் என்றால்— It is an intrusion

1990 மே 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

and the right of privacy என்று நிச்சயமாக வந்து விடக் கூடாது என்பதற்காக தான் சொல்கிறேன். அதைப்போல நடக்குமானால் உடனடியாக தவிர்க்க வேண்டும் என்பதற்காக தான் நான் சொல்கிறேன். அதற்கு பதிலாக இந்த நாட்டின் பாதுகாப்பை பலவீனப்படுத்தும் சக்திகளையும், அன்னிய சக்திகளையும் கண்காணித்து, அவர்களால் நமது நாட்டிற்கும், ஜனநாயகத்திற்கும் ஏற்படும் அபாயத்தை தடுத்து நிறுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்திய அரசாங்கத்தின் உத்தரவின் பேரில், இந்திய நாட்டின் கப்பல்களில் அகதிகளாக கொண்டு வரப்பட்டு, இந்த நாட்டிலே குடியமர்த்தப்பட்டவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறையில் அடைத்து இருப்பது எந்தவகையில் நியாயம் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். அவர்கள் தங்குவதற்கு சென்னையில் யாரும் இடம் கொடுக்கக் கூடாது என்று வாய் மொழியாக உத்தரவுகள் பிறப்பித்து இருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும். இதைத் தவிர்த்து சிறையில் இருக்கும் அகதிகளை உடனடியாக விடுதலை செய்து, அவர்களை தமிழர்களாக இல்லாவிட்டாலும், மனிதர்களாக கருதியாவது உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அகதிகளுக்கு . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே. பிரச்சினைக்குரிய விஷயங்களையே பேசுகிற காரணத்தால், உடனுக்குடன் பதில் சொல்வது நலம் என்று கருதுகிறேன். ஏனென்றால், இன்றைய நிதியொதுக்கீடு மசோதாவில் பல அறிவிப்புகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்போது இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஒரிஸ்ஸாவில் அகதிகளுடைய முகாம்களில் அகதிகளாக இருக்கிறவர்கள் அந்த முகாம்களை மீறி வெளியே வந்த பிறகு, வேறு ஒரு மாநிலத்திற்கு வந்த பிறகு, அவர்கள் போராளிகள் என்று தெரிந்த பிறகு அவர்களைக் கைது செய்யாமல் எப்படி இருக்க முடியும் ? உண்மையிலேயே அகதிகளாக வந்த பெண்கள், குழந்தைகள், இவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. போராளிகளாக இருப்பவர்கள் மட்டும் தான் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அகதி முகாமை விட்டு அத்துமீறி வெளியேறுவது கூடத் தவறு தான்.

**திரு. குமரி அனந்தன் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் பெண்களோ மற்றவர்களோ கைது செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். லிபர்டி தியேட்டர் பக்கத்தில் வைத்திருக்கிற அகதி முகாமிலே 10 பெண்கள்—கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்லவில்லை—கர்ப்பிணி பெண்கள் கூட இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் போதுமான எந்த வசதியும் இல்லையென்பதை நான் போய் பார்த்து அறிந்து வந்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கைது செய்யப்பட்ட பிரச்சினை பற்றி

இங்கே சொன்னார்கள். அது நியாயம் இல்லை என்று நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை கைது செய்யவில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். பெண்கள், குழந்தைகள், இப்படி பாதுகாக்கப் பட்டவர்கள்— ஆண்கள் போராளிகள் என்று கருதப்பட்டாலகூட, ஆண்கள் கைது செய்யப்பட்டு விட்டாலும் அந்த பெண்கள் பாதுகாப்பு இல்லாமலும், வேண்டிய வசதிகள் இல்லாமலும் இருக்கிறார்கள். எனவே முதலமைச்சருடைய நேரடி கவனத்திற்கு, அவர்கள் அவதி படுகிற காரணத்தால், இது வரவேண்டும் என்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

10-35 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அகதிகளாக இருந்து அவர்கள் எங்கே அவதிப்பட்டாலும் நிச்சயமாக நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் அவர்களுடைய அந்தக் கூற்றுக்கு ஏற்ப அவர்களுக்கு அரசு உதவி செய்யத் தயங்காது. அந்த விவரங்களையும் அவர்கள் இந்த அரசுக்கு உதவியாகத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர்கள் தண்டகாரண்யத்திலே வாழவிரும்பாமல், தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். இங்கே ஏதேனும் ஒரு இடம் பார்த்து— மத்திய அரசாங்கம் நமக்கு உதவி செய்கிறது. அவர்களுடைய செலவுகள் அனைத்தையும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது, எனவே இங்கே வருகின்ற அவர்களைக் கைது செய்யாமல்,—அவர்கள் அகதிகளாக வாழ்வதற்கு வழிகாண வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்றையதினம் ஒரு அதிர்ச்சி தரும் செய்தி வந்திருக்கிறது. இராமேஸ்வரத்திற்குப் பக்கத்திலே கடலிலே செல்கிற மீனவர்களிடத்திலிருந்தும், படகுக்காரர்களிடத்திலிருந்தும் பணம் வசூலிக்கப்படுவதாக இன்றையதினம் செய்தி வந்திருக்கிறது. பெரிய அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இரண்டு சர்க்கார்களையும் மீறி நடைபெறுகிறது. ஒரு பயங்கரவாத அமைப்பை கடலிலே ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பது எப்படி சரியாக இருக்க முடியும்? அங்கே மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியவில்லை. அவர்கள் தைரியமாக நம்பிக்கையோடு கடலிலே செல்வதற்கு மீன்பிடிப்பதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக இந்தக் கடத்தல்காரர்கள் ஊக்குவிக்கப்படுவார்களானால், இங்கே நம்முடைய பொருளாதாரத்தை அது மிகவும் பாதிக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசி ஏற்றம் இப்போதே அந்தப் பகுதியிலே இருப்பதாகவும், இன்னும் நிச்சயமாக விலைவாசி ஏறும் என்றும் கூறுகிறார்கள், எனவே இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*1990 மே 7]* [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

மத்திய தொழில் அமைச்சர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் இங்கே வந்திருந்தபோது, கோவையிலே 5-ஆம் தேதி பத்திரிகையாளர்களுக்கு ஒரு பேட்டி அளித்திருக்கிறார். நம்முடைய மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் உடன் இருந்திருக்கிறார்கள். அப்போது தமிழகத்தில் மத்திய அரசு முதலீடு செய்யும் பொதுத்துறை நிறுவனங்களைத் தொடங்க வாய்ப்பு உள்ளதா என்று கேட்கப்பட்டபோது, அப்படிப்பட்ட திட்டம் ஏதும் தற்போதைக்கு இல்லை என்று திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, மத்திய அரசின் சார்பில் பொதுத்துறை நிறுவனங்களை இங்கே தொடங்கும் திட்டங்கள் மத்தியில் பரிசீலனையில், நிலுவையில், பெண்டிங்கில் இருக்கிறது என்று குறிப்பிட்டபோது, தொழில்களைத் தொடங்குவதற்காக......

*மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்கள் கோவையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்டபோது, பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு அளித்த பதிலை இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டு பொதுத்துறையின் சார்பாக மத்திய அரசு மூலம் தொழில் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று தான் கேட்டார்களேயல்லாமல், பொதுவாக மத்திய அரசின் சார்பாக தொழில் தொடங்குகிற திட்டம் பரிசீலனையில் இல்லை என்று அவர்கள் தெரிவிக்கவில்லை. தமிழக அரசின் சார்பாக சில திட்டங்கள், பரிந்துரை செய்யப்பட்டு இருக்கின்றன என்று நான் அப்போது பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தேன். எனவே இந்த ஆண்டு, அப்படிப்பட்ட திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றுதான் சொன்னாரேயல்லாமல், தமிழகத்திற்கு பொதுத் துறையின் மூலமாக ஏதும் இல்லை என்று திட்டவட்டமாக அவர்கள் மறுக்கவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பத்திரிகைச் செய்தி. நிச்சயமாக There was no such Proposal for the present என்று அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் வந்திருக்கிறது. இரண்டு பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

அதேபோல் தொழில்களைத் துவங்குவதற்கான நிதி ஆதாரங்களை மாநில அரசுகளே பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், தெளிவாக அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு மிகுந்த நிதி நெருக்கடியில் இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியானால், 1,356 கோடி ரூபாய்ச் செலவில் மணலியில் நிறுவுவதாக இருந்த ஏரோமேட்டிக் தொழிற்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

[1990 மே 7

சாலையின் கதி என்ன? ஏற்கெனவே மிகப் பெரிய தொழிற்சாலையை உத்திரப் பிரதேசத்தில் தனியார் துறையில் தொடங்குவதற்கு ஜே. கே. தொழில் குடும்பத்தைச் சேர்ந்த சிங்காணியோமா அவர்களுக்கு கிடைத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இதைப்பற்றிய உண்மைகளை இந்த அரசு தெளிவுபடுத்தவேண்டும்.

மாநிலத்தில் சிறிய மற்றும் கிராமப்புற தொழில்களைத் தொடங்குவதை ஊக்கப்படுத்துவதே, மத்திய அரசின் புதிய தொழில் கொள்கையாக இருக்கும் என்றும், அத்தகைய தொழில்களுக்கு மத்திய அரசு நிறுத்திவைத்துள்ள மானியம் வழங்கும் திட்டத்தை மீண்டும் கொண்டுவரும் என்றும் மத்திய தொழில் அமைச்சர் திரு. அஜித்சிங் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். எனவே, பெரிய தொழில்கள் குறிப்பாக மத்திய அரசின் சார்பில் தொடங்கப்படும் பொதுத்துறை நிறுவனங்கள் தமிழகத்தில் தற்போது வராது என்பதும் முடிவாகிவிட்டது. இந்த நிலையில் தனியார்களை ஊக்கப்படுத்தும் திட்டங்களும் மாற்றியமைக்கப்படுகின்றன. குறிப்பாக தனியார் தொழில் முனைவோர்களை பங்காளிகளாகக் கொண்ட கூட்டுத்துறை நிர்வாகங்கள் மாற்றியமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்தியாவில் மிகப் பெரிய 20 தொழில் கூடங்களில் ஒன்றான, பத்தாவது இடத்தை வகிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த தொழில் குடும்பம் இன்று கூட்டுத்துறையின் நிர்வனங்களின்நிர்வாகப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு சாதாரண நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது.

10-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் மிகுந்த அக்கறையோடு குறிப்பிடுகின்ற அந்தக் குடும்பம் எது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன். பொதுவிலே பேசக்கூடாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: ஸ்பிக்கிலேயிருந்தும், மற்ற இடங்களிலேயிருந்தும் அகற்றப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக .......... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஸ்பிக்கிலேயிருந்து யார் அகற்றப்பட்டிருக்கிறார்? எம்.டி. அகற்றப்பட்டிருக்கிறாரா?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்; அதன் தொடர்பாக பல நிறுவனங்களிலேயிருந்தும், இகிலேயிருந்தும் சேர்மன் அகற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னொன்றிலேயிருந்து சேர்மன் அகற்றப்பட்டிருக்கிறார். ஆக 2, 3 நிறுவனங்களிலே அவர்கள் அகற்றப்பட்டிருக்கிறார்கள்.

*1990 மே 7]*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : ஜாயின்ட் செக்டார் என்றால் கூட்டுத்துறை என்றால் அரசு 26 சதவீதம், தனியார் தொழில் முனைவோர் 25 சதவீதம், பொதுமக்கள் 49 சத வீதம், இது தான் கூட்டுத் துறையினுடைய இலக்கணம். 26 சத வீதம் அளிக்கின்ற அரசு எந்தப் பொறுப்பிலேயும் இல்லாமல் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா? அதுவும் அவர் சொல்கின்ற அந்த நிறுவனத்தில் 25 சதவீதம் கூடக் கிடையாது. ஏற்கெனவே சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்படி. நாங்கள் கூட அதைப் பார்த்து எண்ணி ஏமாந்து விட்டோம். இப்போது அவர்களுக்காக அவர் வலிந்து பேசுகின்ற காரணத்தால் இந்த உண்மைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு 12, 13 சதவீதம் கூட கிடையாது. அவர் பரிந்து பேசுகின்ற அந்தச் செல்வம் மிக்க குடும்பத்தாருக்கு.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, hold no brief for any body நான் யாருக்காகவும், பரிந்து நிச்சயமாக இங்கே பேசவில்லை. வாதாடவும் வர மாட்டேன். ஆனால் ஜாயின்ட்... (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : என்ன கொள்கையைச் சொல்கிறீர்கள், அதைச் சொல்லுங்கள்? உங்கள் கட்சியினுடைய கொள்கை என்ன? கூட்டுத்துறையில் இந்த அரசு எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : சில மாவட்டங்களில் யாரும் தொழில் தொடங்க முன்வருவதில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் ... (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, ஒரு குற்றத்தைச் சொல்லிவிட்டு, அதற்கான விளக்கத்தைச் சொல்லவேண்டும். உடனே சில மாவட்டங்களில் என்று போகக் கூடாது. இப்போது சொன்ன ஸ்பிக்கில் நடந்ததைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : I will come to it. ஸ்பிக் பற்றி நீங்கள் கான்செப்ட் என்ன என்று கேட்டீர்கள். கொள்கை என்ன என்று கேட்டீர்கள். அதற்காக ஜாயிண்ட் செக்டர் ஏற்படுத்த வேண்டும். ஜாயின்ட் செக்டரில் தனியார் 25 சதவீதம் போடுகிறார்கள். அரசு 26 சதவீதம் போடுகிறது. 49 சதவீதம் பொதுமக்கள் என்பது 'ஃபினான்சியல் இன்ஸ்டிட்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

[1990 மே 7

யூஷன்ஸ்' கூட போடலாம். என்று சொல்லி, சில நிதி நிறுவனங்கள் கூட அதில் முதலீடு செய்திருக்கிறார்கள். ஆக, நம்முடைய கண்காணிப்பிலே இருக்கவேண்டுமென்பதிலே எங்களுக்கு எந்த விதமான ஐயப்பாடும் கிடையாது. நிச்சயமாக அரசு கண்காணிப்பிலே இருக்க வேண்டும். அரசை மீறி அவர்கள் செயல்படுவார்களேயானால், இதில் இதைத் தட்டிக் கேட்கின்ற உரிமை அரசுக்கு இருக்கவேண்டுமென்பதிலே நான் குறுக்கேவரமாட்டேன் ஆனால் முதலிலே ஜாயின்ட் செக்டார் கான்செப்ட் என்று வந்ததிலே 26 சதவீதத்தில் அந்தத் தொழில் நல்லமுறையில் நடந்து கொண்டிருந்தால் 11 விழுக்காடுகள் மட்டும் அந்த குறிப்பிட்ட தொழிற்துறைக்கு விட்டுவிட்டு, 15 சதவீதப் பங்கினை வெளியே எடுத்து, வேறு தொழில்களிலே போடவேண்டும் என்பது அரசின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. அறிவிப்பிலேயே அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தான் நான் கேட்டுக் கொள்கிறேன், அப்படி நல்ல முறையிலே நடந்து கொண்டிருக்கக் கூடிய தொழில்களிலே அவர்களை அகற்றிவிட்டு, ஐ.ஏ.எஸ். அதிககாரிகளைப் போடுவதனால் என்ன லாபம்? குறிப்பாக, . . . (குறுக்கீடு).

திரு. ரா சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுத் துறையினுடைய அடிப்படை இலக்கணம் எப்படி இருக்கவேண்டுமென்றால், தனியாருடைய திறமையான நிர்வாககமும், அரசு, பொதுமக்களுடைய பணமும் சேர்ந்து அந்தத் துறை வளரவேண்டும். அந்த அடிப்படையிலே தான் கூட்டுத்துறை ஏற்படுத்தப்படுகின்றன. 25 சதவீதம் தனியார் மூலதனம், கொண்டுவர வேண்டுமென்ற ஒரு கட்டாயம் இருந்தாலும்கூட சில இடங்களில் 3, 4 சதவீதத்தை வைத்து, அவர்கள் ஒரு தொழிற்சாலையினை ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பிப்பதை அரசு வரவேற்கத்தான் செய்கிறது. கடந்த ஆண்டு dis-investment policy என்று இந்த அரசு அறிவித்தது. அதனுடைய அடிப்படை நோக்கமே தனியார் திறமையின்மூலமாக ஒரு தொழில்துறையை வளர்த்துவிட்டு, அது வளர்ந்த நிலையில் dis-investment policy மூலமாக அரசு அந்தப் பணத்தை திரும்பப் பெற்று மற்றபடி இன்னும் ஒரு தொழிற்சாலையை வேறு இடத்தில் ஏற்படுத்துவதற்குத்தான் அந்தப் பாலிசியே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அரசினுடைய கண்காணிப்பு வேண்டும். எந்த இடத்தில்? தனியாருடைய திறமையின் கீழ் என்று சொல்லிக்கொண்டு அரசினுடைய பணத்தையோ அல்லது பொதுமக்களுடைய பணத்தையோ அவர்கள் ஏமாற்றக் கூடிய ஒரு நிலை வந்தால். . . . . (குறுக்கீடு).

1990 மே 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் சொல்வது போல வந்த காரணத்தால் தான் அரசு நடவடிக்கை எடுத்தது. நீங்கள் சொன்னீர்களே ஏமாற்றுகின்ற நிலை வந்தால் என்று, அதனால் தான் நடவடிக்கை எடுத்தது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, தலைமைச் செயலாளர் அந்தஸ்தில் இருக்கின்ற 'சீனியர் கேடர் ஐ.ஏ.எஸ்.' அதிகாரி ஒருவரை 400 பேர் மட்டுமே பணியாற்றும் தூத்துக்குடி ஆல்கலைன் கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு சேர்மன்-கம்-மேனேஜிங் டைரக்டராக போட்டிருக்கிறார்கள். அதேபோல் ஸ்பிக்கை எடுத்துக் கொண்டால், சேர்மனாக நம்முடைய தலைமைச் செயலாளரே இருக்கிறார். இவர்களைப் போன்றவர்கள் தங்களுடைய பணிகளை வேறு இடத்திலே நல்லமுறையில் நிச்சயமாக பயன் படுத்த முடியும் என்று நான் நம்புகின்ற காரணத்தினாலே அதை மீண்டும் மீண்டும் சொல்கிறேன். அதேபோல் டிட்கோ. ஸ்பிக் ...... (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிகாரப் பூர்வமற்ற நிலையில் அரசியல்வாதிகளையோ, கட்சிக்காரர்களையோ போட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அதிலே அஃபீசியலாக அவர்களைத் தலைவர்களாக நியமித்திருக்கிறோம்.

10-45 மணி

திரு. குமரி அனந்தன் : இன்னொரு நாள் இதைப்பற்றி விளக்கம் சொல்கிறபோது, அதிலேயே தந்தையும் பிள்ளையும் இரண்டு பேரும் பதவிகளிலே இருப்பதாக சொன்னார்கள். இன்று நமது மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுப்புகின்ற அந்தப்பிரச்சினை அதோடு மட்டும் நிற்கவில்லை. அவர்கள் தொடர்ந்து பல இடங்களிலே இப்படிச் செயல்பாடுகள் வருமேயானால் இப்படி கூட்டாகத் தொழில் செய்கின்ற இடத்திலே உற்சாகம் கம்மிவிடும் என்றும் இப்படி அந்த முனைவர்களாக வந்து அதனை எப்படியாவது செம்மைப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறபோது நம்முடைய அரசாங்கத்தினுடைய 26 சதவீதம் இல்லாத இடத்திலே கூட அரசாங்கம் அதிகமான 'டைரக்டர்களை' போடுவதிலே தவறில்லை. ஆனால் முழு நிர்வாகத்தையும் எடுக்கின்றது போல வந்தது என்று சொன்னால், அதிலே உற்சாகம் இழக்கக்கூடும் என்று சொல்லக்கூடிய பரவலான ஒரு எண்ணம் இருப்பதைத்தான் அவர்கள் சொல்கிறார்களேத் தவிர அரசாங்கம் கண்காணிப்பிலே அவர்கள் விருப்பம் போல போய்விடலாம் என்று சொல்கிற கருத்து கட்சிக்கு இல்லை.

மாண்புமிகு டாக்டர். மு கருணாநிதி : இந்தக் கருத்தைத் தான் நண்பர் திரு. சொக்கர் சொன்னபோது, அவருடைய தாத்பரியத்தை ஏற்றுக் கொண்டோம். ஆனால் முறைகேடாக நடைபெறுகின்ற நிறுவனத்தில் அரசு தலையிட வேண்டாமென்று நீங்கள் குறிப்பிட்டு இங்கே பேசப்படுகிற நிறுவனத்தில் சில முறைகேடுகள் நடைபெற்ற காரணத்தினாலேதான், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு அவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் முதலிலே தலைவரை மாற்றிக்கொள்ள சம்மதம் தந்து, பிறகு அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் பார்த்துக் கொள்ளலாமென்று, அங்கேயும் திரு. வி. பி. சிங் ஆட்சி கவிழ்ந்து விடும். அதைத் தொடர்ந்து இங்கேயும் இந்த ஆட்சி கவிழ்ந்து விடுமென்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நல்லவேளையாக அங்கேயும் கவிழவில்லை, இங்கேயும் கவிழவில்லை. ஆனால் அரசு அதிலே உறுதியாக இருந்து இந்த முடிவை எடுத்திருக்கிறது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப கேட்கிறார்கள், காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை இதிலே என்னவென்று. குறிப்பாக ‘ஸ்பிக்’ ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே தமிழ்நாடு முழுவதும் பேசப்படுகின்ற இது, 52 கோடி ரூபாய் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழில், 50 கோடி ரூபாய் பொது மக்களும், அரசுத் துறையும் 2 கோடி ரூபாய் தனியாரும் போட்டு, அந்தத் தொழிலிலே, 50 கோடி ரூபாய் போட்டவர்கள் பார்வையாளர்களாகவும் 2 கோடி ரூபாய் மூலதனம் போட்டவர்கள் நிர்வகிக்கக் கூடியவர்களாகவும் அந்தத் தொழில் ஒதுக்கப்பட்டது. இன்றைக்கும் சிலர் சொல்கிறார்கள். அரசு கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். 50 கோடி ரூபாய் மூலதனம் போட்ட அரசு கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். 2 கோடி ரூபாய் மூலதனம் போட்டவர்கள் நிர்வகித்துக் கொண்டிருக்க வேண்டும். இதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா என்பதை அவர்கள் தெளிவாக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் முதல் அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய காரணத்தினால் சொல்ல விரும்புகிறேன், ‘ஸ்பிக்’ தொடங்கப்பட்டபோது அதனுடைய ‘சேர்மனாக’ திரு. சிதம்பரம் அவர்கள் அன்றைக்குப் பொறுப்பேற்றார்கள். ‘ஸ்பிக்’ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே அன்றைக்குத் தொடங்கப்பட்டது. ஆனால் அதைக் கண்காணிப்பதற்காக ‘ஃபைனான்ஸ் மெம்பர்’ அரசின் சார்பிலே அதிலேயிருந்தார்கள். பிறகு போகப்போக கடந்த கால ஆட்சியில்

அது மாற்றப்பட்டு அந்தப் பொறுப்பையும் அவருடைய மகனே ஏற்றுக்கொண்டு விட்டார். தந்தையும் மகனும் இருவரும் சேர்ந்து நிர்வாகம் செய்த காரணத்தால் சில தவறுகள் ஏற்பட்டன. எனவேதான் அரசு இதிலே இந்தத் தீவிர நடவடிக்கையை மேற்கொண்டது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் கூறவந்தது அதுவல்ல. 'இண்டியன் அட்மினிஸ்டிரேட்டிவ் சர்வீஸ்' என்பதை 'இன்டர்ஸ்டிரியல் அட்மினிஸ்டிரேட்டிவ் சர்வீஸாக' மாற்ற முயல வேண்டாமென்று தான் சொல்கிறேன். ஏனென்று சொன்னால் 'இண்டியன் அட்மினிஸ்டிரேட்டிவ்.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் ஒரு 'ஐ.ஏ.எஸ்.' அதிகாரியைப் போடாமல், இப்பொழுது போடப்பட்டிருக்கின்ற அந்த இரண்டு இடத்திற்கும் யாரைப் போடலாமென்று உறுப்பினர் சொல்கிறார்?

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே திரு. ராஜிவ் காந்தி ஆட்சியிலே இருந்தபோது கூட மத்திய அரசினுடைய பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கு 'ஐ.ஏ.எஸ்.' அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்களே, அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள்?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : ஒரு 'சீனியர்' அதிகாரி. அவர் இதுபோன்ற 400 பேர் பணியாற்றுகின்ற இடத்திலே, 500 பேர் பணியாற்றுகின்ற இடத்திலே முடக்கப்பட வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, அதிகாரிகளை முழுவதுமாக போடவே கூடாது என்று நான் சொல்லவில்லை. இங்கே தலைமைச் செயலாளராக இருக்கிறவர் அங்கே 'சேர்மனாக'ப் பேசுகிறார். இங்கே உள்துறை செயலாளராக இருக்கிறவர்தான் அங்கே 'சேர்மனாக' அல்லது 'டைரக்டராக' போகிறார் என்கிற அந்த பாணியைத்தான் மாற்ற வேண்டுமென்று சொல்கிறேனே தவிர வேறல்ல. இதிலே ஒரு தனி பாணியைக் கையாளுவதாக நினைத்து, தேசிய நீரோட்டத்திலேயிருந்து இதிலேயும் விலகிச் சென்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அதைச் சொல்கிறேன். நேற்றையதினம் கூட பத்திரிக்கையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. நம்முடைய 'ஐ.ஏ.எஸ்.', 'ஐ.பி.எஸ்.' அதிகாரிகள் மத்திய அரசாங்க 'டெபுடேஷனிலே' போவது வெகுவாகக் குறைந்திருக்கிறது கடந்த 4, 5 ஆண்டுகளிலே என்று சொல்லி, இது நிச்சயமாக தமிழகத்தினுடைய நிலையை பாதிக்கும் என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். குறிப்பாக 'ரா' அமைப்பை எடுத்துக் கொண்டால், கடந்த 5 ஆண்டுகளிலே 18 பேர்தான் 'டெபுடேஷனிலே' சென்றிருக்கிறார்கள். கடந்த ஆண்டு 4 பேர் சென்றிருக்கிறார்கள்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1990 மே 7

1988-லே 5 பேர் சென்றிருக்கிறார்கள். இதுபோல் குறைந்துக் கொண்டே வருமேயானால் மத்தியிலே நம்முடைய காடரிலே—தமிழ்நாட்டு காடரிலே இருக்கின்ற அதிகாரிகள் குறைவது நிச்சயமாக நம்மை பெரும் அளவிற்கு பாதிக்கும் என்ற காரணத்தினாலே தான் நான் மீண்டும் இதைச் சொல்ல வந்தேன். எனவே இதைப் பற்றி தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தெளிவான வெள்ளை அறிக்கையை—ஒயிட் பேப்பரை—சட்டமன்றத்திலே தாக்கல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதிக்குப் போகிறேன். தமிழ்நாட்டிலே தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய பகுதிகள் நிறைய இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. பின் தங்கிய பகுதிகளை மட்டும் இணைத்து ஒரு புதிய தாலூக்காவை உருவாக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு நான் கேட்டுக் கொண்டேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர் என்ன செய்து இருக்கிறார் என்று சொன்னால் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மிகவும் பின் தங்கிய பகுதியையும் ஓரளவிற்கு

10-50 மணி

முன்னேறிய பகுதியையும் மிகவும் முன்னேறியப் பகுதியையும் ஒன்றாக இணைத்து ஒரு தாலுக்காவாக போட்டிருக்கிறார்கள். அதனாலே தான் முதல்வர் அவர்கள் அறிவித்த 38 வட்டங்களிலே என்னுடைய வட்டம் இடம் பெறவில்லை. என்னுடைய தொகுதி என்பது இன்றைய தினம் மூன்று தாலுக்காக்களிலேயும் இரண்டு மாவட்டங்களிலேயும் இடம் பெற்றிருக்கிறது. இந்த நிலையிலே. . . . . . . . . .

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ஒழுங்கான முறையில் தொகுதிகளைப் பிரிப்பது பாவ காரியமேயானால் தொடர்ந்து செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தப் பெரிய தொகுதியிலே ஒரே ஒரு சிறிய தொழிற்சாலை இருக்கிறது. மிகவும் பின்தங்கிய இந்தப் பகுதிக்கு தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். குறைந்த பட்சம் ஒரு தொழிற்பேட்டையாவது எனக்குத் தாருங்கள் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக நிறைய நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்றைய தினம் நூல் கிடைக்காமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நூலின் விலை மிகவும்

1990 மே, 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

உயர்ந்திருக்கிறது. எனவே கட்டுப்படியான குறைந்த விலைக்கு அவர்களுக்கெல்லாம் நூல் கிடைக்கவும் நூல் கிடைப்பதோடு அல்லாமல் ஜவுளிகள் தேங்காமல் விற்பனையாகவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அருள்கூர்ந்து கேரள அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி எவ்வளவு விரைவாக பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக நிறைவேற்ற நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல பரம்பிக்குளத்தைப் பொறுத்தவரையில் ஆனைமலையாறு, நல்லாறு, நீராறு போன்ற திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குடிதண்ணீருக்கு பில்லூர்குடிநீர் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி, எவ்வளவு விரைவிலே நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே எங்களுடைய தொகுதியிலே குடிநீர் வடிகால் வாரியம் போட்டிருக்கின்ற ஆழ்குழாய்க் கிணறுகள் மிகவும் குறைவு. நிறைய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதோடு, மேல்நிலைத் தொட்டிகள் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடராஜன் அவர்கள் கேட்கிறார்கள், அவர்கள் இருப்பதும் பின்தங்கிய பகுதிதான். அவருக்கும் சேர்த்து நிறைய போட்டுக் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. சாலைகள் அமைக்கவும் நிலமட்டப் பாலங்கள் எங்களுடைய தொகுதியிலே அமைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு என்னுடைய தொகுதியிலே கட்டப்பட்ட— தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டப்பட்ட—வீடுகள் மிகவும் குறைவு. மிகவும் பின்தங்கிய பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதி அந்தப் பகுதி. நிறைய பேர் அங்கே இருக்கிறார்கள். எனவே இந்தமுறை அங்கே அதிக வீடுகள் கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இல்லை. இல்லாவிட்டாலும் கூட பஸ் வசதிகள் போதிய அளவிற்கு இல்லை பஸ் வசதிகள் செய்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

திரு. கே. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஃபினான்ஸ் பில் மீது எங்கள் கட்சியினுடைய சார்பிலே சில முக்கியமான கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்,

அதற்கு முன்னதாக இந்த ஆண்டு இந்த அரசின் சார்பில் நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான காரியத்தை தமிழகத்திலே செய்துள்ளதை நாங்கள் பாராட்டுதல் மூலம் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. மே தினத்தைக் கொண்டாடுவதற்கு அதற்காக ஒரு சின்னம் ஏற்படுவதற்கு அதனுடைய நூற்றாண்டு விழா அதாவது மே தினமும் உலக ரீதியாக கொண்டாட ஆரம்பித்து அந்தக் கொண்டாட்டங்களுடைய நூற்றாண்டு விழா—இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டதில் அவர்கள் உடனே நிறைவேற்றி தமிழகத்திலும் இந்திய நாட்டிலும் எல்லோரும் மிகுந்த உற்சாகத்தோடு வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இங்கே ஒரு மே தின சின்னத்தை உருவாக்கி அதுவும் நேப்பியர் பூங்கா என்று சொன்ன அந்த பூங்காவுக்கு மே தின பூங்கா என்று பெயர் இட்டு ஒரு மிகப்பெரிய காரியத்தை செய்து உள்ளார்கள். அதற்கு எங்கள் கட்சியின் சார்பில் அவர்களுக்கு நாங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம். (மேஜையை தட்டும் ஒலி). இதற்கு ஒரு முக்கியமான காரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். சென்ற அரசு இருந்த காலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னாள் இதே மே தினத்தினுடைய நிகழ்ச்சிகள் நடைபெற்ற நூற்றாண்டு வந்த போது இதே மாதிரி ஒரு சின்னத்தை தமிழகத்தினுடைய தலைநகரமான இந்த மாநகரில் ஏற்படுத்த வேண்டும் என்று அதற்கான

**10-55 மணி**

3 இடங்களை நாங்கள் குறிப்பிட்டு அவருக்கு கடிதம் எழுதி மாண்புமிகு முதலமைச்சர், அன்று இருந்த முதலமைச்சரிடம் நானே கொடுத்துச் சொன்னேன். ஆனால் அந்தக் காகிதத்திற்கு எங்களுக்கு அன்றிலிருந்து பதில் கிடைக்கவில்லை. அந்த நிகழ்ச்சி நிறைவேறவில்லை. அது மிகவும் வேதனைக்குரிய விஷயம். அப்படிப்பட்ட குறைகள் இன்றைக்கு தீர்த்து வைக்கப்பட்டிருப்பது நிச்சயமாக வரவேற்கக்கூடிய ஒரு காரியம். அதிலே அந்த நேப்பியர் பூங்காவுக்கு மே தின பூங்கா என்று பெயரிட்டது இன்னும் மிக முக்கிய அம்சம். நமது தொழிற்சங்க இயக்கத்தினுடைய மிக முக்கியமான தலைவர்களில் முன்னணியில் நிற்கிற—தத்துவத்திலும் அவர்களுடைய தொழிலாளர்களுடைய வர்க்கத்தின் கோட்பாடுகளிலும் அவர்களுடைய வர்த்தகப் போராட்டத்தில் விஞ்ஞான ரீதியாக நம்பிக்கைக் கொண்ட அந்த இயக்கத்திற்காக பாடுபட்ட மாபெரும் தலைவர் சிங்காரவேலர் அவர்கள் அந்த இடத்திலே இருந்துதான் அவர் மே தினத்தைக் கொண்டாடுவதற்கான அறிவிப்புகள் விட்டு மே தினத்தை ஆரம்பித்து இருக்கும்படியான ஒரு நிகழ்ச்சி. ஆகவே அன்னாருடைய சிலையைக் கூட அந்த இடத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஏற்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1990 மே 7] [திரு. கே. ரமணி]

அடுத்து, இந்த பட்ஜெட்டினுடைய மொத்தமானதொகையை இன்று நாம் அரசுக்கு அளிக்க முன் வைக்கப்பட்டுள்ள இந்த சட்டமுன்வடிவை நாம் நிறைவேற்றுகிறோம். தமிழக மக்களின் எதிர்பார்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அதே சமயத்தில் தமிழக மக்களுடைய தேவைகள் எல்லையற்ற தேவைகளாக இருக்கின்றன. ஆகவே, மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு அரசு கடுமையாகப் பாடுபட வேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமான மக்கள் நம்பிக்கையை மேலும் அதிகமாக பெற வேண்டியுள்ளது. அந்த மக்களின் நம்பிக்கையை பெறக்கூடிய முறையிலே அரசினுடைய நடவடிக்கைகள் இங்கே நாம் விவாதிக்கப்பட்ட ஒவ்வொரு மானியத்திலும் எடுத்துச் சொல்லி இருக்கும்படியான அம்சத்தைக் கருத்தில் கொண்டு அந்தக் காரியங்களை நிறைவேற்றுவதற்கு முழு மூச்சோடு செயல்பட வேண்டும். பட்ஜெட் உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள் சமுதாய, பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு, நீண்ட கால தேவைகளை நிறைவு செய்வது. இந்த அம்சங்களை பட்ஜெட் உரையில் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இது 2 வாக்கியங்களாக இருந்தாலும் இதனுடைய முழு பொறுப்பு மிகப் பெரியது. அந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதில் மிக முக்கியமான நடவடிக்கைகள் முழுமையாக இந்தக் காலத்தில் மக்களுக்கு மன நம்பிக்கையும் மேலும் மேலும் அதிகமான மக்களை நாம் திரட்டும் படியான தன்மைகள் ஆகிய அந்த நடவடிக்கைகள் முழுவதும் இருக்க வேண்டும் என்பது எங்கள் கட்சியினுடைய கருத்து.

அதேசமயத்தில் இந்த அரசுக்கு நாங்கள் ஆலோசனை செய்த அடிப்படையில் ஒரு எச்சரிக்கையையும் நாங்கள் செய்ய வேண்டி வந்திருக்கிறது. அந்த எச்சரிக்கை என்னவென்றால் நாட்டில் ஒரு ஆண்டு காலத்தில் போன சட்டமன்றத் தேர்தலும், அதற்குப் பிறகு பாராளுமன்றத் தேர்தலும் நடந்தன. இந்திய நாட்டு மக்கள் ஒரு புதிய சரித்திரத்தை ஆரம்பித்து ஒரு புதிய பாதையில் முன் செல்வதற்கு நடைபோட ஆரம்பித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்திய மக்களுடைய எண்ணங்களை, தமிழக மக்களுடைய எண்ணங்களையும் பூர்த்தி ஆக்குவதற்காக வந்து இருக்கும்படியான மத்திய அரசை தவிர்ப்பதற்காக சகல நடவடிக்கைகளும் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. அவை எல்லாவற்றையும் நான் இப்போது இங்கே விரித்து சொல்வதற்கு நேரம் இல்லை. ஆனால் அந்த அபாயம் இருக்கிறது. அதே அபாயம் இந்தத் தமிழக அரசுக்கும் இருக்கிறது. தமிழக அரசினுடைய நடவடிக்கைகளை எந்த எந்த அளவுக்கு முடக்குவதற்கு முடியுமோ, கெடுப்பதற்கு முடியுமோ, திசை திருப்பி விடுவதற்கு முடியுமோ அந்த நடவடிக்கைகள் ஒரு பக்கம் ஏற்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு சென்ற தேர்தலிலே தோல்வி அடைந்த க்காங்கிரஸ் கட்சியும் அதனுடைய கூட்டாளிகளும் சேர்ந்து எடுக்கின்ற நடவடிக்கைகளை அனுதினமும் நாம் கண்ணிலே பார்த்துக் கொண்டு இருக்கிறோம். பத்திரிகை களிலேயும் படித்துக் கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

*11-00 மணி*

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, எந்தெந்த நடவடிக்கைகளை காங்கிரஸ் கட்சியும் அதனுடை1 கூட்டாளிகளும் மேற்கொண்டு இந்த அரசாங்கத்தினுடைய நடை முறையை முடக்குவதற்கு முயல்கின்றன என்று நீங்கள் குறிப்பிட்டு சொன்னால் நாங்கள் திருந்திக் கொள்ளக் கூட வாய்ப்பு இருக்கும். என்ன காரணம் என்று சொன்னால், அரசாங்கத்தை முடக்கு வதோ அல்லது அரசாங்கத்தை வேறு வகையிலே துன்புறுத்து வதோ அல்லது சிக்கல்களுக்கு உள்ளாக்குவதோ எங்கள் நோக்க மாக இருக்க முடியாது. மக்களுடைய பிரச்சினையிலே அர சாங்கம் சரியாக நடக்க வேண்டுமென்பதை உரத்த குரலிலே சொல்வது எப்படி தவறாக இருக்க முடியும். அதுவும் பொது வுடமைக் கட்சி எப்படி தவறாக அதைக் கருதுகிறது?

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற் காக நீண்ட பதிலை அவருக்கு சொல்ல வேண்டி இருக்கும். அதற்கு நேரம் இல்லை. ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல, அரசியல் சட்டத்திருத்தத்தை பாராளு மன்றத்திலே நிறைவேற்ற முடியாமல் தவித்தார்கள். அன்றைக்கே நிறைவேறி இருக்கவேண்டியது. அது ஒத்திப்போடப்பட்டு பின்னாலே செய்ய வேண்டிய நிலை வந்தது. இந்த அரசாங்கத் திற்கு எதிராக என்னென்ன அவதூறு பிரச்சாரங்களும், தேவை யில்லாத பிரச்சாரங்களும் நடக்கிறது என்ற பட்டியல் எங்களிடம் இருக்கிறது. இந்தச் சபையிலேயே பல அம்பலம் ஆக்கப்பட் டுள்ளன. இப்போது பேசப்பட்டதிலேயே, தொழில் சம்பந்தப் பட்ட வரையிலே, கூட்டுறவுத்துறை என்றால் என்ன என்பதைப் பற்றி சொல்லும்போது நமது முதலமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். இதற்கு முழுவதற்கும் ஆதாரம் இல்லாமல் நாங் கள் சொல்ல மாட்டோம் அல்லது உண்மைகளைத் தெரியாமல் சொல்லமாட்டோம், அப்படி நாங்கள் தப்பு செய்தால் நீங்கள் எங்களுக்கு எடுத்துக் காட்டுங்கள். நாங்கள் அதைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அந்த முறையிலே அரசியல்

கட்சிகளுடைய செயல்பாடுகளை, போக்குகளைப் பற்றித்தான் நாங்கள் சொல்கிறோமே தவிர அதைப்பற்றி வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? வி.பி. சிங் அரசாங்கம் நீடுழி வாழ்க என்று நீங்கள் சொல்லத் தயாராக இல்லையே. அதைச் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை. அவர்கள் செய்யக்கூடிய காரியங்களை முறையாக நடக்க அனுமதிக்க வேண்டுமில்லையா.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ராஜீவ் காந்தியினுடைய அரசாங்கம் நீடுழி வாழ்க என்று எப்படி உங்களால் சொல்ல இயலவில்லையோ அதேபோல் வி. பி. சிங் அரசாங்கம் நீடுழி வாழ்க என்று எங்களாலும் சொல்ல இயலாது. ஏன் சொல்ல வேண்டும்? அவர்கள் எங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுக்கவில்லை என்றால் நாங்கள் சொல்லத் தேவைகளுக்குயில்லையே.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, உங்களை நாங்கள் அந்தமாதிரி கோஷம் கொடுக்கச் சொல்லவில்லை. இப்போது நீங்கள் சொன்னீர்களே, வாட்டர் கேட் என்று, அதேபோல் போபர்ஸ் கேட் என்று இல்லையா இந்தியாவிலே. இதை நாங்கள் பேச ஆரம்பித்தால் என்னவாகும். நான் சொல்வது, காங்கிரஸ் கட்சியினுடைய பெயரைச் சொல்லியல்ல. எந்தக் கட்சியையும் அட்ரிபியூட் பண்ணாமல் நான் சொல்கிறேன். போபர்ஸ் இந்தியாவிலே இல்லையா. இப்போது விசாரணை நடக்கிறதா, இல்லையா? இப்படி நாங்கள் ஒவ்வொன்றாகச் சொல்ல முடியும். மிக ஆழமாகப் போக முடியும். தயவு செய்து குமரி அனந்தன் அவர்கள் என்னைப் பேச அனுமதித்து, அவர்கள் பின்னாலே தன்னுடைய சந்தேகங்களைக் கேட்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கவிழ்ப்பு முயற்சிகள் நடைபெறுகின்றன. அது மத்திய அரசுக்கு எதிராகவும் தமிழக அரசுக்கு எதிராகவும் இருக்கிறது. அதைத் தடுத்து, தமிழக மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து, இன்றைக்கு நாங்கள் அனுமதி தருகின்ற ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான பணம் நல்ல முறையிலே செலவழிக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் இந்த அரசாங்கத்திற்கு வரக்கூடிய அபாயங்களை எச்சரிக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. அந்த விஷயமாகத் தான் நாங்கள் இதை குறிப்பிடுகிறோம்.

[திரு. கே. ரமணி] [1990 மே 7

இதிலே, ஒரு முக்கியமான அம்சம் நான் சொல்லும் போது குறிப்பிடவேண்டியது, விலைவாசி ஏற்றம். இதுகுறித்து மக்களுடைய முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றை சொல்லவேண்டியதிருக்கிறது. விலையேற்றம் இன்றைய தினம் கடுமையாக உள்ளது. அதிலும் இப்போது மத்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ள பட்ஜெட்டிலே ரெயில் கட்டணம், பொதுமக்களுக்கு உள்ள கட்டணம், சரக்குகளுக்கு உள்ள கட்டணம் இவையெல்லாம் உயர்ந்திருக்கின்றன. அதேபோன்று, பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களுக்கு எல்லாம் வரி உயர்வு ஏற்பட்டிருக்கிறது. இப்படி பல வரி உயர்வுகள் கொண்டுவரப் பட்டுள்ளன. அதை something like judicial notice இது நாடே அறிந்தது. அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படிப்பட்ட விலையேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அது தமிழ் நாட்டிலும் இருக்கிறது. தமிழ்நாட்டிலே இன்னும் விலையேற்றம் அதிகப்படுத்துவதற்கு பல காரியங்கள் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விலையேற்றங்கள் மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டிலே வந்திருக்கிறது. அதைக்கூட நாங்கள் விமர்சித்து இருக்கிறோம். இந்த மாதிரி நடவடிக்கைகள் நம்மை மக்களிடம் இருந்து ஏலினேட் செய்யும் : மக்களிடம் இருந்து நம்மை அப்புறப்படுத்தும். கவிழ்ப்பு வேலைகளும், பிளவு வேலைகளும் செய்வதற்கு நாட்டிலே இருக்கும்படியான பல்வேறு கட்சிகள் அதை எப்படி பயன்படுத்திக் கொள்ளும் என்பது உங்களுக்குத் தெரியும். அதை இப்போது மத்திய சர்க்காரே உணரக் கூடிய அளவிற்கு, சிந்திக்கக்கூடிய அளவிற்கு இன்றைய தினம் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய பிரதிபலிப்புத்தான் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மதுதண்டவதே அவர்களும் மத்திய அரசும் கலந்தாலோசித்து சர்க்கரையினுடைய விலையைக் குறைக்க, சிமென்டினுடைய விலையைக் குறைக்க, தேயிலையினுடைய விலையைக் குறைக்க, உணவு எண்ணெயினுடைய விலையைக் குறைக்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட மிகமிக அத்தியாவசியமான பொருள்கள், இவற்றைப்போல மற்ற பல பொருள்களுக்கும் sympathetic price rise -லே வருமே அதுபோன்ற மற்ற பொருள்களுக்கும் விலையேற்றம் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட விலையேற்றத்தைத் தடுப்பதற்கான ஒரு இயக்கத்தை இன்றைக்கு அரசாங்கமே நடத்த வேண்டியிருக்கிறது. அரசாங்கம் நடத்தக்கூடிய அந்த இயக்கத்தை அவர்கள் மட்டுமே நடத்தி வெற்றி பெற்றுவிட முடியாது. அவர்கள் சில உத்தரவுகளைப் போடலாம். விதிகளைப் போடலாம்.

1990 மே 7[ திரு. கே. ரமணி]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

11-05 மணி

சப்ளையை அதிகமாக்கலாம். உணவு எண்ணெய்களை ஏராளமாக இறக்குமதி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். ஒரு கிலோ பாம்-ஆயில் கூட இங்குள்ள கார்டுகளுக்கு கொடுக்க முடியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் அவர்கள் நிவர்த்தி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இதற்கு நாமும் தமிழக அரசும் தமிழ்நாட்டு மக்களும் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அது வெற்றி பெறும் அதனால் அவர்கள் இந்த விலையைக் குறைப்பதறகு சிந்திக்க வேண்டும். விலையேற்றத்தையும் கள்ளமார்க்கெட்டையும் எதிர்த்து ஒரு இயக்கத்தை நாடு முழுவதும் நடத்த வேண்டுமென்று சொல்ல வேண்டிய நிலைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். அதில் நாமும் பங்கு எடுகக வேண்டும். அரிசி விலையேற்றம் இங்கே வந்தபோது நாங்கள் அதைப்பற்றி விமர்சனம் செய்தோம். அரிசி விலையேற்றத்தை ஒரு பிடிவாதமான காரியமாகப் பார்ப்பது சரியல்ல என்பது எங்களுடைய கருத்து. விநியோகத் திட்டங்களைச் செம்மைப் படுத்தவேண்டும். இந்தப் பொது விநியோகத் திட்டம், விலையேற்றத்திற்கு எதிரான ஒரு ஆயுதம். ஒரு எதிர்ப்பு நடவடிக்கை. மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு இயக்கம். ஆகவே, அந்தவிநியோகத் திட்டத்தை செம்மைப்படுத்தவேண்டும். விலையேற்றத்தை எதிர்த்து போராட்டம் நடத்த இந்த அரசும், இங்குள்ள எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து, குமரி அனந்தன் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து இந்த விலைவாசி ஏற்றத்தை எதிர்த்துப் போராட வேண்டும். மேற்கு வங்கத்திலும் கேரளத்திலும் நாங்கள் விநியோகம் செய்து, அதனால் எங்களுக்கு ஏற்பட்ட சில அனுபவங்களை நாங்கள் அன்றைக்கே சொன்னோம். ஆனால், நமது முதல்வர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அங்கேயும் அரிசி விலை ஏறியிருக்கிறது என்று, நாங்கள் அதை மறுக்கவில்லை.

ஆனால் ஒரு விஷயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். 14 விதமான பொருள்களை மேற்கு வங்கத்திலே விநியோகம் செய்கிறார்கள். அதற்கெல்லாம் காசு பணம் செலவு அதிகமாக இருக்கத்தான் செய்யும். இல்லையென்றால் முடியாது. அரிசி, கோதுமை, சர்க்கரை, உணவு எண்ணெய், வாஷிங் சோப், நல்ல சோப், பிஸ்கெட், கடுகு, மிளகு, சீரகம் போன்ற ஸ்பைசஸ், உப்பு, மெழுகுவர்த்தி, நெய், பருப்பு வகையறா, பால் பவுடர், தீப்பெட்டி இப்படி 14 பொருட்களை விநியோகம் செய்கிறார்கள். இந்த 14 பொருள்களையும் வாங்கி சேமித்து, அதை சப்சிடைஸ் பண்ணி, அங்கே விநியோகிக்கிறார்கள். விலை எப்படி இருக்கிறது என்றால், நீங்கள் அதையும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

அரிசி மூன்று ரகங்கள் கொடுக்கப்படுகின்றன. இங்கே இருக்கிற மாதிரி. முதல் ரகம்—கீழ் மட்டத்திலே இருக்கிற ரகம் 2 ரூபாய் 82 பைசா : இங்கே அதைவிட விலை கொஞ்சம் கம்மியாக இருக்கிறது இரண்டாவது ரகம், 3 ரூபாய் 49 பைசா : மூன்றாவது ரகம், 3 ரூபாய் 71 பைசா. ஆனால் அங்கே வழங்கப்படுகின்ற அரிசி அளவு என்ன தெரியுமா? வயது வந்த மனிதனுக்கு, தலைக்கு 7 கிலோ ஒரு மாதத்திற்கு வழ்ங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் மூன்றரை கிலோ ஒரு மாதத்திற்கு வழங்கப்படுகிறது. 4 பேர்கள், 5 பேர்கள் உள்ள குடும்பத்திலே, 3 பெரியவர்கள் 2 குழந்தைகள் இருந்தால் கூட 25 கிலோவிலிருந்து 30 கிலோ வரைக்கும் அரிசி அவர்களுக்கு கிடைக்கும். இங்கேயுள்ள விலையைக் காட்டிலும் அங்கே சில பைசா அதிகமாக இருந்தாலும் கொடுக்கப்படுகின்ற அரிசியின் அளவு அதிகம் என்பது ஒரு முக்கியமான அம்சம். அதேமாதிரி கோதுமை கொடுக்கிறார்கள். அதற்கு 2 ரூபாய் 40 பைசா விலை, அதேமாதிரி உணவு எண்ணெய் தலைக்கு மாதம் ஒன்றுக்கு 1 கே.ஜி. அங்கே விநியோகம் செய்யப்படுகிறது. மற்ற பொருள்களும் தேவையான அளவிற்கு பொது மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். ஆகவே, விலையேற்றத்தைத் தடுப்பதற்கு இருக்கிற மிக முக்கியமான இந்தப் பொருள் விநியோகத் திட்டத்தை இங்கே கொண்டு வரவேண்டும்.

இங்கே நடைபெறுகிற விநியோகத் திட்டத்திலே சரியான கண்காணிப்பும் தேவை. அரிசி விலையைக்கூட குறைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. ஏனென்றால் நாம் ஏற்கெனவே விலை குறைத்து கொடுத்துக் கொண்டு இருந்தோம். அதற்கு அடக்க விலை என்னவாகும் என்பதை உணவு அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்க அறிக்கையிலே நான் படித்தேன். அதிகப்படியான பணம் ஆகிறது என்பது உண்மை. ஆனால், மக்களுக்குச் செய்கின்ற ஒரு பெரிய ரிலீபாக, நிவாரணமாக அது இருக்கும் என்பதால் அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்பதை நாங்கள் இன்றைக்கும் விரும்புகிறோம். விநியோகத் திட்டத்தைச் செம்மைப்படுத்தி, ஊழல்களை அடியோடு ஒழித்து, மக்கள் அனைவரும் எதிர்பார்க்கின்ற ஒரு விநியோகத் திட்டமாக நாம் இதைப் பலப்படுத்த வேண்டும். அதற்கு நாங்கள் எல்லோரும் ஒத்துழைப்பு கொடுக்கவும் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதேமாதிரி தொழிலாளர்களுக்கான உரிமைகளைக் கொடுக்கும்பொழுது, உரிமைகளை நமக்கு அரசு வழங்கி உள்ளது. அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அரசாங்கத்திலே நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்கள், அந்தச் சட்டங்களினால் ஏற்படக்கூடிய

நன்மைகளைக் குறைத்து, அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும்படியான நடவடிக்கைகளை அமலாக்குவதற்கு அனுமதிக்கக் கூடாது: எந்த அரசாங்க அதிகாரிகளையும் அதற்கு அனுமதிக்கக் கூடாது.

11 10 மணி

தொழில் நெருக்கடி என்று கூறி, தொழிலாளர்கள் மீது சட்டங்களைக் காட்டி அவர்களின் நன்மையைக் கைவிட்டுவிடக் கூடாது. அதன் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் சுமைகளை அவர்கள் ஏற்கும்படியான நிலைமையை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. தொழிலாளர்களுக்கு எதிராக உள்ள சட்டங்களை, ஒன்று ரத்து செய்ய வேண்டும். அல்லது திருத்த வேண்டும். மத்திய அரசாங்கமே, ராஜீவ் காந்தி காலத்தில் கொண்டு வரப் பட்ட தொழிலாளர் விரோதமான சட்டத்தை இப்போது இந்தக் கூட்டத் தொடரிலேயே ரத்து செய்துவிடப் போவதாக செய்திகள் வந்திருக்கின்றன. அது நல்லது.

அடுத்தது, ரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தொழிற் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமது அரசாங்கமே இந்த நடைமுறையைக் கொண்டுவந்து ஆரம்பிக்க வேண்டும். அரசுக்கு இந்த விஷயத்தில் கொள்கை வித்தியாசம் இருக்க முடியாது. ஆகவே அதைச் செய்ய வேண்டும்.

மூடியுள்ள ஆலைகளைத் திறப்பதில் இந்த அரசாங்கம் ஸ்லோவாக இருக்கிறது. பணப்பிரச்சினை ஒரு காரணம் என்று சொல்கிறார்கள். மத்திய அரசிடம் நிதி நெருக்கடி இருக்கிறது. இருந்தபோதிலும் கூட மத்திய அரசின் நிதியைப் பெற்றுக் கொண்டு, அந்த ஆலைகளைத் துரிதமாக திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி திறக்கும்போது, முன்பிருந்த எந்த தொழிலாளர்க்கும் வேலையில்லாமல் போகக்கூடாது. முன்பு அவர்கள் அனுபவித்த உரிமைகள் அனைத்தையும் பெறவேண்டும். அவைகளை வெட்டிக் குறைக்கக் கூடாது. என்றுசொல்லிக்கொள்கிறேன். அதைச் சொல்லும்போது, அந்த மந்திரி மூடியிருக்கிற தொழிற்சாலைகளைத் திறக்க மறுக்கின்ற முதலாளிகளிடமிருந்து அந்தத் தொழிற்சாலைகளை பெற்று, அரசாங்கமே அந்தநிர்வாகம் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்

கொள்கிறேன். எல்லாத் தொழிற்சாலைகளையும் ஏற்கவேண்டுமென்று சொல்லவில்லை. அது இப்போது முடியாது. தொழிற்சாலைகளை தேசியமயமாக்க வேண்டுமென்பது இப்போது முடியாது. ஆனால் இப்படி திறக்கப்படாமல் இருக்கின்ற ஆலைகளின் நிர்வாகத்தை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். மத்திய அரசிடம் அனுமதி பெற்றாவது அந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டும். 1968ஆம் ஆண்டு, இதே சட்டமன்றம், ரிலீப் அண்டர்டேக்கிங்ஸ் ஆக்ட்-ஐ நிறைவேற்றியிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுடைய பிரச்சினையில் சில விஷயங்கள். காவிரி ஆற்று நீர்ப் பங்கீடு பற்றி, நமக்கு என்ன நிலைமை ஏற்படுமோ என்ற வேதனையோடு நாம் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து கட்சி வித்தியாசம் இல்லாமல் சொன்னோம். வெளியில் அந்த வித்தியாசம் இருந்தாலும், இங்கே சட்டமன்றத்தில் நமக்குள் எந்த வேற்றுமையும் இல்லாமல் நாம் ஒன்று சேர்ந்து நின்றதன் விளைவாக ,இன்றைக்கு டிரிபியூனலுக்குப் போய் இருக்கிறது. ஆனால் அந்த டிரிபியூனலும் காலம் கடத்தாமல், குறிப்பிட்ட கால வரைக்குள் முடிவைக் கொடுக்க வேண்டுமென்று காலத்தை நிர்ணயித்து, அதற்குள் கொடுக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிலச்சீர்திருத்த சட்டம் அடுத்தது. அந்த மானியத்தில. திரு. வீரையன் அவர்கள் பேசும்போது சில காரியங்களை எடுத்துச் சொன்னார்கள். பினாமி நிலங்களைக் கைப்பற்றக்கூடிய ஒரு சட்டத்தை கொண்டுவர வேண்டும். நிலச்சீர்திருத்த சட்டத்தின் படி, உச்சவரம்பின் மிச்ச நிலத்தையும் பினாமியாக இருக்கக்கூடிய நிலத்தையும் ஒரு சட்டத்தைப் போட்டு எடுக்கக்கூடிய Comprehensive Land Reforms Legislaton என்ற சட்டத்தை உடனடியாக இந்த அரசு கொண்டுவர வேண்டும். கோடிக்கணக்கான கிராம மக்கள் இருக்கிற இந்த நாட்டில் நில உச்சவரம்புச் சட்டம் வெற்றி பெறுவது மிகவும் அவசியமானது. அதேமாதிரி, கோயில் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் விவசாயிகள் தான் உழுது பயிரிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலங்கள் கிடைக்கக்கூடிய ஒரு சட்டத்தையும் நாம் கொண்டுவர வேண்டும். அப்படிப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு சமூக பாதுகாப்பு கிடைக்க சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கு இப்போது ரூ. 250 கொடுக்கிறார்கள். ஏற்கெனவே மத்திய அரசு ஊக்கத் தொகையாக ரூ. 20 சேர்த்து கொடுக்கிறார்கள். அந்தப் பணத்தையும் நீங்கள் சேர்த்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. அதைச் செய்ய வேண்டும்.

அடுத்தது பிரஜா உரிமை. அந்த உரிமைகள் முழுவதுமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றத்தில் நாங்கள் சொன்னோம். அதற்காகப் போராட்டங்கள் கூட நடத்தினோம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதில் தலையிட்டு, எடுத்த நடவடிக்கையின் விளைவாக மாநகரத்தில் இருக்கிற அந்த 41-வது தடை உத்தரவை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதனால் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மற்ற மாநகரங்களான கோவை, மதுரை போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப் படவேண்டும். அது மட்டுமல்ல, மாநகரங்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் எல்லாப் பகுதிகளிலும் இந்த பிரஜா உரிமை என்று சொன்னால் அது பொது ஜன நன்மைக்கு விரோதத்தை உண்டுபண்ணும்படியானஐசொலேட்டட் இன்சிடெண்ட்டுகளை ஜெனரலைஸ் பண்ணி, அங்கே அதை தடை செய்கிற நிலைமை இருக்கக்கூடாது. அவர்களுக்கும் அந்த உரிமை கொடுக்கப்பட வேண்டும். சமூக விரோதிகளும் மற்றவர்களும் தொழிலாளர் ஊர்வலங்கள் போன்றவைகளில் உள்ளே புகுந்து தகராறு உண்டாக்கி கடுமையாகத் தாக்கப்படக் கூடிய அளவில்...... (மணியடிக்கப் பெற்றது). 2—3 நிமிஷம் சேர்த்துத் தர வேண்டும். ஒரு பில்லில் பேசும்போது, ரொம்ப தூரத்திற்கு தொண்டையைப் பிடிக்கக்கூடாது. (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வேளாண்மைத் துறை சட்டமுன்வடிவு வேறு இருக்கிறது. அதிலும்பேசுகிறார்கள். விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

11-15 மணி.

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பில்லிலே பேசும்போது ரொம்ப நேரம் நான் பேச முடியாது. தொண்டை வலிக்கிறது. எனவே, நான் அதிக நேரம் எடுக்கவில்லை. சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

அப்படிப்பட்ட சமூக விரோதிகளையும், சட்ட மீறல்களையும் தடுப்பதோடு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு ஆட்சேபனையில்லை. அதைச் செய்யலாம். ஆகவே நாட்டினுடைய அரசியலினுடைய ஜனநாயக வாழ்வை மேலும்

முன்னேற்றும் வகையில் நமது காவல் துறை நடந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பயிற்சி அவர்களுக்குத் தேவை. இன்றைக்கு இந்த அரசும், மத்திய தேசியமுன்னணி அரசும் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரு ஜனநாயக நடைமுறையை கையாண்டு ஆக வேண்டும். அந்த நடைமுறைக் கையாள் வதற்கு அதற்குரிய பயிற்சி அவர்களுக்கு வேண்டும். அந்தப் பயிற்சி அதிகாரிகளுக்கு இல்லையென்றால் தவறு செய்வார்கள். அரசாங்கத்திற்கு மட்டுமல்லாமல் மக்களுக்கும் அதனால் கெடுதல் ஏற்படும். ஆகவே, அதைச் செய்ய வேண்டும்.

அதுபோல, மத, ஜாதி, கலவரங்கள், மிக பயங்கரமான நிலைமை இருக்கிறது. எங்களுக்கு எல்லாம் என்ன சந்தேகம் ஏற்படுகிறது என்றால், திட்டமிட்ட முறையில், அமைதியாக இருப்பதைக் கெடுப்பதற்காக, பல சூசகமான நிலைமை நாட்டிலே தென்படுவது மாதிரி தெரிகிறது. அதற்கு ஏற்ப, திண்டுக்கல்லில், விழுப்புரத்தில், தஞ்சையில் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு அடிதடி நடந்திருக்கிறது. அதுபோல குமரி மாவட்டத்தில் நடந்திருக்கிறது. அதுபோல, எத்தனையோ உதாரணம் இருக் கிறது. இவைகளையெல்லாம் பார்க்கும்போது, எப்படியாவது இந்த அரசை, மத்திய அரசை பலவீனப்படுத்துவது என்பது தான் அவர்களுடைய திட்டம். குழப்பங்களையும், போராட்டங் களையும் உருவாக்கி, அநியாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்களை இந்தப் பக்கம் இழுத்து, இந்த வகுப்புக் கலவரங்களைத் தூண்டிவிட்டு ஒரு நிலைமையை உருவாக்குவதற்கான வழிவகை யைச் செய்கிறார்கள், ஈடுபடுகிறார்கள்.

அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுடைய ஏஜெண்டுகள் இந்திய நாட்டிலே வகுப்புக் கலவரத்தையும், ஜாதிக் கலவரத்தையும் வளர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும், எடுத்துக் கொண் டிருப்பதை ஒவ்வொரு மாநில முதலமைச்சர்களும் கவனமாகப் பார்த்து அதன்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று பிரதமர் மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்கள் எல்லா மாநில அரசுகளுக்கும், எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியிருப்பதாக நாம் பத்திரிகையில் பார்த்தோம். இது யதார்த்த உண்மை. யதார்த்த நிலைமை. இதிலே இந்த அரசு அக்கறையாக இருக்க வேண்டும். நாட்டு ஒற்றுமைப் பிரச்சினை இது. நாடு இல்லாமல், ஒற்றுமை இல்லாமல் எந்தக் காரியத்தையும் நாம் செய்ய முடியாது. வகுப்புக் கலவரங்களை

TRUTH ALONE TRIUMPHS

1990 மே 7] [திரு. கே. ரமணி]

ஜாதிக் கலவரங்களை கடுமையாக கன்ட்ரோல் பண்ண வேண்டும். கடுமையாக ஒடுக்கியாக வேண்டும். அதற்குரிய சூழ்நிலை உருவாக விடக் கூடாது. அந்தச் சூழ்நிலை வராமல் இருக்க வேண்டுமானால் அதற்கு மக்களைத் திரட்டிப் போராட வேண்டிய பொறுப்பு நம் அரசுக்கும் இருக்கிறது. அனைத்துக் கட்சிகளுக்கும் இருக்கிறது.

இன்றைக்கு காஷ்மீரிலும், பஞ்சாபிலும், இப்போது அஸ்ஸாமி லும் நடக்கக்கூடிய பிளவுகள், அந்நியர்கள் பயிற்சிக் கொடுத்து, இந்த நாட்டிலே ஆயுதங்களை அனுப்பி, நாட்டினுடைய ஒற்று மையை தகர்த்து எறிந்து பலவீனப்படுத்துவது ஆகும். அது போல பலாத்காரத்தைத் தூண்டிவிட்டால வகுப்புக் கலவரம் வளரும் என்பதுதான் அவர்களுடைய சயின்ஸ், அவர்கள் கண்டு பிடித்திருக்கும்படியான விஞ்ஞானம் ஆகும். எங்காவது ஒரு ஜாதியில் ஒரு கொலை செய்யப்பட்டால் உடனே ஜாதி எண்ணத் தைக் கிளப்பி விட்டு 10 கொலைகள் இந்தப் பக்கம் செய்து அதை வளர்ப்பது என்பது அவர்களுடைய தந்திரம். அந்தத் தந்திரத்தை ஒடுக்குவதற்காக நாட்டு மக்களை முழுவதும் திரட்டும்படியான இயக்கங்களை நாம் நடத்தியாக வேண்டும். அன்றைக்கு நான் இந்த அவையில் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சமாதான கமிட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக் கப்படும் என்று சொன்னார்கள். அது நல்ல யோசனை. அது அவசியம் வர வேண்டும். அது மட்டும் பத்தாது. இன்றைக்கு நிலைமை தீவிரமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அகில இந்திய ரீதியிலும் நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. அதை இங்கே யும் உபயோகப்படுத்துவார்கள். ஆகவே, அத்தனை மக்களையும் ஒன்று திரட்டும்படியான நடவடிக்கைகளில் ஆளும் கட்சியும், மற்ற எதிர்க்கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும் என்பது என்னு டைய வேண்டுகோள்.

இது போக ஒன்றிரண்டு சின்ன கோரிக்கைகளை மட்டும் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு மெட்ராஸ் ரிபைனரியில் நடக்கும்படியான போராட்டங்களை எடுத்துக் கொண்டால் அங்கே காண்ட்ராக்ட் தொழிலாளிகளை, பல ஆண்டு களாக வேலை செய்து கொண்டிருந்தவர்களை, வெளியேற்றி யிருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. தடி யடி உட்பட போலீஸ் ஆக்ஷன் அத்தனையும் அங்கே நடந்தது. அதனைத் தீர்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய ஆலோசனையைக் கொடுத்து, அதிகாரிகளைக் கொண்டு அத னைத் தீர்த்து வைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல நெல்லை மாவட்டத்தில் நயினார் மில் என்கிற மில் இருக்கிறது. அவர்கள் எந்தச் சட்டத்தையும் மதிக்கவில்லை. நான் அந்த ஊருக்குப் போய்ப் பார்த்திருக்கிறேன். அங்கே இன்றைக்கு எங்கள் தலைவர் திரு. ராஜாங்கம் அவர்கள் சாகும்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. கே. ரமணி] [1990 மே 7

வரை உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக உத்தரவு அனுப்பி அந்த மில் சட்டப்படியுள்ள சகல உரிமைகளையும் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, பி அண்ட் சி மில் இங்கே இருக்கிறது. பி அண்ட் சி மில்லைப் பொறுத்தவரையில் இது நம்முடைய மூக்குக்குக் கீழே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. It is under the very nose of the Government. அந்த மில் இன்றைக்குப் பூட்டப்படுமா நாளைக்குப் பூட்டப்படுமா என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது. அங்கே 14 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த பக்கிங்காம் கர்நாட்டிக் மில் பெயர் போன மில். இன்றைக்கு அந்த மில் என்ன நிலைமையில் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அந்த மில் இனிமேல் பூட்டப்படாமல் இருக்க தேசியமயமாக்கப்பட வேண்டும். அதை நாம் செய்ய முடியாது. ஆனால் தேவையானால் அதனுடைய நிர்வாகத்தை எடுத்து நடத்த, அதை தேசியமயமாக்க, மத்திய அரசுத் துறையில் அவர்களே தேசியமயமாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லி நாம் வற்புறுத்தியாக வேண்டும். அதுமாதிரி அழுகும் பொருள் வியாபாரிகள் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். இங்கே இருக்கும்படியான கொத்தவால் சாவடியை இட மாற்றம் செய்து கொடுக்க ஏற்பாடு ஆகியிருக்கிறது. இப்போது ரொம்ப கடுமையான இட நெருக்கடி இருக்கிறது. நான் 4 ஆண்டுக்காலம் இந்தச் சென்னை நகரத்திலே தொழிற் சங்க வேலை செய்து, பிராட்வேயில் நான் இருந்த காலத்தில், அந்த கொத்தவால் சாவடிப் பகுதியில் எந்த ஓட்டலிலும் போய் நாங்கள் சாப்பிட முடியாது. அப்படிப்பட்ட அந்த இடத்தில் உள்ள நெருக்கடியை மாற்றி, அவர்களுக்குப் புதிதாகக் கொடுக்கப் படுகிற இடத்தில் உள்ள விலை ரொம்பக் கடுமையாக இருக்கிறது. சாதாரண வியாபாரிகளால் அதைத் தாங்க முடியவில்லை. அதை மாற்ற வேண்டும்.

11-20 மணி

அடுத்து, மோட்டார் வாகனச் சட்டத்தில் செய்திருக்கிற வரி விதிப்பில் ஆம்னி பஸ்களுக்கு வரி போடுவதில் நாங்கள் எந்தவித ஆட்சேபனையும் சொல்லவில்லை. ஆம்னி பஸ்கள் ரெகுலர் பஸ்களாகப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆனால் ஸ்பேர் பஸ்கள் என்று பள்ளிக்கூடக் குழந்தைகளைக் கொண்டு செல்லும் பஸ்களுக்கு வரி அப்படிப் போட முடியாது. சிவகாசியில் தீப் பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தைகளைக் கொண்டு போகும் ஸ்பேர் பஸ்களுக்கும் அந்த வரியைப் போட முடியாது. சின்னச் சின்னக் கம்பெனிகளில் ஸ்பேர் பஸ்கள் இருக்கின்றன. ஸ்பேர் பஸ்களை ஆம்னி பஸ்களாக உபயோகப் படுத்தினால் எந்தவித நடவடிக்கை வேண்டுமானாலும் எடுக்கலாம். ஸ்பேர் பஸ்களுக்கு ஆம்னி பஸ் வரியைப் போட்டால் அவர்களால் கம்பெனியை நடத்த முடியாது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1990 மே, 7]* [திரு. கே. ரமணி]

அடுத்து, கார்ப்பரேஷன் தேர்தல்களையும் கூட்டுறவு ஸ்தாபனங்களுடைய தேர்தல்களையும் அரசு அறிவித்துள்ளது. வரவேற்கிறோம். இந்தத் தடவையாவது மேற்கொண்டு ஒத்திப் போடுவது என்ற நிலை இல்லாமல் அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இந்தத் தேர்தலை நடத்தி, வெற்றி பெற வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை வரிசைக் கிரமமாக அரசு முன்வந்து எடுத்தால், காசு பணம் அதிகமாகும் என்பதில் சந்தேகமில்லை. எந்த இடத்தில் பணம் இருக்கிறதோ அங்கே வரி போட்டு எடுப்பதற்கு நாங்கள் ஆதரவு தருவோம். அப்படிப்பட்ட முறையிலே புதிய சட்டங்களும் இன்றைக்கு ஏற்பட்டுள்ள புதிய ஆட்சி மாற்றங்களினுடைய ஜனநாயகத் தன்மையும் அந்த நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கடைசி வாக்கியம். சட்ட சபையில் இருக்கக்கூடிய பெரும் மெஜாரிட்டி நமக்கு இருக்கிறது. அதுமட்டும் போதாது. அந்தப் பெரும் மெஜாரிட்டியை நம்பி யில்லாமல், அதற்குப் பின்னால் இருக்கிற பல லட்சக் கணக்கான மக்கள், நம்மோடு நிற்க வேண்டிய மக்கள், வழி தவறி வேறு பக்கத்திலே இருக்கிறார்கள். அன்றாட நெருக்கடியைத்தான் அவர்களுக்கு தீனியாகப் போட்டு நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதற்கு முடிவு கட்டக்கூடிய வகையில் இந்த அரசின் நடவடிக்கை இருக்க வேண்டுமென்றும் அதில் வெற்றி பெற வேண்டுமென்றும் கூறி, அமைகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, போபர்ஸ் பற்றி இங்கே சொன்ன காரணத் தாலே, அப்போதே எழுந்தேன். பிறகு சொல்லலாம் என்று நீங்கள் சொன்னீர்கள். எதெற்கெடுத்தாலும் முந்தைய அரசாங்கத்தை மத்திய அரசாங்கத்தை குறை சொல்வது என்பது பழக்கமாகிவிட்டது. இப்போதிருக்கும் பிரதமர் அவர்கள், நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் 30 நாட்களுக் குள்ளே யார் அந்தக் குற்றவாளிகள் என்பதை எல்லாம் சொல் வேன் என்று சொன்னார்கள். 30 நாட்களுக்குள் அப்படிச் சொல்லாத காரணத்தால், நீங்கள்தானே முன்பு நிதி அமைச்ச ராக இருந்தீர்கள், அதைபோல் அங்கே பலர் அமைச்சராக இருந்தார்கள், நீங்கள் அதை மறைக்க என்ன காரணம்? ஒரு வேளை உங்கள்மீதுதான் அந்தத் தவறோ என்று சொல்லக் கூடிய ஐயத்தின் அடிப்படையிலே இந்த சி.பி. எம். ஏன் அவர் களிடம் கேள்வி கேட்கவில்லை? சொல்லவில்லை என்று சொன்னால் எங்கள் ஆதரவை வாபஸ் வாங்குவோம் என்று ஏன் சொல்லவில்லை?

திரு. கே. ரமணி: துணைத் தலைவரவர்களே, மதிப்பிற் குரிய திரு குமரி அனந்தன் அவர்களைத் தவிர, அனேகமாக அவருடைய கட்சியிலே இருக்கிறவர்களைத் தவிர, வேறு எந்த ஒரு கட்சியும், வேறு எந்த நபரும், எங்களுடைய கருத்துக்கு

மாறுபட்டு இருக்கிறவர்கள்கூட மத்திய அரசினுடைய தவறுகளைக் காரசாரமாக விமர்சித்து சொல்கிறவர்கள் நாங்கள் என்பதை உணறுவார்கள். இன்றைக்கு இருக்கும் இந்த அரசாங்கத்தைகூட. இன்றைய பத்திரிக்கையைப் படித்துப் பாருங்கள், விமர்சித்திருக்கிறோம். ஒரு தொழிற்சாலை மூடப் படுகிறது. தேசிய மயமாக்கிய உடனே சர்க்கார் அதை எடுத்துக் கொள்ளும் என்று சொல்வதைவிட ஒரு மாநில அரசு வேறு முறையைக் கையாண்டு, அந்த முதலாளிகளின் கையில் விடாமல், கொள்ளை அடிக்கக்கூடியவர்களின் கையில் விடாமல் அதை நடத்துவதற்கு வழி இருக்கிறதென்று சொன்னால், அந்த வழியைக் கையாள வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது). அவர் சொல்வதற்குதான் பதில் சொல்கிறேன். இது அரசாங்கம் சம்பந்தப்பட்டது. அப்படி இருந்தால் அந்த முறைதான் சரி, அதற்கு பதிலாக எல்லாவற்றையும் உடனடியாக, எதைக் கண்ணிலே கண்டாலும் அதைத் தேசிய மயமாக்குவது என்ற முறையை மத்திய தொழிலமைச்சர் பேசியதை, திரு ஜோதிபாசு அவர்கள் அவருக்கு நேரிலேயே கேட்டார்கள். இப்படி நேருக்கு நேர் முகத்திற்கு முகம், ஒற்றுமை கெடாமல் விஷயத்தை எடுத்துச் சொல்லும் தர்க்கத்திற்கு நீங்கள் தயாரா? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** ; கடைசியில் பேசுங்கள்,

11-25 மணி

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முன்னாள் தலைவர், இப்போது காங்கிரசு கட்சியின் உப தலைவர் மத்திய சர்க்காரின் குற்றச்சாட்டுப்பற்றி, மத்திய சர்க்காரை குற்றம் சாட்டினார். நடைமுறைக்கு எது தகராறாக இருக்கிறதோ அதை பத்திரி கையைப் பார்த்து தெரிந்து இருப்பார் என்று நினைக்கிறேன். ஏதோ சில ஐட்டங்களை மட்டும் பத்திரிகையிலே பார்த்துவிட்டு இங்கே வந்து ஏதோ சொல்கிறார். அவர்கள் 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். எல்லாவற்றிலும் இப் போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஒரு குற்றம் மட்டும் அல்ல; பல குற்றங்களைச் சொல்லி இருக்கி றார்கள்; எனவே மேலும் பார்க்க வேண்டி இருக்கிறது; நட வடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதை 30 நாட்களுக்குள் முடிக்க முடியுமா என்று கேளுங்கள் அதில் 30 நாட்களுக்குள் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? ஒரு கோர்டுக்கு கேஸ் போனால் 2 வருடம் ஆகிறது; கொலை கேஸ் கூட 3 வருடங்களுக்கு இழுக்கிறது. அதற்கு மேலே பெரிய குற்றம் இது; இண்டர்நேஷ்னல் ஃபிராடு அல்லவா இது?

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : துணைத் தலைவர் அவர்களே..................

1990 மே, 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள் திரு. தீட்சிதர் பேசிக் கொண்டு இருக்கிறார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சாமானியமாக முடியாது. சர்வதேசக் குற்றங்களைக் கண்டுபிடிப்பது என்பது இன்னும் அதற்கு மேல் ரொம்ப சிரமம். அங்கே மேலே தமிழினத் தலைவர் கலைஞர் வந்து உட்கார்ந்து இருந்தார். ராம் என்ற ஒருவர் வந்து இருந்தார். அவர் எங்கே உட்கார்ந்து இருந்தார் தெரியுமா? நிருபர்கள் எல்லாம் அங்கே உட்கார்ந்து இருந்தார்கள்; ஆனால் அவர் எங்கேயோ உட்கார்ந்து இருந்தார்; நான் போய் அவரைக் கூட்டிவந்து உட்காருங்கள் என்று சொன்னேன். ராமை உங்களுக்கு தெரியும். அவர் 'இந்து' பத்திரிகை நிருபர் அவர் ஃபேமஸ் ஆனவர் அல்லவா? இந்தக் காலத்தில் ராம்-சித்திரா சுப்பிரமணியம் என்று சொன்னால் தெரியும். பல குற்றங்கள் வெளியே வந்து இருக்கின்றன. அவைகளை நிருபிப்பது சாமானிய காரியம் அல்ல, குற்றங்களை நிருபிப்பது இந்தக் காலத்தில் சாமானியமல்ல. குற்றம் பண்ணலாம். ஆனால் அந்தக் குற்றத்தை நிருபிப்பதுதான் கஷ்டம் ஆகையினால் அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். 30 நாட்களில் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்.

திரு. பி. வி. இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, குற்றங்களை நிருபிப்பதற்கு இன்றைக்கு அவகாசம் கேட்கின்றார்கள், நாடாளுமன்றத் தேர்தலின் போது அன்றைக்கு, எங்களிடம் ஆட்சியைக் கொடுங்கள், ஒரு வாரத்தில் போஃபர்ஸ் திருடனைக் கொண்டுவந்து வீதியிலே நிறுத்துகிறேன் என்று சொன்னவர் தான் இன்றைய பிரதமர் மாண்புமிகு வி.பி.சிங் அவர்கள். இன்றைக்கு அவரால் இயலாது என்றால் ஆட்சியை விட்டு கீழே இறங்கிப் போகட்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: துணைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு இன்று கண்டுபிடித்து ஆகிவிட்டது. எல்லா பேப்பரிலும் வந்து இருக்கிறது. காங்கிரசு கட்சியின் மாநாட்டிலே குமரி அனந்தன் மேலே நின்று கொண்டு இருக்கும் போதே இந்து பேப்பரிலே, கட்டம் கட்டி, முக்கோண வடிவிலே 'போஃபர்ஸ் திருடனை' பிடித்து ஆகிவிட்டது; அப்புறம் ஒரு வாரம் இருக்கும்; பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னாலேயே குற்றவாளியைக் கண்டுபிடித்து ஆகிவிட்டது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

திரு. குமரி அனந்தன் : பிடித்து ஆகிவிட்டது என்றால் பெயரைச் சொல்ல வேண்டியதுதான் ; முடியவில்லை என்றால் வெளியே போக வேண்டியதுதான். அதுதான் விஷயம் அதற்காகத்தான் அவர் சொல்கிறார்.

திரு. கோ. பூவராகன் : போஃபர்ஸ் பிரச்சினையில் ஏன் சீக்கிரம் வெளியே போகவில்லை என்கிறார்கள். அவர் பாராளுமன்றத்திலே பிரதமராக இருந்த போதே அவர் பேரிலே கேஸ் இருக்கிறது. நீங்களே வெளியே போங்கள் என்று சொல்லிப் பார்த்தோம், எல்லோரும் சொல்லிப் பார்த்தார்கள் ; அதை வைத்து தேர்தல் கூட நடந்தது ; அதற்கு அப்புறம், நாங்கள் வந்த பிறகு அதனுடைய நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்துத்தான், தினந்தோறும் ஏதாவது புதிய புதிய செய்திகள் வருகின்றன. பல பேர் அதிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் ; இந்த ஊரிலே மட்டுமல்ல, வெளி நாட்டிலேயும் பல பேர் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். ஒரு பகுதியில் மட்டும் அல்ல பல பகுதிகளில் அந்த ஜனங்கள் பரவலாக இன்னும் ஆகிக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப் பிரச்சினை இருக்கும்போது, கோர்ட்டுக்கு வழக்கு போகிறது என்று சொன்னார். தீர விசாரித்து நல்ல முறையிலே அதைக் கண்டுபிடித்து, அதற்குப் பிறகுதான் உரிய அளவிலே நடவடிக்கை எடுக்க முடியும் அவசரப்பட்டு அள்ளித் தெளிக்கக் கூடிய அளவிலே இல்லை, இந்த மாதிரி அதிலே இல்லை என்று மறுப்பதற்குத் தயாராக இல்லை. கட்டாயம் நீங்கள் பொறுத்து இருந்து பாருங்கள், என்ன நடக்கிறது என்பதை,

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே அதை அவர் சொல்லி இருக்கிறார் என்று சொன்னார்கள். பாராளுமன்றத்திலே ராஜீவ் காந்தி பற்றி அவர் வெளியே ஒரு புகார் சொன்னது பற்றி ' இது நீங்கள் சொன்னது தானா ? இப்படிப்பட்ட புகாரை நீங்கள் சொல்லி இருப்பதாக பேப்பரிலே வந்து இருப்பது சரிதானா? இதை நீங்கள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். தன்டிகேட் செய்ய வேண்டும் ' என்று கேட்ட போது வி. பி. சிங் வெளியேறிவிட்டார் என்பதை யாரும் மறுக்க முடியாது ; அவராலே பொறுப்பு ஏற்க முடியவில்லை என்று நான் தெளிவுபடுத்துகிறேன்.

திரு. கோ. பூவராகன் ; இதில் பதில் சொல்ல வேண்டியவர்கள் பாராளுமன்றத்தில், வெளியே இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி பேசுவதினால், அந்தக் கட்சியின் சார்பாக

இருக்கின்ற நாங்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றோம். நம்முடைய உறுப்பினர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் சொன்னது போல, அவர்கள் உடனே வெளியேற வேண்டும் என்றால், இது அவரால் தான் வந்தது, அதனால் தான் இன்றையதினம நீங்கள் பதவியை விட்டு வெளியே இருக்கிறீர்கள். அவர்கள் இல்லை என்றால், இன்றைய தினம் நீங்கள் இருக்கும் இடமே வேறு. இன்றைய தினம் மக்கள் மதித்து அவர்களை அந்த ஒரு காரியத்துக்காக மத்தியில் வைத்து இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் முழுமையாக அதைக் கண்டுபிடித்து, உங்களை எந்த இடத்திலே உட்கார வைக்க வேண்டுமோ அங்கே உட்கார வைப்பார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது தொடர்ச்சியாக இப்படியே போய்க்கொண்டிருக்கும். அடுத்து திரு. தென்னரசு. (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு பதில் சொல்லிவிட்டார் குறுக்கீடு இதை அனுமதித்தால் 1 மணி வரையிலே போய்க்கொண்டே இருக்கும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர் பாராளு மன்றத்தைவிட்டு வெளியே போய்விட்டார். அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு வாய்ப்பு வழங்கி ஆகிவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள். அடுத்து திரு. தென்னரசு (குறுக்கீடு) இது இப்படியே போய்க்கொண்டு இருந்தால் அவையை நடத்த முடியாது. (குறுக்கீடு). இல்லை இப்படிப் போய்க்கொண்டிருந்தால் (குறுக்கீடு) நீங்கள் Controvertial ஆகப் பேசாத அளவிற்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

11-30 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர் திரு. ரமணி அவர்கள் காங்கிரஸ் கட்சியை வேறு ஒரு காரணத்திற்காகக் குற்றம் சாட்டிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் எழுந்துதான் இந்த போபர்ஸ் விவகாரத்தை ஆரம்பித்து வைத்தார். அதற்கு ஜனதாக் கட்சியினுடைய உறுப்பினர்கள் பதில் சொல்கிறார்கள், இதில் என்ன தவறு இருக்க முடியும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதல்வரவர்கள் அந்தப் பேச்சு நேரத்திலே பல முக்கியமான அறிவிப்புகள் வந்து கொண்டிருந்த காரணத்தினாலே படித்துக் கொண்டு இருந்திருக்கலாம் அவர்கள் போபர்ஸ் என்று சொல்லுகின்ற வார்த்தையையே சொல்லிச் சொன்னவுடனே நான் எழுந்தேன். ஆனால் (he was not yielding) நான் கீழே உட்கார்ந்துகொண்டு பிறகு சொன்னேன். அவர்கள் சொன்ன காரணத்தினாலேதான் சொல்கிறோம். இப்பொழுது மாண்புமிகு பூவராகன் அவர்கள் சொன்னார்கள், வெளி நாட்டுப் பிரச்சினைகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று. தேர்தல் நேரத்திலே அந்த போபர்ஸ் என்பது என்ன கோயம்புத்தூரிலே செய்ததாக நினைத்தார்களா? அல்லது சுவீடனிலே என்று நினைத்தார்களா? அப்பொழுதே வெளி நாட்டில் இருக்கின்ற பிரச்சினை என்று தெரியும் அல்லவா? அதற்குரிய நாட்களை ஏன் அவர்கள் குறைத்துச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகு நிரூபிக்க முடியவில்லை என்றால் வெளியேற வேண்டியதுதானே நியாயம் என்பதே எங்களுடைய வாதம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இவ்வாறு இந்த மன்றத்திலே அவர்கள் கூச்சல் போடுவதனாலேயே ஏதோ அவர்கள் வெளியேற வேண்டும், வெளியேற வேண்டும் என்பதனாலேயே வெளியேற முடியாது. ஏனென்றால் வெளியேறக்கூடிய நேரம் வரவில்லை. வராது. நிச்சயமாக வராது. ஏனென்றால் அவர்களை வாக்களித்து அனுப்பியிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக வராது, அதில் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நிச்சயமாக வராது. மக்கள் பொறுப்பைக் கொடுத்து அங்கே வைத்திருக்கின்றார்கள். அந்தப் பொறுப்பைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இது சம்பந்தமாக இந்த போபர்ஸ் விஷயமாக உங்களுக்கு ஏதாவது தெளிவாக நல்ல விளக்கம் வேண்டுமென்றால் கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள் என்ன நடக்கிறது என்று யார் யார் எல்லாம் அதிலேயிருந்து ஓடுகிறார்கள், எப்படிப்பட்ட அளவிலே அது கண்டுபிடிக்கப்படுகிறது என்பதை நீங்கள் பொறுத்திருந்து பார்க்கலாம். ஏதாவது விவாதம் வேண்டுமென்று சொன்னால்கூட நம்முடைய மன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று, முதல்வரவர்களுடைய அனுமதியைப் பெற்று இந்த மன்றத்திலே வைத்தால்கூட விவாதத்திற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த 50 நாட்களாகச் சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதங்கள் முடிவுறும் கட்டத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய முதல்வரவர்கள் கடுமையான வாதப் பிரதிவாதங்களையெல்லாம் அமைதிப்படுத்தி, சூடான விவாதங்கள்

நடந்த நேரத்தில் இடையிலே குறுக்கிட்டு அனைவரையும் சிரிக்க வைத்து சபையைச் சுமுகப்படுத்தியதற்காக இந்த நேரத்தில் நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையின்போது அவர்கள் பல சலுகைகளை ஏழை மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் அளித்திருக்கிறார்கள். அதைப்போல அரசு அலுவலர்கள் அனைவருக்கும் ஏராளமான சலுகைகளை நிதிநிலை அறிக்கைக்குப் பதில் அளிக்கும்போது அளித்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை :)

அவைகளைவிட நாம் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புவது, தமிழ்நாட்டு மக்களுடைய நெஞ்சத்தில் அணையாமல் எரிந்து கொண்டிருந்த காவிரிப் பிரச்சினைக்கு நல்ல முடிவை ஏற்படுத்தி அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகின்ற வகையில் அந்தக் காவிரிப்பிரச்சினையில் நடந்து கொண்டதற்காக தமிழ் மக்கள் அனைவரும் முதலமைச்சருக்குப் பாராட்டு தெரிவிக்கிறார்கள்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, மேல்சபை மறுபடியும் தமிழ்நாட்டிற்கு வரப் போகிறது என்ற செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்திலும் இருக்கக்கூடாது; மேல்சபையிலும் இருக்கக்கூடாது என்ற ஒரு தவறான எண்ணத்தின் அடிப்படையிலே மேல்சபை ஒழிக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அதே மேல்சபை மறுபடியும் வருகிறது என்பதை எண்ணிப்பார்க்கின்றபொழுது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய வாழ்க்கையிலே ஏற்பட்ட மகத்தான வெற்றிகளோடு இதையும் நாம் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதையொட்டிச் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

11-35 மணி

திரு. பி. வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, மேல் சபை வருவதற்கு இங்கே நாம் தீர்மானம் இயற்றி நாடாளுமன்றத்திற்கு அனுப்பி இருக்கிறோம். அதே நேரத்தில் தேசிய முன்னணியின் மற்றொரு அங்கமாக இருக்கிற தெலுங்கு தேசக் கட்சி, மேல் சபை வேண்டாம் என்று சொல்கிறதே, தேசிய முன்னணிக்குள்ளே இப்படி ஒரு முரண்பாடு இருக்கிறதே, அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, பத்திரிகையில் தமிழ் நாட்டிற்கு மேல்சபை என்று தான் வந்திருக்கிறது. நாம் ஆந்திர சட்டசபையில் இருந்தால் அதைப் பற்றிப் பேசலாமே தவிர, தமிழ்நாட்டில் நம்முடைய சபை பற்றி தான் நாம் பேச முடியும். நம்முடைய அரசில் பல இலாக்காக்கள் இருக்கின்றன. அந்த இலாக்காக்களில் பிரதானமானது வருவாய்த் துறை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். வருவாய்த்துறை வெள்ளைக்காரன் காலத்திற்கு முன்பே உருவாக்கப்பட்ட துறையாகும். இந்த வருவாய்த்துறை தான் அரசாங்கத்திற்கு அஸ்திவாரமாக அமைந்து இருப்பது. அந்த வருவாய்த் துறையில் நீண்டகாலமாக பின்பற்றி வரக்கூடிய முறைகளை கடந்த கால ஆட்சியில் கலைஞர் அவர்கள் தான் மாற்ற வேண்டுமென்ற முயற்சியை எடுத்து, மலேசியா நாட்டில் வருவாய்த்துறை எப்படி நிர்வாகம் செய்யப்படுகிறது என்பதை அறிந்து வருவதற்கு ஒரு அமைச்சரை அனுப்பி, அங்கேயிருந்து சில விவரங்களை கண்டறிந்து கொண்டு வந்து அதனை அமல் படுத்தினார்கள். அது இப்போது கொஞ்சம் மாற்றம் அடைந்து இருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய நம்முடைய ஆட்சியில் நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல புலமை படைத்தவர்கள், அவர்களுக்கு அமைந்து இருக்கிற செயலாளர் மிகச் சிறப்பு வாய்ந்த செயலாளர் ஆவார்கள். இந்தக் காலத்தில் இந்த வருவாய்த் துறையினை மேலும் புதுப்பிப்பதற்கு நம்முடைய ஆட்சி முயற்சிக்க வேண்டுமென்று நான் முதலில் குறிப்பிட விரும்புகிறேன். தாசில்தார் தான் இந்த வருவாய்த் துறைக்கு முதல்நிலை அதிகாரியாக இருக்கக் கூடியவர். ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து சாகிற வரையில் அவரிடம் தான் கணக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட தாசில் தாருக்கு உதவியாக பல்வேறு குமாஸ்தாக்கள் பணியில் இருந்தாலும் கலவரங்கள் நடந்த காலங்களில் அல்லது கொலை போன்று நடக்கிற பகுதிகளில் 10 நாட்கள் தாசில்தார் அந்த இடத்தை விட்டு போய் விட்டால், தாசில்தார் அலுவலகம் ஸ்தம்பித்து போய், பொது மக்களுக்கு வேண்டிய காரியங்கள் தடைபட்டு விடுகின்றன. தாசில்தார் அலுவலகத்தில் தயாரிக்கப்படுகிற குறிப்புகள் தான் பி.டி.ஓ. ஆபிசுக்கு போகின்றன. பி. டி. ஓ. ஆபீஸ் தான் பொது மக்களோடு தொடர்பு கொண்டு திட்டங்களை செயல்படுத்துகிறது. நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சி இப்போது வந்த பிறகு ஏராளமான திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள் அந்தத் திட்டங்கள் மக்களுக்குப் போய் சேர்வதற்கு பல இடையூறுகள் ஏற்பட்டு கொண்டிருக்கின்றன. அந்த இடையூறுகளுக்கு காரணம் என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தாசில்தார் அலுவலகத்திலிருந்து ஒருவருக்கு கிடைக்க வேண்டிய தொகைக்கான ஆதாரமோ சான்றோ பி.டி.ஓ. விற்கு போய்ச் சேர்வதற்கு 15 நாட்கள் ஆகிறது. அந்த பி.டி.ஓ. அதைச் செயல்படுத்துவதற்கு, தனக்கு கீழே இருக்கிற அதிகாரிகளை ஆணையிடுகிற போது முன்பெல்லாம் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் பி.டி.ஓ. விற்கு

1990 மே, 7] [திரு. எஸ். எஸ். தென்னரசு]

கட்டுப்பட்டு தான் அனைத்து அதிகாரிகளும் இருந்தார்கள். இன்றைய தினம் பி.டி. ஓ.விற்கு கட்டுப்படக்கூடிய சூழ்நிலையில் பஞ்சாயத்து ஆட்சியோ, ஸ்தல சுய ஆட்சியோ இல்லையென் பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். கல்வி இலாக்கா அதிகாரி கல்வி இலாக்காவின் மேல் அதிகாரி சொல்வதைத்தான் கேட்கி றார். மருத்துவ இலாக்கா அதிகாரி மருத்துவ இலாக்கா மேல் அதிகாரி சொல்வதைத்தான் கேட்கிறார். ஆகவே, கமிஷனர் என்ற பதவிக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத காரணத் தால் எல்லா நிர்வாகமும் சீர்குலைந்து போய் ஸ்தல சுய ஆட்சி அடியோடு தரைமட்டம் ஆகிவிட்டது என்பதை நாம் இப்போது எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் மறுபரிசிலனை செய்து யூனியன் கமிஷனருக்கு போதிய அதிகாரங்களைக் கொடுத்து, சிறிய தவறுகளைச் செய் யக் கூடிய அல்லது பெரிய தவறுகளைச் செய்யக் கூடிய ஆசிரியர்கள், அங்கே இருக்கிற ஊழியர்கள் இவர்களையாவது அந்த ஒன்றியத்திற்குள்ளே மாற்றுவதற்கு வேண்டிய அதிகாரங் களை பி. டி. ஓ. விற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

அதற்கு மேலாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குகூட சில அதிகாரங்கள் இல்லாமல் போய் விட்டன. அப்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அதிகாரம் இல்லாமல் போகிறபோது அங்கேயிருக்கிற அரசு ஊழியர்கள் எல்லாம் யாரையும் கண்டு பயப்படுவதோ, பொதுமக்களுக்கு பயப்படுவதோ சட்டமன்ற உறுப்பினர்களை மதிப்பதோ என்ற சூழ்நிலை அற்று போய் விட்டது என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏராளமான சலுகைகளை அளித்து இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைத்து, கலவரங்கள் எல்லாம் இனிமேல் எழக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப் படையில் கூட இல்லாமல், அன்பான உத்தரவுகளைப் போட்டு கலவரங்களை ஒடுக்குகிற அளவிற்கு, பிற்படுத்தப்பட்ட மக்க ளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஏராளமான வசதிகளை வழங்கி இருக்கிறார்கள்.

11-40 மணி

அதிலே இன்று அவர்கள் பதில் அளித்த பிறகு நான் குறிப்பிட வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம், திருச்சிராப் பள்ளியிலேயிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாடு முழுவதும் தெரிவதாலே சொல்கிறேன். திருச்சிராப்பள்ளி யிலிருந்து—காரியாப்பட்டி வரை அதிகமாகப் பரவி

1990 மே, 7] [திரு. எஸ். எஸ். தென்னரசு]

இருக்கக்கூடிய ஒரு வகுப்பு, செட்டிநாட்டு வலையர்கள் அல்லது அம்பலக்காரர்கள் அல்லது முத்தரையர்கள் என்று சொல்லப் படுகிற மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாகும். அவர்களுடைய சாபக்கேடு விளக்கு இல்லாத ஊர்களில் தான் குடியிருக்கிறார் கள். போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் தான் குடி யிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது தனியாக சலுகை யாக செய்ய முடியுமா என்பதை முதலமைச்சர் அவர்கள்தான் சிந்திக்க வேண்டும். வேறு ஒருவர் கையிலே இலாக்கா இருப் பதைவிட, முதலமைச்சரே நேரடியாகத் தேர்தல் நேரங்களில் பார்த்திருக்கிறார்கள், அதுவும் காரியாப்பட்டி, அருப்புக் கோட்டை தொகுதியைப் பற்றி நன்றாகத் தெரியும், பொன் னமராவதி தொகுதியிலே அவர்கள் 60 சதவீதம் இருக்கிறார்கள். திருப்பத்தூர் தொகுதியிலே 50 சதவீதம் இருக்கிறார்கள், காரைக்குடி தொகுதியிலே 50 சதவீதம் பேர்கள் இருக்கிறார் கள். அவர்களுக்கு எல்லாம் குடியிருப்பு வசதி செய்து கொடுப் பதற்கான புதிய திட்டம் ஏதாவது இருக்குமானால், அவை களை அமுல் படுத்த வேண்டும் என்று நான் முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே முதுகளத்தூர் தாலுக்கா மிகவும் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். அது சீர் மரபினர் அடர்த்தியாக இருக்கக்கூடிய தாலுக்கா. அவர்களுக்கு அதைப்பற்றியும் நன்றாகத் தெரியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அங்கே ஆதி திராவிட மக்களுக்காக தனியாக ஒரு கூட்டுறவு ஆலை ஏற்பட்டு செயல்பட்டுவருகிறது. அது வரவேற்கத்தக்கது. அது உருவானது அவசியமும் கூட, ஆனால் அதே தாலுக்காவிலே அந்த அளவிற்கு இருக்கக்கூடிய படிக்காத பாமர மக்கள் இருக்கக்கூடிய சீர்மரபினருக்காக மிகவும் புகழ்பெற்ற கீளத்துவல் என்ற ஊரில் ஒரு கூட்டுறவு ஆலை ஏற்படுத்தினால் சீர்மரபினருக்கும் ஒரு கூட்டுறவு ஆலை உருவாகி விடும். அதேபோல் ஆதி திராவிடர்களுக்கும் ஒரு கூட்டுறவு ஆலை உருவாகிவிடும். அந்த அளவிற்கு மையமான ஒரு பகுதியிலே கூட்டுறவு ஆலையை ஏற்படுத்துவதற்கான முயற்சி யிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சுற்றுப் பயணம் கிளம்பினால், சாயல்குடி வரை சென்று திரும்புவதுதான் அவர்களுடைய பழக்கம். அதுவும் கீழத்துவளில் அவர்களை பல்லாயிரக்கணக்கான மக்கள் வழிமறித்து மாலைபோட்டு, வழி அனுப்புவது நீண்டகாலமாக இருந்து வருகிற ஒரு பழக்கமாகும். அந்த ஊரிலே இப்போது ஏற்கெனவே காமராஜர் அவர்களுடைய காலத்திலே உருவாக்கப்பட்ட ரிசர்வ் லைன் இருக்கிறது. எந்த விதமான ஆபத்தும் ஏற்படாது. ஆகையினாலே, அந்தப் பகுதியிலே அவர்களுக்காக ஒரு கூட்டுறவு ஆலையை ஏற்படுத்து வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

1990 மே, 7] [திரு. எஸ். எஸ் தென்னரசு]

அதுமட்டுமல்ல, வேறு சில முக்கியமான வேண்டுகோள்களையும் நான் முதலமைச்சருக்கு விடுக்கவிரும்புகிறேன். மொழிக் காவலர்களுக்கு இப்போது நிதி வழங்கப்படுகிறது. அந்த நிதி பொருளாதார அடிப்படையில் சில பேர்களுக்கு தவிர்க்கப்பட்டு இருக்கிறது. அது முதலமைச்சர் அவர்களுக்கும் தவிர்க்கப்பட்டு இருக்கிறது, எனக்கும் தவிர்க்கப்பட்டு இருக்கிறது. இரண்டு பேர்களும் அதிக நாட்கள் மொழிக்காக சிறைச்சாலையில் இருந்தவர்கள். நான் இதை பணத்திற்காக அது கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை. எங்களுக்கு அங்கீகாரம் இல்லாமல் போய்விடுகிறது என்ற ஒருவருத்தம் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கும் அங்கீகாரம் இல்லாமல் போய்விடுகிறது. எனக்கும் அங்கீகாரம் இல்லாமல் போய் விடுகிறது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கீகாரம் என்பதுதான் அவர்கள், முதலமைச்சராக இருப்பதும் மாண்புமிகு உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினராக இருப்பதும் ஆகும்.

திரு. எஸ். எஸ் தென்னரசு: அதோடு இன்னொரு கோரிக்கையை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதாலே பஸ்சிலே போவதற்கு பாஸ் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் பதவி போன பிறகு நான் காசு கொடுத்துதான் பஸ்சிலே போகவேண்டும். மொழிக் காவலர்களுக்கும், பஸ்சிலே போவதற்கு......

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, முன்னாள் உறுப்பினர்களுக்கு இப்போது ஊதியம் வழங்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதுவும் 500 ரூபாய் குறைந்த அளவு ஊதியம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் அவர்கள் பஸ்சிலே பேருந்திலே பயணம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவர்களுக்கும் இலவச அனுமதி வழங்கலாம் என்பது ஆலோசனையில் இருக்கிறது. ஏற்கப்படும் என்ற நம்பிக்கையோடு நான் இதைத் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ் எஸ். தென்னரசு: என்னைப் பொறுத்து நான் இதை பணத்திற்காக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் ஒரு சரித்திர சம்பவத்திற்காகக் குறிப்பிடுகிறேன். 1953-ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் திருபத்தூரிலே ஒரு கார் விபத்திலே சிக்கிக் கொண்டார்கள். அவர்களுக்கு கண்ணில் உபாதை ஏற்பட்டது அந்த உபாதைக்கு அப்போது திருப்பத்தூரிலே இருக்கக்கூடிய கண் ஆஸ்பத்திரியிலே சிகிச்சை செய்தார்கள். ஆகையினாலே எனக்கு வரவேண்டிய அந்தப் பென்சன் தொகை முழுவதையும் அந்தக் கண் ஆஸ்பத்திரிக்கு கொடுப்பதாக நான் எழுதிக்கொடுத்

தேன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது அறிவித்து அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. வே. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, மொழிக் காவலர் பென்சனை திருப்பத்தூர் கண் ஆஸ்பத்திரிக்குக் கொடுக்க இயலாவிட்டாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு அவர்கள், பின்னால் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கிற பணத்தை அந்த திருப்பத்தூர் கண் ஆஸ்பத்திரிக்கு—அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்—அதைக் கொடுக்கலாம் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

11-45 மணி

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** சட்டமன்ற உறுப்பினர் பதவி முடியாது. முடிந்த பிறகு யோசிக்கலாம்.(சிரிப்பு).

பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இலக்கியச் செல்வர் இருப்பதனாலே மற்றொரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சென்ற முறை நான் காந்தி மியூசியத்தைப் பற்றிப் பேசியிருந்தேன். அவர் என்னைத் தனியாகச் சந்தித்து நீங்கள் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசியது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு மேலும் சில விவரங்களையும் நான் அவருக்குக் கொடுக்க விரும்புகிறேன். காந்தி மியூசியத்தில் 1956-ல் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாவலங்கருடைய வேண்டுகோள்படி ஒரு பிரம்மாண்டமான மாளிகை சென்னையிலே கூட அவ்வளவு பெரிய மாளிகையைப்—பார்த்திருக்கமுடியாது. சுமார் 234 கிரவுண்டுகள் உள்ள ஒரு இடத்தை காமராஜ் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மாநில அரசு அதைச் சரியாக செப்பனிட்ட பிறகு, ஒரு சட்டரீதியான அமைப்பிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லாவிட்டால் அதை அரசாங்கமே ஏற்று நடத்தலாம் என்று ஒரு டீட், அதாவது ஒரு பத்திரம் போட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது அதன்படி நடைபெறாமல் 1971-லே சங்கங்கள் என்ற அமைப்பிலே அது இயங்கி வருகிறது. அதிலே இலக்கியச் செல்வர் உறுப்பினர் என்று நான் அறிந்து கொண்டேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இலக்கியச் செல்வர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அங்கே உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி படைத்தவர். ஆனால் அதிலே முக்கியமாக இடம் பெறக்கூடியது, மியூசியம் இருப்பது மதுரை மேற்குத் தொகுதியிலே. அதைப்போல் மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவி உயர்வாக 'எக்ஸ்-அபிசியோ மெம்பராக' ஆட்சிக் குழுவிலே இருக்கவேண்டுமென்பது எங்களுடைய எண்ணம். அதைப்போன்று நாடாளுமன்ற உறுப்பின

1990 மே, 7]  [திரு. எஸ். எஸ். தென்னரசு]

ரும் அந்த ஆட்சிக் குழுவில் இருக்கவேண்டுமென்பது எங்களுடைய எண்ணம். அந்த ஆட்சிக் குழு மாதம்ஒரு முறை கூடுகின்ற போது அதைப்பற்றி விவாதித்தால் உண்மைகள் தெரிய வரும் என்பதனாலே நான் மறுபடியும் அவர்களிடம் அதைக் கவனப் படுத்துகிறேன். அவரும் மதுரை வரும் போது என்னைச் சந்திப்பதாகச் சொன்னார்கள். நான்கூட இருந்து, அந்த உண்மைகளை அறிந்து நம்முடைய அரசுக்கு அறிக்கை கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன். அதை இப்போது உங்களுக்கு கவனப்படுத்துகின்றேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நமது மாண்புமிகு தென்னரசு அவர்கள் என்னிடம் அதைப் பற்றிச் சொன்னபோது, நீங்கள் காந்தி மியூசியத்தில் இவ்வளவு அக்கறை காட்டுவது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று பொதுவாகச் சொன்னதோடு மட்டுமல்லாமல், மதுரை மாநகரத்தில் இருக்கின்ற தென்னரசு போன்றவர்கள் எல்லாம் அதிலே தங்களுடைய முழு நேர உழைப்பையும், முழு நேரம் இல்லை என்று சொன்னால், முழு மனதோடு கூடிய உழைப்பைத் தர வேண்டுமென்று எண்ணுகின்றவன் தான், நான் ஏற்கெனவே, அதுபற்றி அங்கிருக்கின்ற அதிகாரிகளோடு பேசினேன். அவர்கள் உறுப்பினர் போன்றவர்களும், நம்முடைய அமைச்சர் பெருமக்கள் போன்றவர்களும் இதிலே ஈடுபாடு கொண்டாலே செம்மைப் படுத்தலாம் என்ற அளவில் அக்கறை காட்டுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மற்றொரு முக்கியமான செய்தி, 100 ஆண்டுகளுக்குப் பிறகு போலீஸ் கமிஷனர் அலுவலகம் வந்திருக்கிறது. பதவி வந்திருக்கிறது. அது முதலமைச்சர் அவர்களுடைய சரித்திரத்தில் மறக்கமுடியாத ஒன்று. ஆனால் கமிஷனருக்கு உருவாக்கியிருக்கக்கூடிய எல்லைகள் மதுரை கார்ப்பரேஷன் எல்லைகள் மட்டும்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது ஆனால், விமான நிலையம் கமிஷனர் ஆதிக்கத்திற்குள்ளே இருக்க வேண்டும். பல்கலைக்கழகம் கமிஷ்னர் ஆதிக்கத்திற்குள்ளே இருக்க வேண்டுமென்றும் எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் இங்கேகூட, சென்னையிலே விமான நிலையம் கமிஷனர்பொறுப்பில் இல்லையென்று நான் கேள்விப்பட்டேன். அதைக்கூட நீங்கள் மாற்றி சென்னை கமிஷனருக்கு அதனுடைய ஆதிக்கத்தைக் கொண்டு வருகின்ற சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். அதிலே அதிக மாற்றமில்லை. திருப்பரங்குன்றம் சர்க்கிளை மட்டும் சேர்த்தாலே விமான நிலையம் வந்துவிடுகிறது. பல்கலைக் கழகமும் வந்துவிடுகிறது. ஆகையால் கமிஷனருக்கு அதைக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, எவ்வளவுதான் காரியங்கள் ஆற்றினாலும், தொகுதியைப் பற்றிப் பேசவில்லையே என்ற எண்ணம் பலருக்கு இருக்கலாம். திருப்பத்தூர் நகரத்திற்குக் குடிநீர் இல்லை என்று கலைஞர் ஆட்சிக் காலத்தில் ஒரு ஏற்பாடு செய்து ரூ 5 இலட்சம் செலவிலே ஒரு நீர்த் தேக்கத் தொட்டி கட்டி, அது அப்படியே புதியதாக இருக்கிறது. அதற்குப் பிறகு யாரும்அதைப் பற்றி கவனிக்கவேயில்லை. சென்ற முறை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வெற்றிபெற்றும் கூட அங்கே குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான சூழ்நிலை அமையவில்லை இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தில் சுமார் 10 மைல் தூரத்தில் இருந்து திருப்பத்தூருக்கு தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்ற நிலையில், அதற்கு ரூ 1 கோடி செலவாகலாம் என்ற கணக்கிடப்பட்டிருந்தது. அதற்கு மாற்று யோசனை ஒன்றை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கமும் தனியாரும் சேர்ந்து திருப்பத்தூரில் தமிழ்நாடு ரப்பர் பேக்டரி ஒன்றை உருவாக்குவதற்கு ஒரு முயற்சி எடுத்தோம். அந்த முயற்சி ஈடேறவில்லை. அதற்காக அரசாங்கம் 200 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கின்றது. ரூ. 10 இலட்சம் பெறுமானமுள்ள தண்ணீர் கொண்டு வந்து நிரப்பப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த தனியார் செலவழித்த தொகையை திருப்பித் தந்தால், 200 ஏக்கர் நிலத்தையும் அந்த ரூ.10 இலட்சம் செலவழித்து உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த போரையும், பைப்பையும் தருவதாகச் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன்.

11-50 மணி

ஒன்று 'இரப்பர் பேக்டரியை' அரசாங்கமே எற்று நடத்த வேண்டும் அல்லது அதற்கு ஊதியத்தைக் கொடுத்துவிட்டு திருப்பத்தூருக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு அந்த 200 ஏக்கர் நிலத்தோடு அந்த போர் பைப்பு களையும் பெற்றுத்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்றத்தில் நடைபெறக் கூடிய காரியங்களை சிறைச்சாலையில் இருக்கக்கூடிய கைதிகள் கூட எவ்வளவு நுணுக்கமாகப் பார்க்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்று, சென்றமுறை நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவின்போது, 12 ஆண்டுக் காலமாக சிறையில் இருந்தவர்களை விடுதலை செய்யலாமென்று, அறிவித்தார்கள். 10 ஆண்டு இருந்தவர்களைக் கூட விடலாமென்று சொன்னபோது, கருணைக்கிடையிலே சட்டம் குறுக்கிடுகிறது என்று நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த வார்த்தையை அப்படியே குறிப்பிட்டு எல்லா சிறைகளிலிருந்தும் எனக்கு கடிதம்வந்து கொண்டிருக்கின்றது. 10 ஆண்டுகளுக்கு மேலே சிறையில் இருப்பவர்களை முதல்

அமைச்சரோ, ஜனாதிபதியோ, கவர்னரோ, பொது மன்னிப்பு என்ற அடிப்படையிலே விடலாமென்று ஒரு சட்டம் இருக்கின்றது. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலாவது விடுதலைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் கடைசியாக ஒன்று, எவ்வளவுதான் நம்மிடையே காரசாரமான வாதங்கள் இருந்தாலும்கூட, பிரதான எதிர்க்கட்சி பரிபூர்ணமாக ஒத்துழைக்கவில்லையென்ற வருத்தத்தை பலமுறை முதல் அமைச்சர் தெரிவித்து, காவிரிப் பிரச்சினையிலிருந்து சாதாரண பிரச்சினை வரை அவர்கள் ஒத்துழைப்புத் தராமல் போனதுவருந்தத்தக்கது என்று அண்ணாவின் பாணியிலே தெரிவித்து, பெருந்தன்மையோடு இந்த நல்ல இனிய சுபாவத்தை எல்லோருக்கும் உருவாக்கித் தந்த முதல் அமைச்சருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்கீழ்.......... (குறுக்கீடு)

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு மாற்றுப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சிகளில் பிரதான எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் இன்று ஒருவர்கூட வரவில்லையே, இது குறித்து அரசுக்கு ஏதாவது அறிவிப்பு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் கீழ் என்னுடையக் கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகின்ற அ.இ.அ.தி.மு.க. சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைக்கிறேன். என்னுடைய காரிலேயும் அந்தக் கொடிதான் பறக்கிறது. என்னுடைய வேட்டியிலேயும் அந்தக் கொடிதான் இன்றைக்கு நான் வைத்துக்கொண்டிருக்கிறேன். நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவில் 6830 கோடி ரூபாய்...... (குறுக்கீடு).

**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தனியாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தார். ஒருங்கிணைந்த அ.இ.அ.தி.மு.க.-வில் இணைந்துவிட்டாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு.பி . எச். பாண்டியன் :** நான் ஏற்கெனவே சொன்னேன், நான் என்னுடைய காரில் கொடியை மாற்றவில்லை. என்னுடைய வேட்டியிலும் கொடியை மாற்றவில்லை, என்னுடையக் கொள்கையையும் மாற்றவில்லை, என்னுடைய தலைவரையும் மாற்றவில்லை. அதுதான் பதில்.

இங்கே இன்றைக்கு முழுவதுமாக மாநில சுயாட்சி நமக்குக் கிடைக்காத இந்தக் காலக்கட்டத்தில் 6830 கோடி ரூபாய் மானியக் கோரிக்கையை நிறைவேற்ற நாம் சுமார் ஐந்து கோடி மக்களுடைய நலனுக்காக இன்றைக்கு இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இதில் ஏழை எளிய மக்களுக்கு 88 கோடி ரூபாய், இலவச அரிசி, இலவச வேட்டி, 2066 லட்சம் ரூபாய் ஏழை எளிய மக்களுக்கு 'பென்ஷன்' இது தவிர தமிழ்நாட்டிலுள்ள பாமர மக்களுக்கு, ஏழைஎளிய மக்களுக்கு இந்த 6830 கோடி ரூபாயில் எத்தனை சதவீதம் என்று நான் எடுத்துப் பார்த்தேன். அதிக அளவிற்குப் போகவில்லை. சாதாரண, சாமானிய மக்கள் வாழக்கூடிய நம்முடைய தமிழகத்தில் அந்த சாதாரண பாமர மக்கள் செலுத்திய வரியை வைத்துத்தான், இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல் அமைச்சர் இங்கே சமர்ப்பித்திருக்கின்றார்கள். இதற்கு மேலே நம்மால் நிதி திரட்ட முடியாததற்குக் காரணம், நமக்கு இன்னும் முழுமையான நிதி தன்னாட்சி கிடைக்கவில்லை, மாநில சுயாட்சி கிடைக்க வில்லை.

11-55 மணி

இன்றைக்கு என்னதான் காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சி மத்தியிலே இருந்தாலும் இன்னும் நம்முடைய தமிழகத்தின் சார்பில் இந்த அவையின் அதிகாரத்தை வைத்தோ இல்லாவிட்டால் அரசாங்கத்தின் அதிகாரத்தை வைத்தோ எங்களுக்கு இத்தனை தூதுவர்கள் பதவி தாருங்கள் என்று கேட்கக்கூடிய சக்தி நமக்கு கிடையாது. எங்களுக்கு இத்தனை பேருக்கு ஆளுநர் பதவியைத் தாருங்கள் என்று கேட்கக்கூடிய சக்தி இந்த அவைக்கு இதுவரை வழங்கப் படவில்லை. காரணம் முழுமையான மாநில சுயாட்சியை நம்முடைய அரசியல் சட்டம் நமக்கு இன்னும் வழங்கவில்லை. ஏழை எளிய மக்களுக்கு திட்டங்களை நிறைவேற்றும் போது இந்தத் திட்டங்கள் எல்லாம் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும், அவர்கள் எல்லாம் இதை எதிர்ப்பார்த்துதான் தங்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு ஒரு அரசாங்கத்தை நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். உண்மையிலேயே ஒரு அரசாங்கத்தின் இருப்பை அதாவது எக்சிஸ்டென்ஸை ஏழை எளிய மக்கள் இன்னும் உணரவில்லை. காரணம் ஏழை எளிய மக்களுக்கு அதிகமான பலன் கிடையாது. பெரிய பெரிய வசதி படைத்தவர்கள், பணக்காரர்கள், தொழிலதிபர்கள் தான் ஒரு அரசாங்கத்தின் அதிகாரத்தை உணர்கிறார்கள். காரணம் அவர்களுடைய கோப்புதான் இங்கே வருகிறது. ஆளுநர் ஆட்சியிலே கூட நான் 4,000 கோப்புகளிலே கையெழுத்து போட்டேன் என்று ஒரு முறை சொன்னார் ஆளுநர். ஏழை எளிய மக்களின் கோப்புகள் இங்கே வருவது கிடையாது. அது தாசில்தார் அலுவலகத்தில் இருக்கும். இல்லாவிட்டால் எஃப். ஐ. ஆர்.-ஆக போலீஸ் நிலையத்தில் இருக்கும். அந்த அளவிற்கு நம்முடைய

நாட்டில் சாதாரண பாமர மக்கள் இன்னும் ஜனநாயகத்தின் முழுமையான ஒரு சுவையை அவர்களால் பெற முடியவில்லை என்பதற்காகத்தான் நான் இந்த எடுத்துக்காட்டை இங்கே சொன்னேன். இங்கே நிதிநிலை அறிக்கையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படிக்கும் பொழுது நம்முடைய தமிழகத்தில் இருக்கக் கூடிய சொத்துக்கள் கேரளாவில் போய் பதிவு செய்யப்படுமேயானால், கேரளவிற்கும் தமிழ்நாட்டிற்கும் உள்ள ஸ்டாம்ப் ட்யூட்டி வித்தியாசத்தைப் பெறலாம் என்பதைத் தெரிவித்திருந்தார்கள். இண்டியன் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் செக்ஷன் 58 அதற்கு வழிவகை செய்தாலும்—மத்திய அரசாங்கத்தின் சட்டம் தான்—இன்னும் அந்தச் சட்டம் இந்த அவைக்குள் கொண்டுவரப் படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே கண்ணகிக் கோயிலைப் பற்றி பேசும்பொழுது தமிழ் நாட்டில் உள்ள நிலங்கள் எல்லாம் கேரளாவில் இருக்கக்கூடியவர்களுக்குப் போன பிறகு ஒரு சாதாரண சிறிய கோவிலுக்கு நாம் எவ்வளவு சென்சிட்டிவாக எடுத்துக்கொண்டு இருக்கிறோம். என்னுடைய தொகுதியை உதாரணமாக வைத்துச் சொல்கிறேன். நாம் எம். எல். ஏ.-வாக ஆகும்பொழுது என்னுடைய தொகுதியில் குறிப்பாக என்னுடைய கிராமத்தின் பகுதியில் ஒரு சென்ட் விலை 5 ரூபாய். தமிழகத்திலேயே விலை குறைவான இடம் 5 ரூபாய் ஒரு சென்ட். அங்கே 400 ஏக்கர் 500 ஏக்கர் ஆயிரம் ஏக்கர் என்று கேரளாவிலிருந்து வந்தவர்கள் எல்லாம் வாங்கி அதை ஃபென்ஸ் போட்டு அங்கே போய் அவர்கள் அதை ரிஜிஸ்டர் செய்துவிட்டார்கள். இதை நான் இங்கே எதற்காகச் சொல்கிறேன் என்றால் நம்முடைய தமிழகத்தில் வாழக் கூடிய மக்களுடைய நிலத்தையெல்லாம் சட்டத்தின் மூலமாக அவர்கள் எடுத்துக்கொண்டு போகும்போது நாம் மக்களைப் பாதுகாக்காவிட்டால் அந்த மண்ணை சேர்த்துப் பார்க்கவேண்டாமா என்பதை நான் இங்கே அரசாங்கத்திற்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. நம்முடைய தமிழகத்தில்— வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்— குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் 17,600 ஏக்கர் அரசாங்க புறம்போக்கு நிலம் இருக்கிறது என்பதை சட்ட மன்றத்தின் மூலமாகத் தெரிந்து அன்றைக்கு குறித்து வைத்திருக்கிறோம். 17,600 அரசாங்க நிலம், அதையெல்லாம் ஏழை எளிய மக்களுக்குப் பங்கு போட்டுக் கொடுங்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே வீடு இல்லாதவர்களுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு அதைப் பங்கு போட்டுக் கொடுங்கள். இல்லாவிட்டால் காலம் காலமாக அது கழிந்து போகும்போது எங்கேயோ போய்ச் சேர்ந்துவிடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். வசதி படைத்தவர்களுக்கு ஏரிப் புறம்போக்காக இருந்தாலும் பரவாயில்லை. காரணம் ஏரிப் புறம்போக்கில் தான் பல்வேறு கல்லூரிகளே இன்றைக்கு வந்திருக்கின்றன. காரணம் ஓ. சி.யில்

கிடைக்கும்போது யாரும் இது இந்தப் புறம்போக்கு, அந்தப் புறம்போக்கு என்று பார்ப்பது கிடையாது. ஆகையால் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் வேன். அந்த அளவிற்கு நீங்கள் வேகமாக அந்த உபரி நிலங் களைக் கைப்பற்றி, ஏழை எளிய மக்களுக்குக் கொடுங்கள் என்ற வேண்டுகோளை நான் இங்கே உங்களின் முன்னால் வைக்கிறேன். அடுத்து இங்கே எல்லாத் துறைகளையும் பார்க்கும்பொழுது அதிக மான நிதி ஒதுக்கீடு எந்தத் துறைக்கு இருக்கிறது என்று பார்க்கும் போது நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆயிரம் கோடிக்கு மேல் இன்றைக்குப் பெற்று இருக்கிறார்கள். நாட்டில் கல்வி முக்கியம், படித்தவர்களுக்கு வேலை முக்கியம். ஒரு நாட்டில் கல்வி வளர்ந்தால்தான் ஒரு நாடு வளர முடியும், உருப்பட முடியும், எனக்கு தெரியும்.

12-00 மணி

மக்களைப் பாதுகாப்பதற்கு 214 கோடி ரூபாய், காவல் துறைக்கு வழங்கியிருக்கின்றோம். வேலைவாய்ப்புத் துறைக்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துப் பார்த்தேன். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இந்த நிதியில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. காரணம், பணம் கிடையாது. ஆகவே, படித்த இளைஞர்கள் இனிமேல் என்ன செய்யப் போகின்றார்கள்? படிக்காத இளைஞர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? அவர்களுக்கு யார் வேலை கொடுப்பது, எங்கே வேலை கொடுப்பது? எங்கே பணம், எங்கே நிதி, எங்கே ஒதுக்கீடு? கிடையாது. 14 ஆண்டுக் காலம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லையென்றால், நம்முடைய நாட்டில் அரசாங்கம் இருப்பதையே அந்த மக்கள் உணர முடியாது, ஏழை எளிய மக்கள் உணர முடியாது என்பதற்காகத்தான் இங்கே சொல்கிறேன். எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைப்ப தற்கு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும். அந்த வேலை வாய்ப்புத் திட்டத்தை வகுப்பதற்கு மற்ற செலவினங்களை, என்னைப் பொறுத்தவரையில், குறைத்தாக வேண்டும். இன்னும் சொல்லப் போனால், இவ்வளவு அதிகமான இலாக்காக்கள் இன் றைக்கு இருக்கின்றன. ஒவ்வொரு இலாக்காவுக்கும் ஒதுக்கி யிருக்கிறோம், தேவைதான்.

ஆனால் அத்தனை இலாக்காக்களையும் நாம் பராமரிப் பதற்கே இன்றைக்கு அதிகமாகச் செலவாகிறது. நான் சபா நாயகராக இருக்கும்போது என்னுடைய வீட்டில் இரண்டு டிரைவர்கள், இரண்டு வேலைக்காரர்கள் இருந்தார்கள். இன் றைக்குக் கிடையாது, முடியாது. அது போல்தான் அரசாங்க மும் இருக்கவேண்டும். ஒவ்வொருவருடைய நிலைமை, நம்முடைய நாட்டின் நிதிநிலைமைக்கேற்ப, தமிழகத்தின் நிதி

1990 மே, 7] [திரு. பி. எச். பாண்டியன்]

நிலைமைக்கேற்ப, பல்வேறு இலாக்காக்களையே குறைக்க வேண்டும். பல்வேறு இலாக்காக்களின் செலவினங்களே குறையவேண்டும்.

ஏழை, எளிய விவசாயப் பெருமக்களுக்கு நம்மால் உதவி செய்ய முடியவில்லை. ஆனால் இன்றைக்கு வேளாண்மைத் துறையை ஒரு பெரிய துறையாக வைத்து அதையும் பராமரிப்பு செய்துகொண்டு இருக்கிறோம். ஏழை எளிய மக்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. ஆனால் அதற்கு ஒரு துறை. மக்களுக்கே இலாபம் இல்லாத துறைகள். மக்களுக்கே நன்மை கிடைக்காத துறைகள், இன்றைக்கு இந்தியாவில் மத்தியிலிருந்து மாநிலம் வரை இருந்து கொண்டிருக்கின்றன. இதுதான் வெள்ளைக்காரன் விட்டுவிட்டுச் சென்ற ஒரு நிர்வாகம். இந்த நிர்வாகத்தை எப்படி மாற்றுவது? முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை வைத்திருக்கின்றார்கள். அதிக வருமானத்தை ஈட்ட வேண்டும் என்ற ஆசையையெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். என்னைப் பொறுத்த வரையில், இன்னும் முழுமையாக நமக்கு வரவேண்டியதை, இந்த அரசாங்கத்திற்கு வந்து சேரவேண்டியதை நாம் இன்னும் கைப்பற்றவில்லை. நீதிமன்றத்தில் தடையுத்தரவு வாங்கியிருக்கின்றார்கள், பல்வேறு வரியைக் கட்டக்கூடியவர்கள். இதையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் தலைமை நீதிபதியோடு அமர்ந்து பேசலாம். தவறே கிடையாது. நாட்டிற்காக வேறு ஒன்றும் அல்ல. மூன்று பேரும் பேசலாம், தவறு கிடையாது. எங்களுக்கு 'நீங்கள் இந்த வழக்கைப் பைசல் செய்து தாருங்கள், ஓராண்டுக் காலத்திற்குள் எங்களுக்கு, அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமான வரி, விற்பனை வரி, பல்வேறு செலவினங்களை நாம் செய்வதற்கு—இங்கு எங்களுக்கு உங்களுடைய தடையுத்தரவு குறுக்கே நிற்கிறது—தாருங்கள் என்று கேட்கலாம். அது குறுக்கீடே கிடையாது.

இன்னும் சொல்லப்போனால், பல்வேறு வழக்குகளை நீங்கள் எடுத்தே சொல்லலாம், அட்வகேட் ஜெனரல் மூலமாகச் சொல்லலாம். இல்லாவிட்டால், முதலமைச்சர் அவர்களே தெரிவிக்கலாம். இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், பணம் இல்லை. நிதி இல்லை. அதனால் ஏழை-எளிய மக்கள் இன்னும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பெற வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரானைட் அதிகமாக வெட்டி எடுக்கப்படுகிறது. ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஒரு அதிகாரியை விசாரிப்பதற்காக ஒரு குழுவைப் போட்டார்கள். அது என்னவாயிற்று? தெரியவில்லை. அந்தக் குழுவின் அறிக்கை என்னவாயிற்று? அந்த அதிகாரி இன்னும் அப்படியே தானே இருந்து கொண்டிருக்கிறார்? வேண்டுமானால் சஸ்பெண்டாகி இருப்பார். என்னைப் பொறுத்தவரையில்......

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்த அதிகாரி வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறார். விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் செய்த குற்றங்களின் தொடர்ச்சி வெளிநாடுகளிலும் பரவி யிருந்த காரணத்தால் அங்கேயும் விசாரணை நடைபெற்று வருகிறது. விரைவில் விசாரணையை முடிக்க வேண்டும் என்று அரசின் சார்பில் நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** நான் இதைக் கட்டாயமாக எடுத்துச் சொல்வதற்குக் காரணம், எங்களையெல்லாம் சட்ட மன்ற உறுப்பினர்களாக ஆக்கிய என்னுடைய தலைவருடைய வீட்டிற்கு எதிரே இருக்கக்கூடிய நிலங்கள் விலை பேசப் படுகின்றன. ஒரு கூட்டம். டாக்குமெண்ட் வரவில்லை, அதனாலேதான் பேசவில்லை. (குறுக்கீடு) அரசியல்வாதிகள் அல்ல. அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) இவ்வளவு நிதியை ஒதுக்கும்போது, எனக்கு நேரம் புரிகிறது, இருந்தாலும் கொஞ்சம் வேகம் இருக்கிறது. ஏனென்றால், 6,300 கோடி ரூபாய் வெளியே போகும்போது நாற்று நடுகின்றவர்கள், விவசாயப் பெருமக்கள், ஏழை, எளிய தொழிலாளர்கள், தொழிலாளிகள், இவர்களுக் கெல்லாம் சரியாகப் போய்ச் சேருவதில்லையே, சேர முடிவது இல்லையே என்ற ஒரு ஆதங்கத்தில் தான் உங்களிடம் சொல்லுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

*12-05 மணி*

ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், நாம், நம்முடைய அரசாங்கம் ஏழை எளிய மக்களின் சார்பில் வாக்கு களைப் பெற்றுதான் இங்கே வந்து இருக்கிறோம். எல்லோரும் ஏழை எளிய மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள்தான். எல் லோரும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் வாக்குகளைப் பெற்று தான் இங்கே வந்து இருக்கிறோம். பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று நாம் இன்னும் முழுமையாக வரையறுத்து இருக்கிறோமா? யார் உண்மையான பிற்படுத்தப்பட்டவர்கள். யார் உண்மைக்குப் புறப்பாக பிற்படுத்தப்பட்டவர்கள் என்று நாம் வரையறுத்து இருக்கிறோமா? பல்வேறு பிரிவினர் புகுந்து இருக்கிறார்கள். அந்த பல்வேறு பிரிவினரை நாம் எப்படி தகர்ப்பது? நாம் இரண்டாக மட்டும் பிரித்து விட்டோம். திராவிடர்கள். ஆனால் அதற்குள் நுழைந்து இருப்பவர்கள் எத்தனையோ பேர். அந்த பிரிவினர்களைப் பிரித்து உண்மை யான பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைப் பாதுகாகக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், பல முன்னேறி சமுதாயங்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாய சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் நம்மோடு சேர்ந்து பிற்படுத்தப்பட்ட சமுதாயம், பிற்படுத்தப் பட்ட சமுதாயம் என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்

1990 மே 7] [திரு. பி. எச்.பாண்டியன்]

தான் பதவி சுகங்களைப் பெறுகிறார்கள். அவர்கள்தான் அரசாங்க சலுகைகளைப் பெறுகிறார்கள். அவர்கள் தான் எங்கேயும் பெரிய இடத்திலே இருக்கிறார்கள். பல பெரிய பிற்படுத்தப்பட்ட சமுதாயங்கள் இன்னும் பெரிய இடத்திற்குப் போகவில்லை. எத்தனை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மை எண்ணத்தைக் கொண்டவர்கள், எண்ணிக்கையைக் கொண்டவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். நான் இதை வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. காரணம் ஜாதி என்று சொல்லிவிடுவார்கள். நான் ஒட்டு மொத்தமாகச் சொல்கிறேன், முன்னேறிய சமுதாயம் முன்னேறக்கூடிய சமுதாயத்திற்கு வழி விடவேண்டும். முன்னேறிய சமுதாயம் முன்னேறக் கூடிய சமுதாயத்தை இன்னும் இழுத்து விடக்கூடாது. இந்த வாய்ப்பு தவிர இனிமேல் வாய்ப்பு கிடையாது. அதனால்தான் வேகத்தோடு பேசுகிறேன். இந்தக் காலக் கட்டத்தை விட்டு விடுவோமானால் இனிமேல் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு காலம் கிடையாது. அந்தக் காலத்தைப் பயன்படுத்துங்கள். உண்மையான பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை பெரிய பெரிய பதவியில் அமர்த்தவேண்டும். காரணம் பல்வேறு உயர்ந்த பிரிவினர் எதையாவது சொல்லி பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று வந்து சலுகைகளைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): சீக்கிரம் முடியுங்கள். உங்களுக்குக் கொடுத்த நேரத்திற்கு மேல் 5 மணித்துளிகள் அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள்.

திரு. பி. எச். பாண்டியன்: முடித்து விடுகிறேன். அதாவது நான் லிஸ்ட்டைச் சொன்னால் நீங்கள் டைமை சொல்ல மாட்டீர்கள். எப்படி, யார்? யார்?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): இன்னொரு வாய்ப்பில் பேசுங்கள்.

திரு. பி.எச். பாண்டியன் : முடித்துவிடுகிறேன். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை துணை வேந்தர்களாக நியமிக்கவேண்டும். நெல்லை மாவட்டத்தில் எந்தப் பகுதியினர் பிற்படுத்தப்பட்ட பகுதியினரோ அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை அங்கே நியமியுங்கள். சென்னையில் அதே போல்: சேலத்தில் அதேபோல்; வடஆற்காடு-அம்பேத்காரில் அதே போல்; நியமித்தால் தான் அந்த சமுதாயத்தை தூக்கி விட்டதாக எண்ண முடியும். நாம் இங்கே பேசுகின்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயம் இந்த அவைக்கு வெளியே நடப்பது வேறு சமுதாயம் என்ற உணர்வு எனக்கு இருந்து கொண்டிருக்கிறது.

ஆகவே வேதனையோடு தெரிவிக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் எனக்கு அதனால் லாபம் கிடையாது. காரணம் என்னுடைய குழந்தைகள் எல்லாம் முன்னேறிய சமுதாயத்தோடு போட்டிப்போட்டு அவர்கள் எல்லாம் கல்லூரியிலே சேர்ந்து விட்டார்கள். அவர்கள் ஒதுக்கீட்டின் மூலமாக. . .(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) நேரம் ஆகிவிட்டது, முடித்து விடுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : முடித்து அமர்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த பல நாட்களாக நீண்ட விவாதங்களை நடத்தி பல்வேறு மானியக் கோரிக்கைகளின் அடிப்படையில் அரசுக்கு வழங்கிய நிதியை அரசு பயன்படுத்துகின்ற வழிவகைகளை சட்ட பூர்வமாக அனுமதி அளிக்கின்ற சட்ட முன்வடிவை அரசமைப்புச் சட்டம் 204 அடிப்படையில் இந்தக்கோரிக்கையை நாம் இன்றைக்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பொதுவாக அப்ரோபிரியேஷன் என்கின்ற அந்தச் சொல் மிக பொருள் உள்ள ஒரு சொல் ஆகும். அரசு கன்சாலிடேட்டடு பண்டிலிருந்து எடுத்து பணத்தை செலவு செய்வதற்கு செலவினம், எக்ஸ்பென்சஸ் என்று எல்லாம் சொல்லாமல் அப்ரோபிரியேஷன் என்கின்ற சொல் பயன் படுத்துவதற்கு மிக முக்கியமான நோக்கம் உண்டு.

12-10 மணி

அதை தமிழிலே நாம் மொழி பெயர்த்தால் 'உரிய' என்று கூட மொழி பெயர்க்கலாம். எனவே அரசின் பல்வேறு மானியங்களின் அடிப்படையிலே வழங்கப்பட்ட நிதியை எந்த நோக்கத்திற்காக அது வழங்கப்பட்டதோ அந்த அளவிற்கு அது எடுத்துக் கொள்ளப்படவேண்டும்; எந்தெந்த தலைப்புகளில் என்று வரையறையை ஏற்படுத்தி அது வழங்கப்பட்டதோ அந்த வரையறைக்குட்பட்டு அந்த நோக்கத்திற்காக மட்டும் அது பொதுப் பணத்திலேயிருந்து எடுத்து செலவழிக்கப்படவேண்டுமென்ற அடிப்படையில்தான் இதை 'அப்ரோபிரியேஷன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி இன்றைக்கு நாம் விவாதம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, முறையாக, அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு ஏற்ப, நாட்டு மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, நாட்டுமக்களுடைய நலிவுகள் நீங்குவதற்காக மட்டுமல்ல, சமுதாயத்தில் பொலிவுகள் ஏற்பட வேண்டும்; நிம்மதி ஏற்பட வேண்டும், பெற்ற சுதந்திரத்தோடு ஒவ்வொரு தனி மனிதன் மட்டுமல்லாமல் தனிச் சமுதாயங்கள் என்று எந்த அடிப்படையில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ, அந்தந்த சமுதாயங்கள், அந்தந்த சாரார்கள், அவரவர்களுடைய அங்கீகரிக்கப்பட்ட எண்ணத்திற்கு ஏற்ப, அவர்களுடைய கொள்கைக்கு ஏற்ப நடைமுறை பண்பாடுகளுக்கு ஏற்ப, அவர்கள்

1990 மே, 7] [திரு. எம். அப்துல் லத்தீப்]

சுதந்திரமாக இந்த நாட்டில் இருக்கக்கூடிய தனிப்பட்ட சுதந்திரமும் ஒட்டுமொத்தமான சுதந்திரமும் பாதுகாக்கப் படக்கூடிய அளவிற்கு அவர்கள் வாழக்கூடிய நிலையை இந்த செலவினங்களின் வாயிலாக அரசு ஏற்படுத்தித்தரவேண் டும். அதுதான் 'அப்ரோபிரியேட்' என்ற அளவிற்கு இதை நாம் செலவழிக்க வேண்டுமென்பதை நான் விளக்கி சொல்லத் தேவையில்லை.

எனக்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டி ருக்கிற அரசாங்கங்களுடைய, அதிலும் குறிப்பாக நம்முடைய நாட்டில் நாம் தொடர்ந்து 20 ஆண்டுகளாக நடத்திக்கொண்டி ருக்கிற அரசங்கத்தினுடைய மைய கருத்து, சமுதாயத்தில் நலிந்தவர்கள், மெலிந்தவர்கள், பிற்பட்டோர், தாழ்த்தப் பட்டோர், அந்திக்கு ஆளாக்கப்பட்டோர், தலையெடுத்து நடப்பதற்குக்கூட வாய்ப்பு இல்லாமல் தடுத்து நிறுத்தப்பட் டோர் இவர்களெல்லாம் தலை நிமிர்ந்து நடக்கவேண்டுமென்ற அடிப்படையில் நம்முடைய ஆட்சியாளர்களுடைய அந்தக் கொள்கைக்கு ஏற்ப, விந்தக் கொள்கைகள் நிறைவேறிடும் வகையில், அரசு செலவினங்கள் அமைந்திட வேண்டு மென்று நாம் செய்திருக்கிற பிரகடனம், அதற்கேற்ப நிதி நிலை அறிக்கையில் கொள்கைகள் வரையறுக்கப் பட்டு நம்முடைய மானியக் கோரிக்கைகளிலே இந்த கொள்கை கள், இந்த எண்ணங்கள் எல்லாம் நிறைவேறக்கூடிய வகை யிலே, அந்தந்த மானியக் கோரிக்கைகளின் அடிப்படையில் நாம் இங்கே அரசுக்கு பணத்தை வழங்கி அந்தப் பணத்தை, இப்பபாது பொதுப் பணத்திலேயிருந்து எடுத்து அரசு செலவழிப்பதற்கான அதிகாரத்தை, அனுமதியை இந்தச் சட்டத்தின் வாயிலாக அளிக்கிறோம். பொதுவாக நாம் இன்றைக்குப் பார்க்கப்போனால், நான் எல்லா விஷயங்களைப் பற்றியும் இங்கே பேசுவதற்கு நேரம் இல்லை. அதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அதைப்பற்றி யெல்லாம் நான் இன்றைக்கு பேச விரும்பவில்லை.

ஆனால், ஒட்டுமொத்தமாக, அரசியல் ரீதியாக தோல்வி அடைந்தவர்கள், இந்த ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதை எப்பாடுபட்டாவது தடுக்கவேண்டுமென்று நினைத்து, அதிலே தோல்வி கண்டவர்கள், ஏற்பட்ட ஆட்சி விரைந்து முடிந்துவிட வேண்டுமென்று நினைத்து அதிலேயும் தோல்வி அடைந்தவர்கள், இன்றைக்கு வெவ்வேறு வகையிலே தங்களுடைய நடைமுறைகளை வேறு காரணங்களின் அடிப்படை யிலே, வேறு தத்துவங்களின் அடிப்படையிலே, சில சிக்கல்களை யும் சங்கடங்களையும் ஏற்படுத்தக்கூடிய சில தத்துவங்களைச் சொல்லி, அதன் வாயிலாக நாட்டிலே கலவரங்களையும் கலகங் களையும் ஏற்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழகம், இந்த ஆட்சி அமைதியை ஏற்படுத்தத்தவறி விட்டது என்ற எண்ணத்தை இங்கேயும் வேறு எங்கேயும் ஏற்படுத்த வேண்டுமென்ற

எண்ணத்தில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்களோ என்று நான் அஞ்சுகிறேன். அதற்கேற்ப, இன்றைக்கு பத்திரிகையிலே வந்திருக்கிற செய்திகூட மாண்புமிகு பாரதப் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் மாநில முதலமைச்சர்களுக்கு ஒரு சுற்றறிக்கைஅனுப்பி, தமிழ்நாட்டிலே சமூக விரோதச் சக்திகள், தேச விரோத சக்திகள் இந்த நாட்டிலே சமூகத்தோடு, சௌஜன்யத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிற பல்வேறு சமுதாயங்களுக்கிடையே கசப்புணர்வையும் காழ்ப்புணர்வையும் வளர்த்து அதன் வாயிலாக நாட்டினுடைய அமைதியைக் கெடுத்து, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயன்று கொண்டிருக்கிறது. எனவே மாநில அரசுகள் உஷாராக இருக்க வேண்டும். அதிலே

*12-15 மணி*

அதிகமான கவனத்தை செலுத்த வேண்டுமென்ற கருத்தையும் இன்றைக்கு அவர்கள் தெரிவித்து இருப்பதிலேயிருந்து, மத்திய அரசு இத்தகைய ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது. என்று நாமெல்லாம் இது பற்றி கவலைப் பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ் நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம், திருச்சியிலே இதுபற்றி தன்னுடைய பேட்டியிலே குறிப்பிட்டார்கள். ஏறக்குறைய ஒரு லட்சத்திவிலே ஈழ நாட்டிலிருந்து வெளியேற்றக் கூடிய சூழ்நிலை உருவாற்கும் மேலாக் இந்திய வம்சா வழியினக்ள் தமிழக்ள் விரைவாகியிருக்கின்றது; அதற்கான நடவடிக்கைகளை அந்த அரசு மேற்கொண்டிருப்பதாக நமக்குத் தெரிய வருகிறது. 1965-இல் 'சாஸ்திரி- ஸ்ரீமாவோ ஒப்பந்தத்தின் அடிப்படையிலே, இது நடைமுறைக்கு சாத்தியமில்லாத, சர்வதேச சட்ட அனுமதிக்காத, ஒப்புக்கொள்ளாத, இன்னும் சொல்லப் போனல், இரண்டு நாடுகளிலேயும், அதாவது தமிழ்நாட்டிலேயும் ஈழ நாட்டிலேயும், சமூக பொருளாதார பிரச்சினைகளை உருவாக்கக் கூடிய ஒரு மிகப் பெரிய தீமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு ஒப்பந்தம் என்ற அளவுக்கு அன்றைக்கே கருத்துக்கள் சொல்லப் பட்டு, இதுவரயில் அது நிலுவையில் இருந்து, இன்றைக்கு வேறொரு சூழ்நிலை உருவாகியிருக்கும்போது, அந்த நாட்டினுடைய அரசு, பிரதமரிடத்திலே இது குறித்து பேச இருப்பதாகவும், விரைவிலே நம்முடைய மக்கள் வெளியேற்றப்படுவார்கள் அல்லது, வெளியேற்றப்படுவதற்கான புதிய பேச்சு வார்த்தைகள் இந்திய பேரரசோடு நடைபெறும் என்றெல்லாம் சொல்லப்படுவது, நமக்கு பெருத்தக் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, இந்திய பேரரசு, இது தொடர்பாக நடைபெறுகிற பேச்சு வர்த்தைகளிலே, தமிழக அரசின்

கருத்தையும், தமிழிழக முதலமைச்சர் அவர்களுடைய எண்ணங்களையும் தெரிந்து கொண்டு, அவர்களையும் இந்தப் பேச்சுவார்த்தையில் இணைத்து— இன்னிருக்கிற யதார்த்த நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஒரு முடிவுக்கு வரவேண்டுமே தவிர, மத்திய ஆரசே, தானாகவே ஈழ அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்பதை நாம் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு முக்கியமான ஒரு கோரிக்கையை நான் ஏற்கெனவே இதற்கு முன்பு, இரண்டு மூன்று மானியங்களிலே சுட்டிக்காட்டி பேசியிருக்கிறேன். வரிகள் விதிக்கப்படும்போது, அதிலே There should be equity and Justice என்று சொல்வார்கள். ஒரு பொருளுக்கு எந்த அடிப்படையிலே வரி விதிக்கப்படுகிறதோ, அதே நிலையில் இருக்கின்ற— அதே அந்தஸ்திலேயுள்ள இன்னொரு பொருளுக்கும், அதே முறையில் தான் வரி விதிக்க வேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாப் பொருட்களுக்கும் 'சிங்கிள் பாயிண்ட்' வரி என்று சொல்லியிருக்கும்போது, தோலுக்கு மாத்திரம் 'மல்ட்டி பாயிண்ட்' என்ற அளவுக்கு இருப்பது, நியாயமானதல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பச்சைத் தோல் என்று சொன்னால், பச்சைத் தோலிலே உரோமங்கள் இருக்கும். அது பச்சைத் தோல்; சுத்தம் செய்யப்படக்கூடிய ஒன்று. சுத்தம் செய்யப்பட்டாலும் கூட அது பச்சைத் தோல்தான். எனவே, சுத்தம் செய்யப்படுவதற்கு முன்பு ஒரு தோல் என்றும், அதே தோல் சுத்தம் செய்யப்பட்டால் வேறொரு தோல் என்றும், இரண்டு 'கேட்டகரிகளாக'-ப் பிரித்து, இரண்டு நிலைகளிலேயும் அதற்கு வரி விதிப்பது என்பது, வரி விதிப்புக் கொள்கைக்கே முரணான வேட்டு வைக்கக் கூடிய ஒன்றாகும்; அநீதியின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட ஒன்றாகும் என்பதை நான் சுட்டிக்காட்டி இந்தப் பச்சைத் தோல் என்று சொல்லப்படும் 'ரா-ஸ்கின்', சுத்தம் செய்யப்பட்டால் 'கிரேஸ்' தோல் ஆகிறது. எனவே, இரண்டும் ஒன்றுதான என்ற முறையிலே அதற்கு ஒரு முனை வரி விதிக்கப்பட வேண்டும். ஒரு வேளை அந்த சுத்தம் செய்யப்பட்ட தோலிலே இருந்து செய்யப்படும் தோல் பொருட்கள், பர்ஸுகள் போன்ற பொருட்களுக்கு வேண்டுமானால், தோலினுடைய தன்மை மாறிவிடுகிறது என்பதற்காக, அதற்கு வேண்டுமானால் வேறு முறையிலே நாம் வரி விதிக்கலாம் என்பதை நினைவில் கொண்டு, தயவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அநீதியை— இந்தப் பாகுபாட்டைப் போக்கிடும் வகையில் 'சிங்கிள் பாயிண்ட்' என்பதைத் தோலுக்கு . . . . . (குறுக்கீடு).

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொல்வது, பச்சைத்தோலுக்கும்

'கிரேஸ்' தோலுக்கும் ஒரே விதமான வரி இருக்க வேண்டுமென்று சொல்கிறார்களா அல்லது வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற பச்சைத் தோலுக்கும், உள் மாநிலத்திலே இருக்கிற பச்சைத் தோலுக்கும் வேறு வேறாக வரி விதிக்கப்படுகிறதே இந்த இரண்டையும் ஒன்றாக்க வேண்டும் என்று சொல்கிறார்களா? இதில் அவருடைய விளக்கமான கருத்தை சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-20 மணி

திரு. எம். அப்துல் லத்தீப்: உள்நாட்டில் இருந்து வந்தாலும், வெளி நாட்டிலிருந்து வந்தாலும் 'ஃபார் தி பர்ப்பஸ் ஆஃப் அஸஸ்மென்ட்', என்ற அடிப்படையிலே அதாவது அஸஸ்மென்ட் செய்யும்போது 'சிங்கிள் பாயின்ட் அஸஸ்மென்ட்' செய்யப்பட வேண்டும். அதை மறுபடியும் க்ளீன் செய்து விட்டால் அதை வேறு ஒரு பொருள் என்று கருதி அதற்கு இன்னொரு அஸஸ்மென்ட் செய்யக் கூடாது என்பதுதான் எங்கள் கருத்து. இப்போது இருக்கிற முறையில் சுப்ரீம் கோர்ட் கூட இந்த அஸஸ்மென்ட் சரியில்லை என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசு அதைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும். குறிப்பாக தோல் தொழிலில் இன்றைக்கு ஈடுபட்டிருப்பவர்கள் அதாவது ஒரு சிலர் வேண்டுமானால் கண்ணுக்கு பணக்காரர்களாக, பெரிய ஏற்றுமதியாளர்களாகத் தெரியலாம். ஆனால் வாணியம்பாடி போன்ற எங்கள் ஊரிலும் மற்ற ஊர்களிலும் இருப்பவர்கள் எல்லாம் சாதாரண குடிசைத் தொழிலாகத்தான் இதை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அதை அரசு மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டியூட்டி ஃப்ரீ குட்ஸ் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பலபேர் முறையீடுகளை அளித்து இருக்கிறார்கள். எனவே —பாண்டர்— வெளிநாட்டிலே இருந்து தருவித்து மறுபடியும் அதை வெளிநாட்டுக்கே கப்பலில் வைத்து டியூட்டி ஃப்ரீ குட்ஸ் என்ற முறையில் அனுப்புகிறார்கள். எனவே, அந்தப் பொருட்களின் மீது 50 சதவீகிதம் என்று டியூட்டி போட்டால் அது சரியா என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நாட்டிலே அவர்கள் வாங்குவதைவிட மற்ற நாட்டிலே வாங்குகின்ற சூழ்நிலை உருவாகும். வேறு எந்த நாட்டிலும் இந்த நடைமுறை இல்லை. எனவே தயவுசெய்து அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பரிவோடு சிந்தித்து அது குறித்தும் ஒரு முடிவு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் மீதான இந்த ஆய்வுரை நடக்கும்போது நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு இதுவரையில் எல்லா மானியங்கள் குறித்தும் விவாதங்களை நடத்தி அரசின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு

*1990 மே, 7]* *[திரு. எம். அப்துல் லத்தீப்]*

அதற்கான நிதியையும் வழங்குகிற அதிகாரத்தைக் கொடுக்கிற சட்டம் நிறைவேற்றப்படுகிறது என்பதில் மகிழ்ச்சியோடு நாம் இந்த விவாதத்தில் கலந்துகொள்கிறோம். எனவே இந்த விவாதத்தில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு இதை வரவேற்பதோடு கடைசியாக அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நிலங்களின் ஆக்கிரமிப்பு குறித்துச் சொன்னார்கள். குறிப்பாக கோயில் நிலங்கள், முஸ்லிமகளின் வக்ப் சொத்துக்கள், போன்றவை எல்லாம் இன்றைக்கு ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் பல வக்ப் சொத்துக்கள் தனியாருடைய ஆக்கிரமிப்பின் கீழ் இருந்து வருகின்றன. எனவே இவைகளை எல்லாம் நாம் திரும்பப் பெற்று அந்தந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு ஒரு முறையான சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக 1984 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியினுடைய அங்கீகாரத்தை மட்டும் வாங்காத காரணத்தால்— கிடைக்காத காரணம் அல்ல, வாங்காத காரணத்தால்— நிலுவையில் இருக்கிற 1984 ஆம் ஆண்டு வக்ப் அமென்ட்மென்ட் சட்டத்திற்கு முறையாக ஜனாதிபதியினுடைய அங்கீகாரத்தைப் பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நம்முடைய அரசின் சார்பாக மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கை வைக்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் வலியுறுத்தப்பட வேண்டும். வக்ப் சொத்துக்கள், கோயில் நிலங்கள் இவைகளில் எல்லாம் தவறான ஆக்கிரமிப்புகள் இருந்தால் முறையாக அவற்றை வெளியேற்றுவதற்கு, கோர்ட் ஆர்டர் அடிப்படையிலோ அல்லது வேறு வகையிலோ வெளியேற்றுவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த் துறையினர், போலீஸ் துறையினர் ஆகியோர் உள்ளிட்டு, இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது உறுதுணையாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இந்த நிதி ஒதுக்க சட்ட மசோதாவினை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்னும் சற்று நேரத்தில் புயல் வீசப் போகிறது என்று சொல்கிறார்கள். அதைத் தொடர்ந்து பெருமழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். எனவே அரசாங்கம் இங்கே பள்ளிக்கூடங்களுக்கும், அரசு அலுவலகங்களுக்கும் மதியமாவது விடுமுறை விட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, வெளியே புயல் வீசும், சட்டசபையில் தென்றல் தான் வீசும். (சிரிப்பு).

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முன்னால் உள்ள நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களை நேரம் இன்மை காரணமாக சுருக்கமாகச் சொல்ல முன்வருகிறேன்.

மத்தியிலே இருக்கின்ற தேசிய முன்னணி அரசு விவசாயிகளுக்கு அறிவித்து இருக்கின்ற 10,000 ரூபாய் வரை உள்ள கடன் தள்ளுபடி என்று சொல்லக்கூடிய அந்த அறிவிப்புகளை அடுத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று திருச்சியிலே அறிவித்ததின் அடிப்படையிலே இங்கே ஆய்வில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நேற்று கூட திருச்சியில் முதல்வர் அவர்கள் விவசாயிகள் கடன் தள்ளுபடி என்பது ஆய்வில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நீண்ட நாட்களாக விவசாயிகள் வைத்திருக்கின்ற அந்த கோரிக்கையின் அடிப்படையில், மத்திய அரசு அதை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்கான சில நிதியையும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே தொடர்ந்து பல்லாண்டு காலமாக விவசாயிகள் வாங்கிய கடன், பாக்கியாகவே இருந்து கொண்டு வருகிறது. இதற்கு மத்தியில் பல்வேறு நிவாரண நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், பூரணமாக அவர்கள் கடன்கள் தீரவில்லை.

12-25 மணி

திரு. டி. கே. பழனிச்சாமி : சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், மழை பெய்து கொண்டிருக்கிறது, புயல் வர இருக்கிறது, பள்ளிகளுக்கு விடுமுறை விடவேண்டுமென்று கேட்டார்கள். அவருடைய குழந்தைகள் பள்ளியில் படிக்கிறார்களோ இல்லையோ, இப்போது பள்ளிகள், கல்லூரிகள் அனைத்தும் விடுமுறை விடப்பட்டிருக்கிறது என்பதை அவர் அறிவாரா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): உட்காருங்கள். அதைப்பற்றிப் பிரச்சினை இல்லை. திரு. அழகர்சாமி அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. சோ. அழகர்சாமி : இன்றைக்கு விவசாய வருமானத்தைப் பிரதானமாக நம்பியிருக்கிற பெரும்பகுதி விவசாயிகள் கடந்த காலத்தில் விவசாயம் செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களில் கடன்களைப் பெறமுடியவில்லை. காரணம், பழைய பாக்கியே தொடர்ந்து இருந்து வருகிறது. அதற்கு ஒரு முடிவேற்படுகிற வகையில், சரியான ஏற்பாட்டைச் செய்கிற முறையில், அவர்களுக்கு நிவாரணம் ஏற்படவேண்டும். விவசாயிகளுக்கு ரூ. 10,000 வரை தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே 10,000 ரூபாய்க்கு மேலே கூட சிறு

விவசாயிகளுக்கு கடன்கள் இருக்கின்றன. சிறு விவசாயிகள் ரூ. 5,000 கடன் வாங்கியவர்கள் கூட வட்டியும் அசலும் சேர்த்து 10,000 ரூபாய் என்று இருப்பதால் கன்வர்ஷன் கொடுத்து புதியதாக இரண்டாவது கடனை வாங்கியிருக்கிறார்கள். பழைய கடன் ரூ. 10,000 இருக்கிறது. புதிய கடனும் சேர்ந்து சிறு விவசாயிகள் கூட ரூ. 10,000-க்கு அதிகமான கடனை வைத்திருக்கிறார்கள். எனவே ரூ. 10,000 வரை தள்ளுபடி செய்வதோடு, மீதியுள்ள கடனையும் தவணை முறையில் அவர்கள் திருப்பிக் கட்டுவதற்கு ஏற்பாடுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு விளைபொருட்களுக்கான சரியான விலை கிடைக்கவில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நமக்குத் தேவையான பருத்தி 12 லட்சம் பேல்கள். ஆனால் தமிழகத்தில் விளைவது நான்கு அல்லது நான்கரை லட்சம் பேல்கள்தான். அதற்கு சரியான விலை கிடைக்கவில்லை. இந்த ஆண்டு கூட சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்குள்ள விவசாயிகள் கடந்த ஆண்டு ரூ. 3,000-க்கு பருத்தி விற்றது, இந்த ஆண்டு வாங்குவதற்கு ஆள் இல்லை என்ற காரணத்தைச் சொல்லி போராட்டம் செய்தார்கள். இங்கே சென்னைக்கு போராட்டத்திற்காக வந்தார்கள். சேலம் மாவட்டத்தில், பல இடங்களில் மார்க்கெட்டிங் கமிட்டிக்கு முன்னாலே போராடுகிறார்கள். ஆகவே, இந்தப் பருத்தியை வாங்குவதற்கு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாக அவர்களுக்கு அதிகமான நிதி உதவி செய்து, அவர்களாகவே அதைக் கொள்முதல் செய்து ஜின் செய்து பஞ்சை கூட்டுறவு மில்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பருத்தியைப் பொறுத்தவரையில் நமக்கு தேவையான பருத்தியின் அளவில் 30 சதவீதம் தான் உற்பத்தியாகிறது. ஆகவே நியாயமான விலை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலத்தில் மகாராஷ்டிரா போன்ற பல மாநிலங்கள், காட்டன் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் மூலம் விளைந்த பருத்தியை வாங்க ஏற்பாடுகள் செய்தன. மார்க்கெட்டிங் கமிட்டியை நாம் நம்பி பிரயோசனம் இல்லை. தரகு மண்டி மாதிரி இருக்கிறது. வியாபாரிகளுக்குத் தான் உதவி செய்கிறதே தவிர, விவசாயிகளுக்குப் பிரயோசனமாக இல்லை. ஆகவே, மார்க்கெட்டிங் சொசைட்டிகள் மூலமாக அவர்கள் ஜின்னிங் பேக்டரிகள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய நிதியை உதவி செய்தால், அவர்கள் கொள்முதல் செய்து, ஜின் பண்ணி, கூட்டுறவு மில்களுக்கு வழங்கலாம். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி, உளுந்து போன்ற பயிர்கள் விளைகிற நேரங்களில் அதற்கான விலை கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. விளைகிற நேரங்களில்

[திரு. சோ. அழகர்சா] [1990 மே, 7

விவசாயிகள் 600 ரூபாய்க்கு ஒரு குவிண்டால் விற்றார்கள் இன்று அதன் விலை 900 ரூபாய். ஆகவே விளையும் பொருட்களை விளையும் காலத்தில் வாங்கி வைக்கக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்தால், விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைக்கும், வாங்கி உபயோகிக்கும் உபயோகிப்பாளர்களுக்கும் நியாய விலையில், குறைந்த விலையில் அந்தப் பொருட்கள் கிடைக்கும். ஏற்கெனவே நம்முடைய நாட்டில் பருப்பு உற்பத்தி குறைச்சல். வட மாநிலங்களில் இருந்து வர வேண்டியிருக்கிறது. அது கூட, உளுந்து போன்ற பயிர்கள் விளைகிற காலத்தில் கொள்முதல் செய்ய முடியாமல், விவசாயிக்கு வந்தவுடனேயே அவர்கள் குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு அதனால் நியாயமான விலை கிடைக்கவில்லை. உதாரணம் உளுந்து. உளுந்துக்கு 600 ரூபாயாக இருந்தது, போட்டுவிட்டார்கள். வியாபாரிகள் கையில் அது போனவுடன் 900 ரூபாயாக வந்துவிட்டது. அதையும் முதல்வர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பயிர் பாதுகாப்பு. நோய் தடுப்பு முறை இப்போது இருக்கிறது. ஆனால் திடீரென்று நோய் வந்துவிடுகிறது. என்ன நோய் என்று தெரியவில்லை. நோய் வந்ததன் காரணமாக பல்வேறுவிதமான பாதிப்புகள் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. இதையெல்லாம் மலேரியா ஒழிப்பு மாதிரி, அரசாங்கமே நோயைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளை செய்யவேண்டும். அதை பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவோ அல்லது படித்த வேலையில்லாத வாலிபர்களை நியமித்து அவர்களுக்கு சில பொறுப்புகளை கொடுப்பதன் மூலமாகவோ நோய் தடுப்பை முழுமையாகச் செயல்படுத்தி அரசு தனது பொறுப்பில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் பற்றியும், முதல்வர் அவர்கள் ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-30 மணி

இப்போது மின்சாரத்திற்கும் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி இப்போது ஜப்தி கிடையாது. அதுமாதிரி 50 ரூபாய் தான் ஹார்ஸ் பவருக்கு என்று சொன்னது எல்லாம் வந்திருக்கிறது. அதுபோல பழைய பாக்கிகளை எல்லாம் அதிலே தள்ளுபடி செய்ய வேண்டும்.

அடுத்து, பயிர்களுக்கு அரசே பாதுகாப்பு செய்ய வேண்டும். விவசாயிகளிடம் அதை விட்டுவிடுவதன் காரணமாக ஒருவர் மருந்து அடிக்கிறார். இன்னொருவர் காசு இல்லாமல் மருந்து அடிப்பதில்லை. ஆகவே, மருந்து அடித்தவர்களுடைய பயிர்களை கூட இந்த நோய் விடுவதில்லை. அதனால், மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. இதற்கும் அரசு சரியான ஏற்பாடு செய்ய வேண்டும்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

அடுத்து, வறட்சி ஏற்படும்போதும் திடீர் திடீர் என்று புயல், வெள்ளம் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்ற காலங்களிலும் பாதிப்பு ஏற்பட்டால் கடனை உடனே ஒத்திவைக்கிறோம் அடுத்த ஆண்டு, விளைந்தால் கூட அந்தக் கடனை கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. காரணம் விவசாயிகள் வாங்குகிற கடனை கட்டுவதற்கு, அடுத்த ஆண்டு விளைகிற விளைச்சலில் அவனுக்கு சரியாக விளைச்சல் இல்லாததாலும் நியாயமான விலை கிடைக்காததாலும், மற்றும் பல்வேறு காரணங்களினாலும். இடுபொருள்கள் எல்லாம் விலை அதிகரித்துவிட்டதன் காரணத்தாலும் அவன் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. அவனுக்கு நல்ல விளைச்சல் ஏற்பட்டு, நியாயமான விலை கிடைத்தால்தான் அவன் கட்ட முடியும். இப்படி அவன் பாதிக்கப்பட்டால் உடனே ஒத்தி வைக்கிறோம். அவர்கள் இந்த கடனைத் திருப்பிக் கட்ட கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் கட்டாமல் இருந்துவிடுகிறார்கள். எனவே, வறட்சிக் காலத்தில் ஒத்தி வைப்பதற்குப் பதிலாக கடனை ரத்துச் செய்து நிவாரணம் அளிக்க வேண்டும். அதற்கு பட்ஜெட்டில் வருடா வருடம் ஒரு தொகையை ஒதுக்க வேண்டும். திடீரென்று வறட்சி காரணமாக அல்லது வேறு ஏதாவது காரணத்தால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இப்படி ஒதுக்கப்படுகின்ற தொகையை பயன்படுத்துவதற்குரிய ஏற்பாட்டினை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்வது உசிதமாக இருக்கும் என்பதால் அதற்குரிய வழிவகை செய்யப்பட வேண்டும்.

அடுத்து, அரிசி சம்பந்தமாக, ஏற்கெனவே 2 ரூபாய்க்கு விற்கப்பட்ட அரிசி 2 ½ ரூபாய், 3 ½ ரூபாய் என்று விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இதைப்பற்றி சொல்லிவிட்டோம், அரிசி விலை உயர்வைப் பொறுத்த வரையில், ஒரு ரூபாய் உயர்த்தியதன் காரணமாக ரேஷன் கடைகளில் மக்கள் யாரும் அரிசி வாங்குவதில்லை. நானும் பல இடங்களில் விசாரித்துப் பார்த்தேன். ஏன் வாங்கவில்லை என்றால் 2 ரூபாய்க்கு அரிசி கிடைக்கவில்லை. 2 ½ ரூபாய்க்கும் அரிசி கிடைக்கவில்லை. 3 ½ ரூபாய்க்கு விற்கக் கூடிய அந்த அரிசி மட்டும்தான் கிடைக்கிறது. அதை யாரும் வாங்குவதில்லை. அந்த அரிசியை உயர்ந்த பொருளாதார தரத்தில் உள்ளவர்கள் வாங்கட்டும். ஆகவே, நியாயமாக, ஏழை எளியவர்களுடைய எண்ணிக்கையை சரியாக கணக்கெடுத்து, மிக மிக ஏழை எளிய மக்களுக்கு அந்த 2 ரூபாய்க்கான அரிசி கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றவர்கள் 3 ½ ரூபாய்க்கு வாங்கட்டும். ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு எல்லாம் இந்த அரிசி வேண்டாம். எனவே, ஏழையெளியவர்களுடைய கணக்கை சரியாக எடுத்து அவர்களுக்கு மாதாமாதம் 12 கிலோ அரிசியை, 2 ரூபாய்க்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூடிய ஆலைகள் பற்றி நானும் தொடர்ந்து சொல்லியிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இங்கே ஏற்கெனவே பலரும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸைப் பொறுத்த வரையில் ஜூன் மாதத்திலாவது, கடைசியாக, கட்டாயமாக திறப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து, மதுவிலக்கு சம்பந்தமாக ஏற்கெனவே ஒரு பெட்டிஷன் வந்திருக்கிறது. அதை நான் மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுத்துவிடுகிறேன். பெரியார் மாவட்டத்தில், பெருந்துறையில் தொடர்ந்து 200, 300 தென்னை மரங்களிலிருந்து கள் இறக்கப்படுகிறது. முதலமைச்சருக்கும் அந்த பெட்டிஷன் அனுப்பப்பட்டிருக்கிறது. எனக்கும், மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் சொல்ல வேண்டுமென்று அனுப்பியிருக்கிறார்கள். இந்த மாதிரி சட்ட விரோதமாக, முறைகேடாக நடக்கும் காரியங்களுக்கு காவல் துறையினரும் ஆதரவாக இருக்கிறார்கள் என்று புகார் வந்திருக்கிறது. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்கு உள்ள உரிமைகள், தொழிற்சங்கத்தைப் பற்றி ஏற்கெனவே இங்கே சொல்லிவிட்டார்கள். அந்தந்த தொழிற்சாலையில் இருப்பவர்கள், இரகசிய வாக்கெடுப்பு மூலம் தாங்கள் விரும்பக்கூடிய தொழிற்சங்கத்தை ஏற்படுத்திக் கொள்வது, அல்லது தேர்ந்தெடுப்பது அவர்களுடைய உரிமை. அந்த உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால், நம்முடைய டி.வி.எஸ். நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், மே 1 ஆம் தேதி நம்முடைய தொழிலாளர்கள் பனகல் பார்க்கில் 3 நாள் தொடர்ந்து பட்டினிப் போராட்டம் நடத்தினார்கள். நான் அது பற்றி விவரம் கேட்டேன். அவர்கள் அங்கு சங்கம் வைக்கக்கூடாது என்று டி. வி. எஸ். நிர்வாகம் சொல்கிறது. புதிதாக ஒரு தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்துவிட்டதற்காக தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குகிறார்கள், அல்லது வேறு மாநிலங்களுக்கு மாற்றுகிறார்கள். அவர்களுக்கு பல்வேறு இடைஞ்சல்களையும் கொடுமைகளையும் செய்வதாக சொல்கிறார்கள். நிர்வாகத்திற்கு வேண்டிய ஒரு சங்கம் அங்கே இருக்கிறது. அவர்கள் வைத்துள்ள அந்தச் சங்கத்தில் தொழிலாளர்கள் சேர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுக்கு உள்ள உரிமையை, தாங்கள் விரும்பும் சங்கத்தை இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுப்பதற்குரிய உரிமையை வழங்குவதற்கான, நியாயமான முறையை, அதற்குரிய ஏற்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளையும், தங்களுக்கு நேரிட்டிருக்கிற கஷ்டங்களை

1990 மே, 7] [திரு. சோ. அழகர்சாமி]

யும் எடுத்துச் சொல்லி, அதற்காக போராட அவர்களுக்கு உரிய ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டும். அதை வைத்தாலே ஆபத்து என்று சொல்லி, அதை எதிர்த்து மிகப் பெரிய கொடுமை செய்கிறார்கள். அதற்கு உதாரணம் டி. வி. எஸ். நிர்வாகம். ஆகவே, அதற்குரிய ஏற்பாட்டை முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்தில் 39 ஆயிரம் ஏரி, குளங்கள் இருக்கின்றன. இந்த 39 ஆயிரம் ஏரி, குளங்களும் இன்றைக்கு மழை வந்து, புயல் வந்துவிட்டது என்று சொன்னால் பல குளங்களை அரித்துக்கொண்டு போய்விடும் நிலைஇருக்கிறது. இதற்குக் காரணங்கள், முதலாவதாக சரியான பராமரிப்பு இல்லை. சரியான கரை அமைப்புகள் இல்லை. அதற்கு வேண்டிய ஒரு ஏற்பாட்டை விசேஷமாக, தனியாக நிதி ஒதுக்கி அல்லது வேறு வகையிலே நிதிகளைப் பெற்று செய்யவேண்டும். ஐரோப்பிய பொருளாதாரத் திட்டம் என்று சொல்லி செய்வதெல்லாம் சரியாக இல்லை. முழுமையாக, 39,000 ஏரி, குளங்களையும் சீர் செய்ய வேண்டும். மொத்த நிலங்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு, ஏறக்குறைய 12 லட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு பாசனம் அளிக்கிற அந்த ஏரி குளங்களுக்கு நல்ல முறையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து, அவற்றைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

12-35 மணி

அடுத்து திருச்சி மாவட்டம், அபிஷேகபுரம் பேரூராட்சியில், அங்கேயுள்ள துப்புரவுத் தொழிலாளர்கள் சங்கம் வேண்டுமென்று சொல்லி, அதற்காக ஒரு கொடி ஏற்றியிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் கொடுமைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். சாதாரணமாக உழைக்கிற ஏழை, எளிய மக்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காக ஒன்று சேரக்கூடிய நிலையில், ஒன்று சேரக்கூடாது, சங்கம் வைக்கக்கூடாது என்று சொல்லும் மோசமான நிலையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும். மக்களுக்குள்ள நியாயமான உரிமைகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, தலைவரவர்கள் வற்புறுத்துவதால், முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவை மாற்று சபாநாயகர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின்மீது எங்கள் கட்சியின் சார்பிலேயும், தனிப்பட்ட முறையிலும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே பணத்தைச் சம்பாதிப்பதும் கஷ்டம், பாதுகாப்பதும் கஷ்டம் செலவழிப்பதும் கஷ்டம்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டப்படுகிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: இன்றையதினம் அரசுக்கு 6,800 கோடி ரூபாய் வருகிறதென்றால் சாமானியமாக வருகிறதா ? எத்தனை பேர்களிடம் கெட்ட பெயர் வாங்க வேண்டியிருக்கிறது, எத்தனை பேர்களிடம் பேச்சு கேட்க வேண்டியிருக்கிறது ! செலவழிக்கும்போதும், 'எங்களுக்கு இல்லை, உங்களுக்கு இல்லை ; எங்கள் மாவட்டத்திற்கு இல்லை, உங்கள் மாவட்டத்திற்கு இல்லை. என்று சொல்லும்போது கஷ்டமாக இருக்கிறது. நல்லபடியாக நம்முடைய கலைஞர் அவர்கள் இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு அரசாங்கம் சில பகுதிகளை பேக்வார்ட் ஏரியா என்று அறிவிக்கிறது. இப்படி பேக்வார்ட் ஏரியா என்று அறிவிப்பது காதில் விழுவதற்கு முன்னாலே ஒன்றுக்கு இரண்டு, ஒன்றுக்கு மூன்று, ஒன்றுக்கு நான்கு என்று சொல்லுகிற அளவுக்கு நிலத்தினுடைய விலை ஏறிவிடுகிறது. மத்திய அரசால் இவ்வளவு சலுகைகள், மாநில அரசால் இவ்வளவு சலுகைகள் என்று அந்தப் பகுதிகளுக்குக் கொடுக்கும்போது அங்கே உள்ள நிலங்களின் விலை எத்தனையோ பங்கு ஏறிவிடுகிறது. இதை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். அப்படி அறிவிப்பதற்கு முன்னாலேயே, இந்த இந்த இடங்களிலே நிலங்களின் விலை ஏறக்கூடாது என்று சொல்ல வேண்டும். எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. சேட் அவர்கள், அவர் தொகுதி ரொம்ப பேக்வார்ட் ஏரியா என்று சொல்லுகிறார். காரணம் அங்கே இருப்பவர்கள் பேக்வார்ட்டை அடுத்த எஸ்.சி. எஸ்.டி.ஐ.ச் சேர்ந்தவர்கள். அதனால் ஏரியா பேக்வார்ட் ஏரியா என்று சொல்லுகிறார், அங்கே பலவிதமான தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் ஒரு யூனியனுக்கு ஒரு தொழிற்சாலை வேண்டுமென்று அவர் கேட்டிருக்கிறார். அதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து யு.பி.எஸ்.சி. பற்றிச் சொன்னார்கள். கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். சுதந்திரம் பெற்ற பிறகு, யு.பி.எஸ்.சி. நடத்தும் ஐ. ஏ. எஸ். தேர்வுகளில் 60 பர்சன்ட் தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருந்தது. படிப்படியாக அது குறைந்து, ஒரு நிலையில் பர்சன்ட்டேஜ் என்ற நாமதேயமே இல்லாமல் போய்விட்டது. அதற்குப் பிறகு நம்முடைய சர்க்கார் பேக்வார்ட் கிளாஸ், மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ், ஷெட்யூல்ட் கேஸ்ட், டிரைப் இவர்களுக்

1990 மே, 7] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

கெல்லாம் டிரெயினிங் கொடுத்து, பாஸ் பண்ணுவார்கள் என்று நினைத்தார்கள். கொஞ்ச நஞ்சம் வந்து கொண்டிருந்தது. டிரெயினிங் கொடுத்த பிறகு அதுவும் போய் விட்டது 1 பர்சன்ட், 2 பர்சன்ட் வந்ததும் போய்விட்டது. நம்முடைய நாட்டிலே ஐ. ஏ. எஸ். கேடரில் தமிழ்நாடு பார்ட்டிசிபேட் பண்ணுவது இல்லாமல் போய்விடும் போல இருக்கிது. எனவே கல்விக் கொள்கையில் மாறுதல் வேண்டுமா என்பதை ஆராய்ச்சி செய்தால் நன்றாக இருக்கும்.

12-40 மணி

அதற்கு நம்முடைய எஜுகேஷன் கொள்கையில் ஏதாவது மாறுதல் வேண்டுமா, காரணம் என்ன என்பதற்கு ஒரு ஆராய்ச்சி செய்தால் தான் நன்றாக இருக்கும். முன்பு கலைஞர் ஆட்சிக் காலத்தில் திருவெறும்பூரில் நெடுஞ்செழியன் கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. அதை ஏற்படுத்தியபோதே பையன்கள் 40 பேர், ஆனால் சொல்லிக் கொடுக்கிற வாத்தியார் 60 பேர் இருந்தார்கள். இன்னும் அதே நிலைமையில் தான் அது இருக்கிறது. அதற்கு ஆர்ட்ஸ் காலேஜ் என்று வைத்து இருக்கிறார்கள். நல்ல பேர்; நாவலர் நெடுஞ்செழியன் பேரில் திறந்தார்கள். இன்றைக்கும் அங்கு நிலைமை எப்படி இருக்கிறது? ஊரிலுள்ள கல்லூரிகள் எல்லாம் நிரம்பி, ஒரு இடத்திலும் சீட் கிடைக்க வில்லை என்றால் தான் அங்கே போய் கேட்கிறார்கள். அந்த அளவு அதனுடைய திறமை இன்றைக்கு இருக்கிறது. ஆகையால் அந்தமாதிரி கல்வி நிறுவனங்களை ஓரளவு திறம் படுத்துவதற்கு மனப்பூர்வமாக முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நகராட்சிகள் எப்படி இருக்கின்றன? தமிழ் நாட்டில் சர்க்காருடைய பஸ் 16 ஆயிரமும், தனியாருடைய பஸ் 4 ஆயிரத்து சொச்சமும் ஓடுகின்றன. கிட்டத்தட்ட லாரிகள் ஆயிரக்கணக்கில் ஓடுகின்றன. இவைகள் எல்லாம் எங்கே ஓடுகின்றன என்று பார்த்தால், நகராட்சிகள், பேரூராட்சி, ஒன்றியங்கள் இவைகளின் ரோடுகளில் தான் ஓடுகின்றன. அவைகள் ரோடுகளை தேயோ, தேய் என்று தேய்க்கின்றன. அதுமாதிரி இலட்சக் கணக்கான டூரிஸ்ட் பஸ்கள் வருகின்றன. அவைகள் அப்படி வரும் போது—நகராட்சிகளில் நிதி ஆதாரம் இல்லாததால் . . ரோடுகளை சரியாகப் பராமரிக்க முடியவில்லை. ஏதோ 4 ரோடுகள் இருந்தால் ஒரு 'ரோடை எடுத்துக்கொள்கிறோம்' அதையும் ஹைவேஸ் டிபார்ட்மென்ட்' இந்த வருடம் எடுத்துக்

கொள்கிறோம் என்று அறிக்கை விட்டால், அதை எடுக்க பல வருடம் ஆகிறது. .ரோடுகள் பராமரிக்கப்படவில்லை என்றால் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. நகராட்சிகளில் நிதி நிலைமை பற்றாக்குறையாக இருக்கிறது. அவைகள் பூராவிலும் நிதி நிலைமை ரொம்ப பற்றாக்குறையாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்தக் காலத்தில் 7 நகராட்சிகள் இருந்தன. அப்போது நாங்கள் இருந்தபோது அதைப் பற்றி அறிந்தோம். அப்போது நகராட்சி ஏரியாவுக்கு மட்டும் எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிப்யூஷன் கொடுத்து இருந்தார்கள். அது கொடுக்கப்பட்டு இருந்த நகராட்சிகள் மட்டும் சர்பிளஸ் ஆக இருந்தது. ஏன் அதை எல்லா நகராட்சிகளுக்கும் கொடுக்கக் கூடாது? நகராட்சிகள் முன்னுக்கு வரக்கூடாதா ? இப்போது இருக்கிற ஜனங்கள் எல்லாம் எலக்ட்ரிசிட்டி போர்டு சுத்தமாக இருக்கிறது என்று சொல்லவில்லை. 10 அல்லது 15 வருடத்துக்கு முன்னால் எலக்ட்ரிசிட்டி பட்ஜட் மட்டும் தனியாக 10 நாட்கள் விவாதம் நடக்கும். இப்போது எலக்ட்ரிசிட்டி போர்டுக்கு 10 பங்கிற்கு மேல் வருமானம் வருகிறது. அங்கு கிட்டத்தட்ட 30 ஆயிரம் அல்லது 40 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். ஆனால் இப்போது அதனுடைய பட்ஜெட்டை விவாதிக்க 2 நாள் ஒதுக்கி இருக்கிறார்கள். 10 நாள் நடந்த விவாதம் இன்றைக்கு குறைந்துவிட்டது. (குறுக்கீடு) ஒரு நாள் தானா ? இரண்டு நாள் இருக்கிறது. முன்பு எலக்ட்ரிசிட்டி பட்ஜெட்டுக்கு 10 நாள் விவாதம் அதை மறந்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். தவறு இருந்தால் மன்னிக்கவும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அவையிலே பேசுகின்றீர்களா ? அல்லது பக்கத்து பக்கத்திலே பேசிக்கொண்டு இருக்கிறீர்களா ? அப்படி என்றால் கொஞ்சம் இரண்டு பேரும் ஆர அமர lobby -இல் உட்கார்ந்து பேசினால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்கலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நகராட்சிகளில் நிதிப் பற்றாக் குறையை எப்படியாவது போக்க வேண்டும். வரி வசூல் பற்றி ஏற்கெனவே ஒரு கேள்வி கேட்டு இருந்தார்கள். டாக்ஸ் அப்பீல் கமிட்டி பற்றி——கமிஷனர், நகராட்சித் தலைவர், அங்கு இருக்கிற உறுப்பினர்கள் எல்லோரும் ஒருங்கே இருந்தால்தான் நன்றாக நடக்கும். அதாவது வண்டி கட்டிப் போவது போல இருக்கும். இல்லாவிட்

டால்——இப்போது 5 அல்லது 6 நகராட்சிகள்தான் சர்ப்ளஸ் ஆக இருக்கின்றன. மற்றவைகள் எல்லாம் டெஃபிசிட் ஆக இருக்கின்றன. என்றைக்கு இவைகளுக்கு நிவாரணம் செய்யப் போகிறீர்கள்? எப்போது பார்த்தாலும் வேஸ் அண்டு மீன்ஸில் கொடுப்பது; வேண்டுமானால், நீங்கள் இரண்டு இலட்சம் அனுமதிப்பது என்றால் நடைமுறையில் அது சாத்தியப் படாது.

இப்போது தேர்தலுக்கு நிறையப் பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள். எப்போது தேர்தல் நடக்குமோ என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. நேற்றைக்கு திருச்சியில் முதல்வர் அவர்கள் சொல்கிற வரைக்கும் தேர்தல் நடக்காது என்று நான் குறித்து வைத்திருந்தேன். ஆனால் இன்றைக்கு அறிக்கை விட்டு இருக்கிறார்கள். இன்னும் 3 மாதத்துக்குள் தேர்தல் நடக்கும் என்று அறிக்கை விட்டு இருக்கிறார்கள். அது நடந்தால் ரொம்ப சந்தோஷம். இதுவரை நகராட்சிகளில் எத்தனையோ பேர் இறந்து போய் இருக்கிறார்கள். ஒரு நகராட்சியில் ஒருவர், இருவர் அல்லது 3 பேர் இறந்து போய் இருப்பார்கள். இதற்கு முன்பெல்லாம் ஒரு நகராட்சி மெம்பர் இறந்து போனால், 30-வது அல்லது 40-வது நாளில் 'பை-எலக்ஷன்' வந்துவிடும். இப்போது அதெல்லாம் நிறுத்தப்பட்டு இருக்கிறது. இந்த ஆட்சியிலே என்று சொல்லவில்லை; இதற்கு முன்னால் இருந்த ஆட்சியிலும் அது மாதிரி செய்யப்பட்டு இருக்கிறது. முன்னால் இருந்த ஆட்சியிலே தேர்தல் நடக்கவே இல்லை. அதனுடைய கன்டினியுவேஷன் வேண்டாம் என்று தான் சொல்கிறேன். இந்த ஆட்சியாவது கொஞ்சம் திறமையாக அந்த நகராட்சித் தேர்தலை நடத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் பற்றி நம்முடைய திரு. பாண்டியன் பேசினார். எல்லோரும் தாழ்த்தப் பட்டவர்கள்தான். அந்தக் காலத்தில் தேவர்கள், நாடார்கள், எங்கள் பகுதியில் பார்த்தால் அம்பலக்காரர், படையாச்சி இவர்கள் தான் பேக்வேர்டு கிளாஸாக இருப்பார்கள். அப்புறம் பளர், பறையர், அகமுடையர் என்று இருப்பார்கள். ஆனால் இன்றைக்கு நூற்றுக்கணக்கான சாதிகளை பேக்வர்டு கிளாஸ் பட்டியலில் சேர்த்து விட்டார்கள். அசல் பேக்வேர்டுக்கும், ஒரிஜினல் பேக்வேர்டுக்கும் வித்தியாசம் எவ்வளவு இருக்கிறது கணக்கே கிடையாது. அதோடு மட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள சலுகை அதாவது எஸ்.சி., எஸ்.டி. சலுகையை ஒரிஜினல் மேம்பட்ட குடியில் இருப்பவர்கள் தான் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். பலவிதமான சான்றிதழ்களை வாங்கிக் கொடுத்து, நான் பேக்வேர்டு, நான் ரெட்டியார், நான் கம்பளத்து நாயக்கர், நான் வெறும் நாயக்கர் என்று

சொல்லி சர்ட்டிபிகேட்டுகளை வாங்குகிறார்கள். (குறுக்கீடு) அப்படித்தான் திருச்சியில் பார்த்தேன், ஒரு ரெட்டியாருடைய எம். எல். ஏ. பதவி அதனாலே போய்விட்டது. அவர் பொய் சர்ட்டிபிகேட் கொடுத்து எம். எல். ஏ வாக வந்து விட்டார். எங்கே? துறையூர் தொகுதியிலே, ஷெட்யூல்ட் காஸ்ட் என்று சர்ட்டிபிகேட் கொடுத்து. நானும் வாங்கிக் கொண்டு போனேன் எங்கள் ஜனதா சார்பில். அப்பொழுது ஜனதா நான். உடனே பொய் சர்ட்டிபிகேட்டும் வாங்கி ஒரு வக்கீலைக் கூட்டிக்கொண்டு போய் நுழைக்கலாம் என்று பார்த்தேன். ஒரு செகண்டிலே போய் விட்டது.

12-45 மணி.

ஒரே செகண்ட். (சிரிப்பு) ஒரு செகண்டிலே போய் விட்டதாலே என்னாலேயும் நுழைக்க முடியவில்லை. நானும் அது மாதிரி தப்பு. . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஒரு வினாடியிலே போயிற்று. இன்னும் ஒரு மணித்துளியிலே உங்கள் பேச்சு முடிகிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இப்பொழுது நம் கவர்ன்மெண்ட் எஸ்டேட் இருக்கிறதே, அங்கு ஒரு ஐந்து நாள், இருக்கும், அல்லது நான்கு நாள் இருக்கும் என்று நினைக்கிறேன். பெரிய பாம்பு; இவ்வளவு பெரிய பாம்பு, நல்ல பாம்பு, நாங்கள் போய்விட்டு வந்தால் அதுவும் எங்களைப்—போல வயதானவர்களுக்கு அரைகுறைதான், நேத்திரம் எங்களுக்கெல்லாம் பழுது, அப்படி அரைகுறையாக—இராத்திரியிலே வருகிற பொழுது, என்ன பண்ணுவது? இவ்வளவு பெரிய பாம்பை அடித்து——அடித்திருக்கக்கூடாது நல்ல பாம்பை—அடித்து, அப்புறம் குழியெல்லாம் வெட்டி, அதற்கு பால் எல்லாம் வாங்கி ஊற்றி, சுற்றிவர நான்குபேர் இருந்து கும்பிடுகிறார்கள். 'என்னப்பா, இப்படிக் கும்பிடுகிறாய்' என்று கேட்டால், பாம்பை அடித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். பார்த்தால், இவ்வளவு பெரிய பாம்பு. வருகிற நடையெல்லாம் சுத்தமாக இருக்கிறது. ஆனால் அக்கம் பக்கத்திலே இருக்கிற நிலைமை? டிரைவர் ஓட்டுகிறார், நாம் மட்டும் நேராகப் போனால் பிரயோஜனம் இல்லை; வருகிற டிரைவரும் ஒழுங்காக இருக்க வேண்டும். குடிக்காமல், நல்ல டிரைவராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆக்சிடென்ட் நடக்காது. அதுமாதிரி நாம் போகிற நடைபாதைகள் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது. பக்கத்திலேயும் சுத்தமாக இருந்தால் சரியாக இருக்கும்.

1990 மே, 7] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

இந்த போபர்ஸ் பற்றிச் சொன்னார்கள். இது எப்படி வந்தது? அன்னிய நாட்டிலே பணம் எப்படி இருக்கிறது? எங்கே இருக்கிறது? நம்முடைய நாட்டிலே இருக்கிற பணமெல்லாம் போகிறது. சுடுகிறான், போய் எடுக்க முடியவில்லை போக முடியாது. ஏன் ஐயா வெளிநாட்டிலே போடவேண்டும்? நம் நாட்டிலே எத்தனை வங்கிகள் இருக்கின்றன? எத்தனை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இருக்கின்றன? இன்னும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வங்கிகள் இருக்கும்பொழுது நாம் பணம் வெளிநாட்டிலே போய்ச் சேருவானேன்? எப்படிப் போயிற்று? நாம் எல்லாம் போட முடியுமா? ஸ்ரீ ராமமூர்த்தி எழுதினார், 48,000 கோடி ரூபாய், ஸ்ரீராமமூர்த்திதான் முதலிலே இந்தப் புத்தகத்தையே வெளியிட்டவர். 48, 000. கோடி ரூபாய் வெளிநாட்டிலே, ஸ்விஸ் வங்கியிலே இருக்கிறது. அப்படி என்று எழுதினார். அந்தப் பணம் எப்படிப் போயிற்று என்ற கேள்வி வரும்பொழுதுதான் இந்தப் பிரச்சினையெல்லாம் ஏற்படுகிறது. ''துப்பறியும் கோவிந்தன்'' என்று சொல்வது உண்டு. அந்தக் காலத்திலே, வடுவூர் துரைசாமி ஐயங்கார் நாவல் எழுதினார், துப்பறியும் கோவிந்தன் என்று அதுமாதிரி துப்பறியும் கோவிந்தனை விடும்பொழுது, என்னடா இது துப்பறியும் கோவிந்தன் வெறுமனே பேசுவானா? அந்தக் காலத்திலே வாயாலே, வெறுமனே பேசினால்கூட வெல்லம் கொஞ்சம் போட வேண்டும். அந்த மாதிரி துப்பறியும் கோவிந்தனுக்கு வெல்லம் நிறையப் போட வேண்டியிருக்கிறது. எப்படியும் சேங்க்ஷன் வாங்க வேண்டும். என்ன செலவாகிறது? சேங்க்ஷன் வாங்குகிறோம். அப்ரோபிரியேஷன் பில்லிலேகூட இது மிஸ்ஸப்ரோபிரியேஷன் ஆகாமல் சேங்க்ஷன் வாங்குவது எதற்காக? இது மிஸ்ஸப்ரோபிரியேஷன் ஆகக்கூடாது என்பதற்காக. அதைப்போல சேங்க்ஷன் வாங்கும்பொழுதுதான், இவ்வளவு பணம் எங்கே இருக்கிறது, யார் போட்டிருக்கிறார்கள் என்று கேட்கிற பொழுது அந்த பைனான்ஸ் மினிஸ்டர் டிபென்ஸ் மினிஸ்டராக மாறுகிறார். (மணியடிக்கப்பெற்றது) இதைச் சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் போபர்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்பக் குளிர்ச்சியாக இருக்கிறது ஐயா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: இப்பொழுதுதான் புயல் நம் மெட்ராஸைக் கடந்து போகிறது. நாம் மழை பெய்யுமா என்று ஏங்கியிருந்த காலத்திலே, காவிரிப் பிரச்சினை தீருமா என்று ஏங்கியிருந்த காலத்திலே, நல்ல சூசகமான இந்த நிதி நிலை அறிக்கை வந்திருக்கிறது பாருங்கள். காவிரிப் பிரச்சினையும் நமக்கு சாதகமாக ஆகிவிட்டது. இந்த மழையும் நமக்கு சாதகமாகிவிட்டது. இனிமேல் வருங்காலத்திலே எல்லாமே நமக்குச் சாதகமாக இருக்கும் என.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் சாதகமாக இருங்கள் ஐயா. நீங்களும் உட்கார்ந்தீர்கள் என்றால் சாதக மாக இருக்கும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : போபர்ஸ் பற்றி மட்டும் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன். அப்படிச் சொல்லும் பொழுது ஒன்றைப் பாருங்கள். கடைசியாக உங்களுக்கு ஒன் றைச் சொல்கிறேன். போபர்ஸ் என்று சொல்கிறார்களே, குற்றம் சொல்கிறோம் என்று சொல்கிறார்களே, குற்றம் யாரையும் சொல்லவில்லை. இப்பொழுது ஏ-320 ஒரு விமா னம். பெங்களூரிலே பொத்தென்று விழுந்தது. ஒருவரா, இரண்டு பேரா ? நூற்றுக்கணக்கான பேர் சாகிறான். இந்த விமானத்தைப்பற்றி, முன்னால வாங்கும்பொழுது இந்த விமானத்தை வாங்கக்கூடாது, இது பறக்கும், பறக்காது, இதிலே இவ்வளவு விதமான கெடுதல்கள் இருக்கின்றன என்று கமிட்டி போட்டு அவன் சொல்லியிருக்கிறான். அப்படி யிருந்தும் விமானம் வாங்கப்பட்டது என்றால் சந்தேகம் ஏற்படுகிறதா, இல்லையா ? இப்பொழுது நாமே போய் ஒரு தென்னை மரத்து அடியிலே, பனை மரத்தடியிலே போய் நின்றோம் என்றால், ஐயா, இவர் குடிப்பார் போல.... ......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்குத்தான், குளிர்ச்சியாக முடியுங்கள் என்று சொன்னேன். இப்பொழுது சூடாகிவிட்டது பார்த்தீர்களா ? (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ; மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, அந்த விமானத்தைப் பொறுத்த வரையில்; அமெரிக்காவிலே இருக்கிற ஒரு விமானக் கம் பெனி, இப்பொழுது ஏற்கனவே நம்மிடம் இருக்கிறது 15 விமானங்கள். அடுத்த சில மாதங்களில் நாம் பெறப் போகின்ற, அடுத்து வாங்குகிற 19 ; அதுபோல அடுத்து இரண்டு ஆண்டுகளில் பெறப்போகின்ற இன்னும் 13 ; 32 விமானங்களையும் தாங்கள் விலை கொடுத்து வாங்கிக் கொள் வதாக டெலக்ஸ் செய்தி மூலமாக இந்திய அரசாங்கத்தை அணுகி இருக்கிறது. உள்ளபடியே இந்த விமானங்கள் மோசமான விமானங்கள் என்று சொன்னால் அவர்களுக்கு விற்று விடலாம். ஏன் அதிலே முடிவெடுக்காமல் அரசிய லாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேரும் வேண் டாம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நான் அரசியல் ஆக்குவதற்கு கொஞ்சம்கூடத் தயாராக இல்லை. நீங்கள் கேட்கிறீர்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு

எங்களுக்கு இருக்கிறது. இல்லையென்றால் இதிலே என்ன அரசியல் வந்திருக்கிறது? போபர்ஸ் பற்றிச் சொன்னார்கள். அது கறுப்பா, சிகப்பா, இவ்வளவு நீளமா, அப்படி என்கிற பொழுது, அது பீரங்கியா, சுடப்போகிறதா என்று பார்த்தால், ''கல்யாணம் பண்ணியும் சந்நியாசி, கடன் வாங்கியும் பட்டினி'' என்றான்; அதுமாதிரி அந்தப் பீரங்கி சுடவே இல்லையே; கடைசியிலே அந்த அளவிலேதான இருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தவறு, அந்த ரக பீரங்கிகளிலே மிகச் சிறந்த பீரங்கி போபர்ஸ் பீரங்கி என்று காங்கிரஸ் அரசாங்கம் இறங்கி, ஜனதா அரசாங்கம் வந்ததற்குப் பின்னால், இன்றைய தினம் இராணுவ தளபதியாக இருக்கிற சர்மா தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மிகவும் மலிவான விலைக்கு வாங்கியிருக்கிறோம்; உலகத்திலே இருக்கின்ற இந்த ரக பீரங்கிகளிலே சிறந்த பீரங்கி போபர்ஸ் பீரங்கி என்பதை மிகத் தெளிவாக சர்மா அவர்களே கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐயா, இன்னொரு நாளைக்கு அதை வைத்துக் கொள்வோம். முடியுங்கள், ஐயா. அப்புறம், மன்னிக்கவும், உட்காரச் சொல்லி விடுவேன்.

பெரியவர், நீங்களே உட்கார்ந்து கொண்டால் நன்றாக இருக்கும். பேச்சை முடியுங்கள்.

12-50 மணி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: போபர்ஸ் பிரச்சினை பற்றி தனியாக ஒரு நாள் விவாதம் வைத்தால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். அது சுடவில்லை, சரியான முறையிலே இயங்கவில்லை என்பதற்கு சர்ட்டிபிகேட் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இயங்க வேண்டியிருக்கிறது, நீங்கள் முடியுங்கள் ஐயா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையையொட்டிய நிதி ஒதுக்கீட்டு மசோதாவை மனப்பூர்வமாக ஆதரித்து விடைபெறுகிறேன்.

[1990 மே, 7

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டிய பொறுப்புணர்வோடும், கடமை உணர்வோடும் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் இன்றைக்கு இங்கே இருக்கின்றார்கள். நிதிநிலை அறிக்கை மன்றத்திலே வைக்கப்பெற்று சற்றொப்ப 180 மணி நேரத்திற்கு மேலாக, பல்வேறு பிரச்சினைகள் இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டு, அரசின் மானியக் கோரிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களோடு இணைந்தும், சிலவற்றிலே இணைய இயலாமலும், அவையினுடைய ஒப்புதலைப் பெற்று நிறைவேற்றப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கான சட்டமுன்வடிவு இன்று காலையிலிருந்து நம்முடைய பல்வேறு கட்சிகளின் தலைவர்களாலும், உறுப்பினர்களாலும் விவாதிக்கப்பெற்று, அதன் அடிப்படையிலே சில கருத்துக்களைக் கூற நான் முன் வந்துள்ளேன். நேரம் அதிகம் இல்லையென்பதால் சற்று வேகமாகவே செய்திகளை நான் இன்றைக்குச் சொல்லிக் கொண்டு போக வேண்டியவனாக இருக்கிறேன்.

அரசினுடைய கொள்கைகள், அணுகுமுறைகள், திட்டங்கள், இவற்றை ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் வெளியிட்டு, அவைமீது சட்டப்பேரவையில் நடந்த பொது விவாதங்களுக்கு விரிவாக விளக்கங்கள் தரப்பட்டு, பின்னர் பல்வேறு துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகளும், அவற்றின் மீது நடைபெற்ற விவாதங்களும், அமைச்சர்களின் விளக்கங்களும், மானியக் கோரிக்கை விவாதங்களின் அடிப்படையிலே அறிவிக்கப்பட்டு, புதிய திட்டங்கள், சலுகைகள் இவற்றின் காரணமாக, நிதிநிலை அறிக்கை மேலும் மெருகு ஏறி இருக்கிறது என்றே கூற வேண்டும்.

நிதிநிலை ஒதுக்கீட்டு மானியத்திற்குப் பேரவை ஒப்புதல் அளிப்பது என்பது பட்ஜெட் வழிமுறையிலே இருக்கிற கடைசி கட்டமாகும். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல, ரூ. 6,000 கோடி அளவிற்கு ஒப்புதலைப் பெறுகின்ற ஒரு சட்டமுன்வடிவு இந்த மன்றத்திலே விவாதிக்கப்படுகிறது.

இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, இந்தப் பெரும் விவாதத்திலே 5,000 அல்லது 6,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிற .நேரத்தில் பிரதான. எதிர்க்கட்சி கலந்து கொள்ளாதது, அவர்களுடைய பொறுப்

பின்மையை உணர்த்துகிறது என்று நான் சொல்ல மாட்டேன். இந்த அரசை அலட்சியப்படுத்த வேண்டுமென்கிற கருத்தோடு இன்று அவர்களால் அவை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இன்றையதினம் அரசைக் கண்டித்து நடத்துகின்ற ஊர்வலங்கள், பேரணிகள் எவையாயினும் மாலை நேரத்திலே அவை நடைபெறுகின்ற காரணத்தால், ஒருவேளை காலையிலே நடைபெற வேண்டுமென்று இருந்தாலும்கூட, அவர்களிலே ஒருசிலராவது இன்றைய விவாதத்திலே கலந்துகொண்டு பிரதான எதிர்க்கட்சியினுடைய எண்ணங்களை எடுத்துக் கூறி இருப்பார்களானால்—— அது இந்த அரசு ஆக்கபூர்வமாக சிந்தித்து, அதன் வழி தன்னுடைய எண்ணங்களை எடுத்துச் சொல்வதற்கு ஏற்றதாக அமைந்திருக்கும். ஆனால் அந்த வாய்ப்பு அவர்களால் இன்றைக்கு உருவாக்கப்படவில்லையென்பது வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.

தேர்தல் அறிக்கையில் இன்றைய ஆளும்கட்சி நிறைவேற்றுகின்ற வகையில் எண்ணற்ற திட்டங்கள் கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்டு, அவை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன என்பதையும், இது விரைந்து செயல்

12-55 மணி

படுகின்ற அரசு என்பதையும் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் வேண்டுமானால் விவாதத்திற்காக சில நேரங்களில் மறுத்தாலும் கூட உண்மையை ஒப்புக்கொள்ளத் தவறமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

ஒரு சான்று கூறவேண்டுமானால், இன்று காலையிலே கூட நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கண்ணகி கோயில் வழிபாட்டிற்குச் செல்லுகின்ற தமிழக மக்கள் தடுக்கப்படக் கூடாது என்ற ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். நான் உடனடியாக கேரள அரசோடு தொடர்பு கொண்டு தக்கவை செய்யப்படும் என்று சொன்னேன், அதற்கேற்ப உடனடியாக நம்முடைய செயலாளர், கேரள மாநில அரசினுடைய தலைமைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு இங்கே அவையில் நான் எடுத்துக் கூறிய செய்திகளை அவருக்கு உணர்த்தி அவரும் ஆவன செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறார் என்ற நல்ல செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே விரைந்து மாத்திரமல்ல, உடனடியாகச் செயல்படுகிற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று என்பதை நீங்கள் மிகத் தெளிவாக உணர்வீர்கள்.

1988—89-ல் 1,202 கோடி ரூபாயாக சரிவடைந்திருந்த ஆண்டுத் திட்ட அளவினை, 1989-90-ல் 1,377 கோடியாகவும் 1990-91-ல் 1,460 கோடியாகவும் தொடர்ந்து நாம் உயர்த்தி இருக்கிறோம். தேசிய அளவில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிற நேரத்தில் அதன் அடிப்படையில் தமிழ் நாட்டின் திட்டச் செலவு உயர்த்தப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவான 6,225 கோடிக்கு மாறாக எட்டாவது திட்டக் காலத்தில் 8,500 கோடி முதல் 9,000 கோடி ரூபாய் அளவுக்கு தமிழகத்தினுடைய திட்டப் பணிகள் மேற்கொள்ளப் படும் என்பதையும் மீண்டும் இந்த அவைக்கு நான் நினை ஆட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மின்சாரம், பாசனம், சாலைகள், தொழில், நகர்ப்புற மேம்பாடு—இவை அன்னியில் வேளாண்மைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம், மருத்துவம், குடிநீர், வீட்டுவசதித் துறைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அரசின் திட்டங்களிலும், சட்டங்களிலும் நலிந்த பிரிவினரான மகளிர், முதியோர், ஊனமுற்றோர், ஆதிதிராவிடர்-பழங்குடி மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் இவர்களுக்கு பல சலுகைகளும், சிறப்புத் திட்டங்களும் நிறைவேற்றப் பட்டு, செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு சில விவரங்களை மேலும் இங்கே தெரிவித்து, உங்களுடைய மேலான ஒப்புதலை இந்தச் சட்டமுன்வடிவுக்குப் பெற நான் விரும்புகிறேன்.

பல மானியக் கோரிக்கைகளுக்குப் பிறகு நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல ஒதுக்கப்பட்ட தொகை ஒட்டு மொத்தமாக 6,830 கோடி ரூபாய். இதில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு உட்பட்ட செலவு (Voted Expenditure) 5,066 கோடி ரூபாயாகும். தொகுப்பு நிதியில் (consolidated Fund) சாட்டிய செலவு 1,764 கோடி ரூபாய் (charged Expenditure) என்பதாகும்.

கடந்த ஆண்டோடு இதை ஒப்பிடும்போது சென்ற ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளின்படி சாட்டிய செலவாக 1,439 கோடியும் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட தொகையாக 4,820 கோடியும் ஒதுக்கப்பட்டது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட தொகையில் 246 கோடியும் சாட்டிய செலவில் 325 கோடியும் உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1990 மே, 7]* [டாக்டர் மு. கருணாநிதி]

பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவயான செலவினை மேற்கொள்ள இப்படி தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் இந்த ஆண்டுச் செலவான 6,830 கோடியில் வருவாய் கணக்கில் 4,978 கோடியும் மூலதனக் கணக்கில் 1,852 கோடியும் அடங்கும். அரசுக்குக் கிடைக்கின்ற வரி வருமானம், ஏனைய வருமானங்கள் அனைத்தும் தொகுப்பு நிதியிலே சேர்க்கப்படுகிறது. உயர்நீதிமன்றச் செலவு, ஆளுநருக்கான செலவு, மத்திய அரசிடமிருந்தும் பொதுச் சந்தையிலிருந்தும் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ஆகியவை சாட்டிய செலவுகள் ஆகும்.

13-00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தத் தொகை குறித்து சட்டமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடத் தேவையில்லை. அரசாங்கத்தினுடைய மற்ற செலவுகள் அனைத்தும் தொகுப்பு நிதியிலிருந்து, சட்டமன்ற அனுமதியுடன் செலவழிக்க இயலும். அந்த அனுமதி தொடர்ந்து பல்வேறு மானியக் கோரிக்கைகளில் இந்த அவை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு இருக்கிறது. அனைத்து மானியக் கோரிக்கைகளும் இந்த அவையால் ஏற்கப்பட்ட பிறகு, இவ்வாறு ஒதுக்கப்பட்ட செலவையும், சாட்டிய செலவையும் அரசு மேற்கொள்ள அதிகாரம் வழங்குவதற்காகத்தான் இந்த நிதியொதுக்கச் சட்டம் இங்கே உங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் பலபேர் புதியவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் இந்த சாட்டிய தொகை, நிதியொதுக்கச் சட்டம் இவைகளைப் பற்றியெல்லாம் நான் விரிவாக அவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறேனே அல்லாமல், பழைய உறுப்பினர்களுக்கு இது தெரியும் என்றாலும், திரும்ப ஒருமுறை சொல்வதற்காக அவர்கள் அலுப்படையக் கூடாது. புதியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த விளக்கங்களை அளித்தேன்.

இங்கே நம்முடைய கட்சிகளுடைய தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச்சொன்ன பல்வேறு விளக்கங்களுக்குப் பதில் சொல்ல எனக்கு இப்போது நேரம் இல்லை. நேரம் இல்லையென்று சொல்கிற காரணத்தால் நினைவு இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது; எண்ணம் இல்லை என்று யாரும் கருதி விடக்கூடாது. இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட இந்தக் கருத்துக்களில் பல

அறிவுரைகளாக ஏற்றுக்கொள்ளப்படும். நம்முடைய உறுப்பினர் ரமணி அவர்கள் கூறியதைப் போல எச்சரிக்கையாகக் கருதப்படும். அதற்கேற்ப எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அப்படியெல்லாம் அரசு நடந்து கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989-90-ஆம் ஆண்டு வணிக வரி வசூலில் ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்ற கணக்கை நான் இந்த அவைக்குத் தெரிவித்தாக வேண்டும். 1988-89-ஆம் ஆண்டிலே வசூலிக்கப்பட்ட தொகையை விட, இந்த ஆண்டு 17 சதவீதம் கூடுதலாக இந்த வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஒப்பிட்டுக் கணக்கை நீங்கள் பார்ப்பீர்களானால் 1985-86-ஆம் ஆண்டு 1,035.13 கோடி ரூபாய் வருவாய் வணிக வரி வசூலில். இது அதற்கு முன்பிருந்த ஆண்டை விட 14.4 சதவீதம் அதிகம். 1986-87-ஆம் ஆண்டு 1,172.44 கோடி ரூபாய். இது கடந்த ஆண்டை விட 13.7 சதவீதம் அதிகம். 14 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகக் குறைகிறது. 1985-86-ஆம் ஆண்டிலிருந்து 1986-87-ஆம் ஆண்டில் 13.7 சதவீதமாகிறது. அதாவது குறைகிறது. 1987-88-ஆம் ஆண்டு வருவாய் 1,313.49 கோடி ரூபாய். இது அதற்கு முன்பிருந்த ஆண்டை விட 12 சதவீதம் தான் அதிகம். 13 சதவீதம் அதிகம். என்பதிலிருந்து 12 சதவீதம் அதிகம் என்ற அளவிலே குறைகிறது. 1988-89 ஆண்டு வருவாய் 1502.73 கோடி ரூபாய். இது அதற்கு முன்புள்ள ஆண்டைவிட 14.4 சதவீதம் அதிகம். ஆனால் 1989-90-ஆம் ஆண்டுவருவாய் 1,759.01 கோடி ரூபாய். இது 1988-ஆம் ஆண்டை விட 17 சதவீதம் அதிகம் என்பதை எண்ணும்போது, இந்தத் துறையில் உள்ளவர்கள் யாருக்கும் தொல்லை கொடுக்காமல், கசக்கிப் பிழியாமல், கடமை உணர்வோடு, பொறுப்புணர்ச்சியோடு இந்தப் பணியை ஆற்றியதன் மூலம், அரசாங்கம் நிர்வாகத்திலே ஒரு நேர்மையை, அதேநேரத்தில் உற்சாகப்படுத்துகிற தன்மையை கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிற நிலையை ஏற்படுத்தியதன் காரணமாக, அதிகாரிகளுடைய ஒத்துழைப்புடன் வணிகப் பெருமக்களுடைய நல்லாதரவோடு இந்த 17 சதவீதம்கடந்த ஆண்டை விட அதிகமாக வணிகவரி வசூலில் நாம் இன்றைக்குப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறோம். இங்கே நம்முடைய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபோது 5,000, 6,000 கோடி என்று நிதி ஒதுக்குகிறோம் அதற்கான அங்கீகாரத்தை நாங்கள் தருகிறோம். அதை ஒழுங்காகச் செலவு செய்யுங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள் அவர்கள் ஒரு குடும்பத்திலே பணத்தை வீட்டிலே இருப்பவர்களுக்குக் கொடுத்துவிட்டு, ஒழுங்காகச் செலவு செய் என்று கூறுகின்ற ஒரு தந்தையைப் போல அவர்கள் இங்கே அந்த ஆணையைப் பிறப்பித்தார்கள். பரவ

யில்லை. பெயரே பாலசுப்பிரமணியம். அவர் தந்தைக்கே உபதேசம் செய்தவர்தான். அதனால், உபதேசத்திலே தவறு இல்லை என்று கருதுகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில், அவர்கள் இன்ன செலவு, இப்படித் தவறாக நடைபெற்றது என்று எடுத்துக் காட்டவில்லை. எல்லாவற்றையும் பொதுவாகச் சொன்னார்கள். பொதுவாகச் சொன்னதற்குக் காரணம், அது ஒரு பொதுவான அறிவுரை என்ற காரணத்தால், பொதுவாகச் சொன்னார்கள். குறிப்பிட்ட இன்ன குறை, இன்ன குற்றம், இன்ன தவறு, இன்ன முறைகேடு, என்று அவர்கள் இயம்பவில்லை. ஆனால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த கால ஆட்சியிலே நடைபெற்ற தவறுகள் ஏதும் நடைபெறாமல் கவனமாகப் பார்த்துக்கொண்ட ஒன்றே இந்த ஆட்சிக்கு உரிய பெரும் சிறப்பு என்பதை இன்றைக்கு இந்தியா முழுமையும் உள்ளவர்கள் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

13.05 மணி

நாங்கள் மக்களுக்கு அதிகம் செய்தோமா, இல்லையா என்பது கேள்விக்குரிய பிரச்சினையாக இருந்தாலும் கூட ஊழலின் ஊற்றுக் கண்கள் அத்தனையும் இன்றைக்கு அடைக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும், அதன்காரணமாக இந்த ஆட்சிக்கு வரவேண்டிய, அரசுக்கு வரவேண்டிய வருவாய் பெருகி இருக்கிறது என்பதையும் நீங்கள் தெளிவாக உணர்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய நண்பர் பாண்டியன் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய சொத்து எல்லாம் எங்கேயோ போய்விட்டது, என்ன செய்தீர்கள் என்று சொல்லிவிட்டு அவரே சொன்னார். நீதிமன்றம் இடையிலே குறுக்கிட்டு விடுகிறது என்றும் சொன்னார்கள். நீதிபதியோடு கூட முதலமைச்சரே சென்று பேசி, அந்தத் தடைகளை எல்லாம் நீக்கவேண்டும் என்றும் கூட ஆர்வத்தின் காரணமாக அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். உங்களுக்குத் தெரியும், இதே அவையிலே நான் சொல்லியிருக்கிறேன், 40 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு இடத்தை, ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்து, 'பல்லவா ஹோட்டல் கார்ப்பரேசன்' என்ற பெயரில் பழனி பெரியசாமி என்ற ஒரு நபருக்குத் தாரை வார்த்த செய்திகள் எல்லாம் அனைவருக்கும் தெரியும். அந்த 1 கோடி 75 லட்சம் ரூபாய் கூட விற்பனைக்காக சொல்லப்பட்ட தொகை கூட அரசுக்குக் கிடைக்கவில்லை. அதையும், அந்தக் கார்ப்பரேசனில் அந்த 1 கோடி 75

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

லட்சம் ரூபாயை அரசாங்கத்தின் பங்குத் தொகையாக வைத்துக் கொள் என்று கூறிவிட்டார்கள் என்பதையும் இந்த அரசு பொறுப் பேற்றவுடன் நடவடிக்கை எடுத்து அரசுக்குச் சொந்தமான 40 கோடி ரூபாய் நிலத்தை மீட்ட அரசு தமிழக அரசு என் பதையும் நீங்கள் எல்லாம் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே மாமல்லபுரத்தில் அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு ஹோட்டலை ஆதாயத்தோடு நடத்தி வந்தது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகம் மாமல்லபுரத்தில் ஒரு உணவு விடுதியை நல்ல லாபததோடு நடத்தி வந்து இருக்கிறது. அரசாங்கத்தி னுடைய நிறுவனத்தை ஜாயிண்ட் செக்டார் என்று கடந்த கால ஆட்சியிலே மாற்றினார்கள். யாரோடு ஜாயிண்ட் செக்டார் கோடம்பாக்கத்திலே உள்ள ஒருவர், மோகன் ராவ் தண்டமுடி என்ற ஒருவர், அவரை வெளிநாட்டுக் காரர் என்று அறிமுகப்படுத்தி, அவர்களை என். ஆர். ஐ. என்ற பட்டியலிலே கொண்டுவந்து 1 கோடி 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அந்த இடத்தை 56 லட்ச ரூபாய்க்கு மதிப்பீடு செய்து, அவர்களிடம் பொறுப்பைத் தந்தார்கள். இதுகுறித்து அக்கவுன்டன்ட்-ஜெனரலே தன்னுடைய கடுமை யான மறுப்பைத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து, அந்த ஹோட்டலையும் அரசு கைப்பற்றிய பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி.)

அதைப்போல, திருவிடந்தை கிராமத்தில்—1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலே ஆணை பிறப்பிக்கப்பட்டு, எம். ஜி. ஆர். அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று இருந்த நேரத்தில், திருவிடந்தை கிராமத்து நிலம், அதற்கு 1984-லே ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1985-ஆம் ஆண்டு அவர்கள் திரும்ப வந்து கையெழுத்துப் போட்டுச் செய்து, ஆலயத்திற்குச் சொந் தமான 299 ஏக்கர் நிலம், 300-க்கு ஒரு ஏக்கர் குறைவு, ஏறத்தாழ 300 ஏக்கர் நிலத்தை, 3 கோடி ரூபாய் மதிப் புள்ள நிலத்தை அதுவும் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை அதே மோகன்ராவ் தண்டமுடிக்குக் கொடுத்தார்கள். அந்த ரூபாயைப் பெற்றுக்கொண்டல்ல, சொற்ப விலைக்குத் தந்தார்கள். அதையும் இந்த அரசு கைப்பற்றிய வரலாறு உங்களுக்குத் தெரியும்.

அதே மாமல்லபுரம் சாலையிலே உள்ள முட்டுக்காடு 1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ஆம் தேதி, ஆணை எண். 585 -ன்படி, 50 ஏக்கர் அரசாங்க நிலம், 70 லட்சம் ரூபாய் மதிப்புடைய நிலம், மோகன்ராவ் தண்டமுடிக்குத் தரப்பட்டது, அதிகாரி பரிந்துரை செய்தது 6 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய். அதையும் கழக ஆட்சி கைப்பற்றியது அவர்களிடமிருந்து.

அடுத்து வள்ளுவர் கோட்டம், வள்ளுவர் கோட்டத்தையும் விடவில்லை. அதற்கு அருகே 83 கிரவுண்ட் நிலம், அங்கே நட்சத்திர ஹோட்டல் கட்டப்போவதாகச் சொல்லி: 3 கோடி ரூபாய் மதிப்புள்ள இடத்தை, $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் என்று மதிப்புப் போட்டு, அதே மோகன்ராவ் தண்டமுடிக்குக் கொடுக்க முயற்சித்ததையும் கழக அரசுதான் தடுத்து நிறுத்தியிருக்கிறது. இப்படி எங்கேயோ செல்ல இருந்த பணத்தையெல்லாம், அரசாங்க நிலத்தையெல்லாம் அரசுக்குத் திரும்பப் பெற்ற பெருமை நமக்குண்டு.

13-10 மணி

அது மாத்திரமல்ல. நான் முதலிலேயே குறிப்பிட்டேனே, சாராய சாம்ராஜ்யத்தை ஒழிப்போம் என்று சூளுரைத்து இந்த அவையில் நாம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, அதற்கு மாற்றாக நாம் செய்த பணிகள், செயல்கள் என்ன என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

1989-க்குப் பிறகு நடவடிக்கைகள் எடுத்து, அதற்குப் பிறகு நான் அறிவித்ததற்கிணங்க, ஐ. எம். எப்-எல். சில்லறைக் கடைகள் ஏலம் மற்றும் டெண்டர் முறையிலே கொடுக்கப்பட்டன. ஆயத் தீர்வைக்குப் பிறகு ப்ரூப் லிட்டர் ரூ. 25 என்று இருந்தது, ரூ. 55-ஆக உயர்த்தப்பட்டது. ஏற்கெனவே விதி விலக்கு அளிக்கப்பட்ட சாராவிக்கு Rectified spirit)-க்கு மறுபடியும் ஆயத் தீர்வை விதிக்கப்பட்டு, அதன்மூலமாக மாத்திரம் ரூ. 23 கோடி அரசுக்கு வருமானம் வந்தது. அனியோகத்திலே பல கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. ஐ. எம். எப். எல். மதுபானங்களை சில்லறைக் கடைகளில் விற்பதற்கு விலையும் நிர்ணயிக்கப்பட்டது. கண்டபடி விலை வைத்து விற்று ஏராளமாகக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த நிலையை மாற்றி விலையும் நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளால் இதற்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு இதே ஐ.எம்.எப். எல்-லிருந்து ரூ. 120 கோடி இந்த அரசுக்கு வந்ததற்குப் பதிலாக ரூ. 300 கோடி, அதாவது அதிகமாக ரூ. 180 கோடி வருமானத்தைப் பெருக்கிய அரசு இந்த அரசு.

கூட்டுத் துறையிலே இருந்த மதுபானத் தொழிற்சாலை '' சாபிள் '' என்ற ஒரு நிர்வாகம். அந்த நிர்வாகம் ஏற்கெனவே கூட்டுத்துறையிலே இருந்தது. அந்தக் கூட்டுத் துறையிலும்—நம்முடைய நண்பர் பாலசுப்பிரமணியம் இங்கே விவாதித்தாரே, அதே பெரிய குடும்பம்—இந்தக் கூட்டுத் துறையிலே இருந்தது. நான் ஒரேயொரு வித்தியாசத்தைச்

சொல்ல விரும்புகிறேன். இந்த ''சாபிள்'' ஐ-கூட்டுத்துறையிலிருந்து அரசாங்கமே எடுத்துக் கொண்டது. கடந்த ஆண்டு அதுவரையிலே தனியார் பொறுப்பிலே நிர்வாகம் நடந்த போது, ஏராளமான நஷ்டம் காட்டப்பட்டது. நஷ்டமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் நஷ்டக் கணக்கு காட்டப்பட்டது. . இப்போது அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 இலட்சம் லாபம். ஒரு வருடத்திலே ரூ. 4.8 கோடி லாபம் கிடைத்திருக்கிறது என்றால், இப்போது தனியாரோடு நாங்கள் உறவு வைத்துக் கொண்டு, அரசுக்கு வர வேண்டிய வருமானத்தை எங்கேயோ கொள்ளை போகச் செய்வதற்கு வழி வகுக்க நடை பாவாடை விரிக்க இந்த அரசு தயாராக இருக்க முடியுமா என்பதை பாலசுப்பிரமணியம் போன்ற பழைய பொதுவுடைமைக் கொள்கையிலே நாட்டம் உடையவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் 1984-ஆம் ஆண்டு தனியார் ஒருவருக்கு எம். பி. ப்ரூவரிஸ் என்ற ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அந்தத் தொழிற்சாலையை நிர்மாணிக்க சற்று காலமாயிற்று. நம்முடைய அரசு வந்த பிறகுதான் அந்தத் தொழிற்சாலையினுடைய கட்டிடம் பூர்த்தியாயிற்று. அதற்கிடையே இந்த அரசின் சார்பில் நம்முடைய கொள்கை இந்த மாமன்றத்தில் தெளிவாக விளக்கப்பட்டு விட்டது. எனவே இந்தக் கொள்கை அடிப்படையில் அந்தத் தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்காமல் இருந்த நிலையில், அரசாங்கமே அவர் களுக்கு அனுமதி தர மறுத்துவிட்டு, அதை அரசாங்கமே இப்போது எடுத்துக் கொண்டு விட்டது. அதற்குப் பிறகு 'டாஸ்கோ' என்கின்ற நிறுவனத்தை அமைத்து, அந்த டாஸ்கோ நிறுவனம்தான் இன்றைக்கு இந்த மலிவு விலை மது உற்பத்தியையும் செய்யப்போகிறது. தனியாருக்குத் தந்து அவர்கள் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுக்கவும், அரசாங்கத்திற்கு முறையாக வர வேண்டிய உரிய வருமானம் வருவதற்கும் நாம் இந்த ஏற்பாடுகளை, நம்முடைய வருமானம் முழுமையாக வரவேண்டும், அது சிந்தாமல், சிதறாமல் வரவேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

13-15 மணி.

இன்னும் ஒன்று, இந்த மது விலக்குச் சட்டத்தில், திருத்தப்பட்ட சட்டத்தில் 'கம்பவுண்டிங்' முறையைப் புகுத்தியபோது இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி, தங்களுடைய கசப்பு உணர்வு

களை எல்லாம் இங்கே வெளிப்படுத்தினார்கள். ஆனால் அதன் காரணமாகத் தேங்கிக் கிடந்த பல்லாயிரக்கணக்கான வழக்குகள் முடிக்கப்பட்டன. 1989 சூன் முதல் 1990 பிப்ரவரி வரையில், கம்பவுண்டிங் முறையில் தீர்க்கப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை 84,388. அதன் மூலம் கிடைத்த அப ராதத் தொகை ரூ. 3.58 கோடி. 1989-ஆம் ஆண்டு கம் பவுண்டிங் முறை மற்றும் கோர்ட்டிலே சுமார் 2 இலட்சம் வழக்குகள் தீர்க்கப்பட்டு, அதன்மூலம் கிடைத்த மொத்த அபராதத் தொகை ரூ 8.13 கோடி. மற்றும் கடந்த காலத் தவறுகள் எப்படித் திருத்தப்பட்டன என்பதற்கு இன்னொரு சான்று. பேருந்துகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையில், கடந்த கால அரசு நடந்து கொண்டவிதமே அதற்கு உதாரணமாகும். திரு. ஏகப்பன் என்ற ஒருவர், மதுரை முதல் குமுளி வரை யில் தன்க்கு வழித்தடம் வேண்டுமென்று மேல்முறையீடு செய்து கொண்டார். 'அப்பீல்' செய்து கொண்டார். அரசு அதை எதிர்த்தது. அவர் எஸ். டி. ஏ. டி. க்கு சென்றார். அங்கே அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்தது. அதை எதிர்த்து அரசு உயர்நீதி மன்றத்திலே மனுச் செய்தது. ஏகப்பனுக்கு அங்கேயும் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்தது. அ.இ.அ.தி.மு.க அரசு உச்சநீதிமன்றத்திற்கு 'அப்பீல்' செய்தது. ஏகப்பனுக்கு வழித்தடம் தரக்கூடாது, குமுளி முதல் மதுரை வரை என்று 'அப்பீல்' செய்தது உச்சநீதி மன்றத்திற்கு. உச்சநீதிமன்றத்தில் அரசுக்கு சாதகமாக, ஏகப்பனுக்கு எதிர்ப்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இங்கே தான் ஆச்சரியமான திருப்பம், இதுவரையிலும், உயர்நீதி மன்றம் வரையிலும் ஏகப்பனுக்கு சாதகமான தீர்ப்பு, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலே அரசு வழக்குத் தொடுத்தது. அங்கே அரசுக்கு சாதகமான தீர்ப்பு. ஏகப்பனுக்கு எதிராகத் தீர்ப்பு. அந்த அரசாங்கம், அந்தத் தீர்ப்பின்படி நடக்கா மல், தனக்குச் சாதகமாகக் கிடைத்த தீர்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளாமல், ஏகப்பனுக்கு ஆதரவாக அந்த வழித் தடத்தைக் கொடுத்தது. இது கடந்த அரசினுடைய 'பஸ்' தேசியமயக் கொள்கையினுடைய புனிதமான ஒரு கட்டம். 1987-ஆம் ஆண்டு, தேசியமயமாக்கப்பட்ட கொள்கைக்கே விரோதமாக. இந்த அவையிலே ஒரு மசோதா வந்தது, அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், அந்த மசோதாவை எதிர்த்து வாக்களித்து வெளிநடப்புச் செய்ததெல்லாம் வரலா றாகும். அந்த 1987-ஆம் ஆண்டு வந்த அந்த மசோதா, என்ன உள்ளடக்கத்தைக் கொண்டதென்றால், தேசியமய மாக்கப்பட்ட அல்லது ஆக்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட பேருந்து வழித்தடங்கள் உள்பட, எல்லா வழித்தடங்களையும் தனியார் உரிமை கோரினால், தடையின்றிக் கொடுக்க வேண் டும். இப்படி இந்த ஒரு மசோதா அன்றைக்கு அறிமுகப்

படுத்தப்பட்டது. ஆனால் நல்லவேளையாக இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அப்படி இங்கே நிறைவேற்றப்பட்ட மசோதா, டெல்லிக்குச் சென்று, குடியரசுத் தலைவருடைய கையெழுத்தையும் ஒப்புதலையும் பெற்று இங்கே வந்தபோது, அதை நடைமுறைப்படுத்தாமலேயே தூக்கி வைத்துவிட்டு, நாம் வேறொரு சட்டமுன்வடிவைக் கொண்டுவருவதற்காக ஆயத்தங்களை செய்து, அந்த தேசிய மயக் கொள்கையை, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இந்த மாமன்றத்திலே சட்டம் வருவதற்கும் இருக்கின்றது. அதைப்போலவே, நம்முடைய ஆளும் கட்சியினுடைய, அதைப் போலவே ஆளுங்கட்சியைச் சேர்ந்த தோழமைக் கட்சிகளினுடைய, ஏன் எதிர்க்கட்சியிலே கூட இருக்கின்றவர்களுடைய எண்ணத்தின் பிரதிபலிப்பாக பினாமி நிலங்களை ஒழிப்பதற்கான சட்டமுன் வடிவும் இந்த மாமன்றத்திலே இந்தக் கூட்டத்தொடரில் வரவிருக்கிறது.

மற்றொன்று, 'லோக் பால்', முதல் அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், இவர்களைப்பற்றி புகார்கள் வருமேயானால் அந்தப் புகார்களை விசாரிப்பதற்காக ஒரு 'கமிஷன்' "Tamil Nadu Public Functionaries (Enquiry into allegations of Corruption) Bill" என்ற ஒரு மசோதா இங்கே வரவிருக்கின்றது. "Chief Minister, Ministers Mayor and Deputy Mayor, Municipal Chairman, Vice-Chairman, Chairman of any Committee of a Municipal Council and Municipal Corporation, Chairman of Panchayat Union and Vice Chairman, a person other than a Government Servant who is or has been the Chairman of any Public Sector Corporation or any Government Company' இவர்கள் மேலெல்லாம் புகார்கள் வருமேயானால், விசாரித்து அறிவிப்பதற்காக பாராளுமன்றத்திலே வருகின்ற 'லோக் பால்' மசோதாவைப் போன்று, அந்த அடிப்படையிலே இங்கே ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவருவதற்கும்' ஏற்பாடாகியிருக்கிறது. அதுவும் இந்தக் கூட்டத்தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில முக்கியமான அறிவிப்புகளை, இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு விவாதிக்கப்பட்டு நிறைவேறுகின்ற நேரத்தில் வெளியிட விரும்புகின்றேன். ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஊதிய விகிதங்கள் மத்திய அரசுக்கு இணையாக ஏற்கெனவே 450 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. பல ஊதிய விகிதங்கள் மத்திய

அலுவலர்கள் ஊதிய விகிதங்களைவிட அதிகமாக வழங்கப்பட்டுள்ளன. எனினும் இந்த ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்யும்போது ஒருசில முக்கியப் பொறுப்பிலே உள்ளவர்கள் ஊதிய விகிதங்களில் சில முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அதில் பெரும்பான்மையான அப்படிப்பட்ட முரண்பாடுகள் நீக்கப்பட்ட போதிலும் ஒரு சில முரண்பாடுகள் இருப்பதைக் களையும் பொருட்டு சில மாறுதல்களை இங்கே அறிவிக்கின்றேன்.

13-20 மணி.

வேளாண்மை அலுவலர்கள் தங்களுடைய ஊதிய விகிதத்தை 1820—3200 என்பதிலேயிருந்து 2,000—3,500 ஆக மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசின் முன் வைத்துள்ளார்கள். மத்திய அரசின் ஊதிய விகிதங்களை செயல்படுத்தியுள்ள மாநிலமான மகாராஷ்டிரத்தில் இவர்களுடைய ஊதிய விகிதம் ரூ. 1,640—2,900 (குறுக்கீடு) என்று தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் வேளாண்மை அலுவலர்கள் ஏற்கெனவே உதவி கால்நடை மருத்துவர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் ஆகியோருக்கு இணையாக ஊதிய விகிதம் பெற்று வந்ததால் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்று கருதப்பட்டது. மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் வழங்கும்போது ஒவ்வொரு குழுவினருக்கும் முன்பு இருந்த நிலையை ஒட்டி ஊதிய விகிதம் வழங்க இயலாது. இருப்பினும் விவசாய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற நோக்கம் இந்த அரசுக்கு உள்ளதால் வேளாண்மை அலுவலர் ஊதிய விகிதம் ரூ. 2,000—விருந்து 3,500 என்று நிர்ணயிக்க முடிவு எடுக்கப்படுகிறது. இதனால் 2,500 வேளாண்மை அலுவலர்கள் பயனடைவார்கள்.

ஏ. ஈ.—உதவிப் பொறியாளர்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஊதிய விகிதம் ரூபாய் 2,000-விருந்து 3,500 ஆக இருக்கிறது. இதற்கு இணையாக மாநில அரசிலே பணியாற்றக்கூடிய உதவிப் பொறியாளர்களுக்கு பட்டப் படிப்பு முடித்து பொறியாளர்கள்—மத்திய அரசு வழங்கிய ஊதிய விகிதம் ரூ. 2,000-விருந்து 3,500 வழங்கப் பட்டுள்ள இளநிலைப் பொறியாளர்கள்— டிப்ளமா படித்த பொறியாளர்கள், பட்டயப் படிப்பு படித்த பொறியாளர்கள்— மத்திய அரசு ரூ. 1,400-விருந்து 2,600 என்று

ஊதிய விகிதத்தை வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் மாநில அரசும் இளநிலைப் பொறியாளர்களுக்கு 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ரூ. 1400—2,600 என்று ஊதிய விகிதத்தை நிர்ணயித்தது. இருப்பினும் இளநிலைப் பொறியாளர்கள், அவர்களுக்கும் உதவிப் பொறியாளர்களுக்கும் இடையே ஊதிய விகிதத்தில் பெருத்த வேறுபாடு உள்ளது என்று கூறி—மத்திய அரசு கொடுத்ததைக் கொடுத்தோம் : இருந்தாலும் கூட ஏற்கெனவே வாங்கியதிலே உள்ள விகிதாச்சாரத்திலே வேறுபாடு வந்துவிட்டது என்று அவர்கள் கூறி—அவர்களுடைய ஊதிய விகிதத்தைத் தக்க முறையிலே திருத்தியமைக்க வேண்டும் என்று அரசின் முன் பலமுறை கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கோரிக்கையை மனதிலே கொண்டும் 5-வது ஊதியக் குழுவிற்கு முன்பு அவர்களுக்குள் இருந்த ஊதிய விகிதங்களின் நிலையைக் கருத்தில் கொண்டும் இளநிலைப் பொறியாளர்களுடைய ஊதிய விகிதத்தை ரூ. 1,640-லிருந்து 2,900 என்று திருத்தியமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இதன் மூலம் 3,100 இளநிலைப் பொறியாளர்கள் பயனடைவார்கள். வேறு துறைகளிலும் இதே ஊதிய நிலையிலே உள்ள பட்டயப் படிப்பு, டிப்ளமா கல்வித் தகுதி உடைய சுமார் 800 அலுவலர்கள் இருக்கிறார்கள். அதாவது என்ஜினியரிங் சூப்பர்வைசர், ஃபோர்மென் டிப்ளமா, என்ஜினியரிங் இன்ஸ்பெக்டர் இன் ஸ்கூல் எஜுகேஷன் டிபார்ட்மென்ட் என்று 800 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த ஊதிய உயர்வு பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வூதியக்காரர்களுடைய அகவிலைப்படி, கழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகு தான் 9—8—1989 அன்று ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக ஓய்வூதியங்களை 1—6—1988 முதல் முன் தேதியிட்டு வழங்க ஆணையிடப்பட்டது. அவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மத்திய அரசு ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 1—1—1990-லிருந்து அகவிலைப் படியை உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது. இதனை முழுமையாகப் பின்பற்றி தமிழக அரசு ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 1—1—1990-லிருந்து அகவிலைப்படியை உயர்த்த முடிவு எடுத்துள்ளது. இதனால் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச உயர்வு 15 ரூபாயாகவும், அதிகபட்ச உயர்வு 115 ரூபாயாகவும் இருக்கும். அரசுக்கு இதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 9 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 2 இலட்சம் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியில் இறப்பார் குடும்பப் பாதுகாப்பு நிதி, 1974-ஆம் ஆண்டு கழக அரசு, அரசு அலுவலர் நலனைக் கருதி குடும்ப நல நிதித் திட்டத்தை அறிவித்தது. மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் பிடித்தம் செய்து அரசு அலுவலர்கள் பணியிலே இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் குடும்ப நல நிதியாக வழங்க ஏற்பாடு செய்தது.

13-25 மணி.

பின்னர் அ. தி. மு. க. ஆட்சியில் அரசு அலுவலரிடம் 3 ரூபாய் வீதம் பிடித்தம் செய்து, அரசு அலுவலர் இறப்பார்களானால், 20,000 ரூபாய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு ரூபாய் பிடித்தம் செய்து 10,000 ரூபாய். 3 ரூபாய் பிடித்தம் செய்து 20,000 ரூபாய். மீண்டும், கழக அரசு கடந்த ஆண்டு ஏற்பட்ட பிறகு, இப்போது 3 ரூபாய், என்பதை 5 ரூபாயாக உயர்த்தி—6-ஆக உயர்த்தாமல்—5 ரூபாயாக உயர்த்தி, அரசு அலுவலர் இறந்தால் 40,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதை உறுப்பினர்கள் அறிவார்கள். இதனால், அரசிற்கு, ஆண்டொன்றிற்கு 3.08 கோடி ரூபாய் அதிகச் செலவு வருவாய்த் துறையில் பணியாற்றக்கூடிய கிராம ஊழியர்களுக்கு, அவர்கள் பணிக் காலத்திலே இறந்தால் அவர்களது குடும்பத்திற்கு குடும்ப நல நிதியாக இப்போது 20,000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதற்காக அவர்களிடம் 3 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. 1—7—1989-லிருந்து அரசு அலுவலர்களுக்கு குடும்ப நல நிதித் தொகை ரூ.20,000 லிருந்து 40,000 ஆக உயர்த்தி வழங்கியது போல, கிராம ஊழியர்களுக்கும் அவர்கள் பகுதிநேர ஊழியர்களாக இருந்தாலும்கூட, இந்தத் தொகையை ரூ.20,000-லிருந்து 40,000-ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. மாதந்தோறும் அவர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் 3 ரூபாய், 5 ரூபாயாக ஆகும். இதனால் 31,600 கிராம ஊழியர்கள். வெட்டியான்கள், தலையாரிகள் போன்ற கிராம ஊழியர்கள், பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையில் இந்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டு, அக்கறை காட்டிப் பணியாற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1988-89-ஆம் ஆண்டில் மழை பொய்த்த காரணத்தால் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 45 கோடிக்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டது. இப்போது குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க விரைவான நடவடிக்கை எடுக்க மேலும் ஒரு 13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, கிராமப்புறங்களிலே 5 கோடி ரூபாயும்— புதிய ஆழ்துளைத் கிணறுகள்

அமைக்கவும், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளுக்குப் பதிலாக புதிய கிணறுகளை அங்கே உருவாக்கவும் 5 கோடி ரூபாய், கிராமப் பகுதிக்கும் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதியில் குடிதண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்ற 3 கோடி ரூபாயும், சென்னை மாநகராட்சிக்கு 5 கோடி ரூபாயும் என்று 13 கோடி ரூபாய் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்படுகிறது.

நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே நான் தாக்கல் செய்தபோதும், அதன் மீதான பொது விவாதத்திற்குப் பதிலளித்த போதும் விற்பனை வரி சம்பந்தமாக பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இன்றைக்கும் அந்த வரிகளைப் பற்றி நம்முடைய நண்பர் லத்தீப் போன்றவர்கள் எல்லாம் இங்கே பேசியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மனதில் கொண்டு மேலும் சில அறிவிப்புகளைச் செய்ய விரும்புகின்றேன்.

பலமுனை வரியை ஒரு முனை வரியாக மாற்றியதற்கு வணிகச் சங்கங்களும் வாங்குவோரும் தங்கள் வரவேற்பைத் தெரிவித்துள்ளார்கள். இது ஒரு அடிப்படை மாற்றமாக இருப்பதால் இதற்கு நல்ல வரவேற்பும், பாராட்டும் இருப்பது இயற்கைதான். பலமுனை வரி முறையில் ஒவ்வொரு கட்டத்திலும் 5 சதவிகிதம் வரி செலுத்துவதோடு, மேல் வரி மற்றும் கூடுதல் வரி என்று பல கட்டங்களில் வரி செலுத்தவேண்டிய நிலை இருந்தது. இதை அகற்றி ஒரு முனை வரியாக 8 சதவிகிதம் என்று ஆக்கிய காரணத்தால் அதிகச் சலுகை வணிகர்களுக்குக் கிடைக்கும். மேலும் பல பொருட்களின் விலையைக் குறைப்பதற்காக ஏற்கெனவே அளித்த சலுகைகளைத் தவிர, இப்போது தரப்படுகின்ற சலுகைகைளை உறுப்பினர்கள் முன்னால் வைக்க விரும்புகின்றேன்.

தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் சவ்வரிசி வியாபாரத்திற்கு பலமுனை வரி ஏற்கெனவே 5 சதவிகிதம் என்று விதிக்கப்பட்டிருந்தது. அந்த மாவட்டங்களிலே இயங்கும் சவ்வரிசி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதிலே சலுகை வரியாக 5 சதவிகிதம் பலமுனை வரிக்குப் பதிலாக, 4 சதவிகித பலமுனை வரி ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்தது. பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியபோது, 8 சதவிகிதம் என்ற அளவிற்கு நிர்ணயிப்பதற்குப் பதிலாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு 4 சதவிகிதம் என்றும் இதர வணிகர்களுக்கு 8 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக 5 சதவிகிதம் என்றும் குறைத்து அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், இதர வணிகர்கள் தங்களுக்கும் 4 சதவிகிதம் அளவுக்கு மட்டுமே இந்த வரியை விதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று, இப்போது அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 5 சதவிகிதம் ஒரு முனை

13-30 மணி.

வரி என்பது 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது. அதைப் போலவே, கூட்டுறவுச் சங்கங்களும் நல்லமுறையில் லாபகரமாக இயங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்களுக்கு விதிக்கப்பட்ட 4 சதவீத ஒரு முனை வரி மேலும் குறைக்கப்பட்டு 2 சதவீதமாக இனிமேல் வசூலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகள் நலனை முன்னிட்டு டிராக்டர்களுக்குத் தேவைப்படும் உதிரிப் பாகங்கள் மீதான ஏற்கனவே விதிக்கப்பட்டு இருந்த 9 சதவீத வரி, 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விவசாயிகளின் மின் கலப்பைகளுக்கு, 'பவர் டில்லர்' உதிரிப் பாகங்கள் மீதுள்ள விற்பனை வரியான 10 சதவீதம் என்பது இனிமேல் 4 சதவீதமாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிளாஸ்டிக் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பல தொழில்கள் நடைபெறுகின்றன என்ற கோரிக்கையோடு நம்முடைய திரு. சொக்கர் அவர்கள் ஒரு பெரிய குழுவை, அழைத்து வந்து என்னைச் சந்தித்தார்கள். அதைப்பற்றி ஆலோசித்து அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இனிமேல் அனைத்து பிளாஸ்டிக் மூலப்பொருட்களுக்கு 8 சதவீத ஒரு முனை வரி விதிப்பு என்பதற்குப் பதிலாக 3 சதவீத வரி விதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது பிளாஸ்டிக் மூலப்பொருட்களுக்கு.

பிளாஸ்டிக் பொருட்களுக்கு வரியைக் குறைக்கவேண்டும் என்ற கோரிக்கையும் எழுப்பப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிளாஸ்டிக் பொருட்கள் மீதான வரி விகிதம் கர்நாடகத்தில் 10 சதவீதம, கேரளத்தில் 8 சதவீதம், ஆந்திராவிலே 6 சதவீதம், தமிழ்நாட்டில் 8 சதவீதம் என்று இருக்கிறது. எனவே, இதையும் குறைத்து ஆந்திராவில் இருப்பதைப் போல் 6 சதவீதமாக ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் எண்ணத்தோடு மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருட்களை அடைத்து விற்கக்கூடிய டின்கள், 'டின் கன்டெயினர்' இதன் மீதான வரியை 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே காகித அட்டைப் பெட்டிகள் (cardboard box cartons) மீதான வரியும் 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அச்சடிக்கப்பட்ட பொருட்கள் மீதான வரி (printed materials) பலமுனை வரி முறையில் 5 சதவீதமாக இருந்தது, ஒரு முனை வரி முறையாக இதனை மாற்றும் போது வரி 8 சதவீதமாக மாறி இருக்கிறது. என்றாலும், வணிகர் மற்றும் மக்கள் நலன் கருதி இனி இந்த வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பதனிடப்பட்ட தோல்கள் மீதான விற்பனை வரி ஒரு விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. விற்பனை வரி முறையை மாற்றவேண்டும் என்றும், சிறிய வணிகர்களுக்கும், தோல் பதனிடும் நிறுவனங்களுக்கும் வரி குறைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வந்தது மாத்திரம் அல்ல. திரு. லத்தீப் அவர்கள் இங்கே பெரும் குரலே கொடுத்து, அது குறித்து விவாதித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பதனிடப்பட்ட தோல் மீது 2 சதவீதம், பதனிடப்படாத தோல் மீது 2 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலே இதற்கு வரி 4 சதவீதம் ஆகும். அதாவது பதனிடப்படாத நிலையில் வரி செலுத்தியிருந்தால் பதனிடப்பட்ட நிலையில் வரி செலுத்தத் தேவையில்லை என்று நிலையில் அங்கே 4 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் வரி விகிதங்கள் குறைவாக இருப்பதால், வரி விதிக்கப்படும் முறையை மாற்றாமல் சிறிய விற்பனையாளர்களுக்கு லத்தீப் அவருடைய பேச்சிலே திரும்பத் திரும்பச் சொன்னது, சிறிய விற்பனையாளர்கள் பற்றிதான் சொன்னார். எனவே அதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு, 10 லட்சம் ரூபாய் வரை மொத்த விற்பனை உள்ள பதனிடப்பட்ட தோல் வணிகர்களுக்கு முன்னர் இருந்ததைப் போல ஒரு சதவீத வரியும், மற்றவர்களுக்கு 2 சதவீத வரியும் இனி விதிக்கப்படும், பதனிடப்படாத தோலுக்கு மாறுதல் இல்லை. முன்பும் 2 சதவீதம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிழற்படக் கருவிகள், படச்சுருள், நிழற்படக் காகிதங்கள் ஆகியவற்றின் மீதான வரி விகிதம் பிற மாநிலங்களை விட நம் மாநிலத்தில் அதிகம் என வணிகக் குழுமங்கள் முறையிட்டுள்ளன. அவற்றின் மீது தற்போதுள்ள வரி 15 சதவீதம் ஆகும். ஆந்திராவில் நிழற்படக் கருவிகள், காகிதங்கள் மீது 10 சத வீத வரி. படச்சுருள் மீது 13 சதவீதம்; கர்நாடகத்தில் நிழற்படக் கருவிகள் மீது 8 சதவீதம், படச்சுருள், காகிதங்கள் இவற்றின் மீது 10 சதவீதம் வரி. தமிழ்நாட்டிலும் கர்நாடகத்தைப் போலவே நிழற்படக் கருவிகள் மீது 8 சதவீதம், படச்சுருள் நிழற்படக் காகிதங்கள் ஆகியவற்றின் மீது 10 சதவீத வரியாகக் குறைத்து விதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

